REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



# படைகள் தயார்!

மிக விரைவில் சுடர் ஒளி நாளிதழ் வருகிறது

# துரையப்பா ஸ்ரேடிய புதைகுழி மீண்டும் தோண்ட இப்போது வழி

## உண்மை அம்பலமாகுமா? நீதி நிலைக்குமா?

யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக் கையான மனித சடலங்கள் ஒன்றாகப் புதைக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி என நம்பப்படும் யாழ். துரையப்பா ஸ்ரேடியப் புதை குழியை மீண்டும் தோண்டுவதற்கு முன் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் இரண்டு மனித சடலங்களுக்குரிய எச்சங்கள் புதைகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதை அடுத்து அந்தப் புதைகுழியில் மேலும் சடலங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

அதனால் அந்தப் புதைகுழி மீண்டும் தோண்டப்பட்டது. ஆனால் அங்கு மேலும் சடலங்கள் இருக்க வாய்ப்பில்லை என்று சட்ட வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியதை அடுத்து குழி தோண்டும் பணி நிறுத்தப்பட்டது.

இந்தப் புதை குழியைத் தோண்டும் பணியைப் பார்வையிட யாழ்ப்பாணம் சென்ற காலி சட்ட வைத்திய அதிகாரி பி.ஆர். றுவன்புர, பதில் சட்ட வைத்திய அதிகாரி பெர்னாண்டோ மற்றும் தயானந்த சமரவீர ஆகியோர் யாழ் நீதிவான் இ.த. விக்கினராஜாவுடன் துரையப்பா ஸ்ரேடியப் பகுதிக்குச் சென்று அங்கு முன்னர் புதைகுழி தோண்டப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர்.

அங்குள்ள புதைகுழியை மீண்டும் தோண்டினால் அப்பணியை மேற்பார்வையிடுவதில் தாங்கள் உதவமுடியும் என்று காலி சட்டமருத்துவத்துறை அதிகாரி யாழ். நீதிவானிடம் தெரிவித்திருக்கிறார். இதனையடுத்தே துரையப்பா ஸ்ரேடியப் புதை குழியை மீண்டும் தோண்டுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் மலசலகூடக் குழிகளைப் புனரமைப்பதற்காக அகழ்வு வேலைகளை மேற்கொண்ட சமயம் அங்கு பாரிய மனிதப் புதைகுழி இருப்பது பற்றிய தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.

தரையில் சுமார் இரண்டு மூன்று அடி ஆழத்தில் பல படைகளில் மனித எலும்புகள், எச்சங்கள் வெளிவரத் தொடங்கின. இதனையடுத்து மலசலகூடக் குழியைத் தோண்டும் பணி நிறுத்தபட்டது.

பின்னர் அப்போதைய யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் புதைகுழி தோண்டப்பட்டபோது அங்கிருந்து பல மனித சடலங்களுக்குரிய எலும்புகளும் எச்சங்களும் வெளிவரத் தொடங்கின.

இதனால் இந்தப் புதைகுழி விவகாரம் பூதாகரமாக உருவெடுத்தது.

அங்கு புதை குழியைத் தோண்டும் பணி இரண்டு மூன்று கட்டங்களாக நடைபெற்றது. ஆனால் புதைகுழி எதிர்பாராத அளவு பெருத்துச் சென்றதால் பல நூற்றுக்கணக்கானோரின் சடலங்கள் அதற்குள் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது விடயத்தில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களைக் கொழும்பில் இருந்து அழைத்து வந்து அவர்கள் முன்னிலையில் குழியைத் தோண்டுவதே உசிதமானது என நீதிவான் கருதியதால்— தோண்டும் பணியை நீதிவான் ஒரு மாத




காலத்துக்கு மே 14 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். மே 14 ஆம் திகதி (1999) புதைகுழி தோண்டப்படும் போது நிபுணத்துவ சேவையை வழங்குவதற்காக காலி கரப்பிட்டிய வைத்திய சாலையைச் சேர்ந்த சட்ட வைத்திய நிபுணர் டாக்டர் சந்திர சிறி நெரியல்ல, பேராதனைப் பல்கலைக்கழக மண்ணியல் நிபுணர் கே. நந்தசேன, மற்றும் மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆனந்த மென்டிஸ் ஆகியோரை புதை குழி அமைந்துள்ள பகுதிக்கு வருகை தருமாறு அழைக்கும்படி நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டிருந்தார்.

ஆரம்பக் கட்ட தோண்டுதலின்போது மீட்கப்பட்ட சுமார் 25 பேருடையவை என்று கருதப்பட்ட எலும்புகளும், எச்சங்களும் ஆய்வுக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவ்வளவு தான் அத்தோடு ஸ்ரேடியப் புதை குழி அத்தியாயம் மூடப்பட்டு விட்டது.

தென்னிலங்கையிலிருந்து நிபுணர்கள் யாழ்ப்பாணம் செல்வதில் காணப்பட்ட தாமதங்கள், இழுத்தடிப்பு காரணமாக புதைகுழி தோண்டும் பணியை மீண்டும் ஆரம்பிப்பது தடைப்பட்டது. இறுதியில் அது மறுக்கப்பட்ட விவகாரம் ஆகிவிட்டது.

துரையப்பா ஸ்ரேடியம் புதை குழி சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.

யாழ் கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள துரையப்பா ஸ்ரேடியப் பகுதி முதலாம் ஈழ யுத்தம், இரண்டாம் ஈழயுத்தம் ஆகியவற்றின் போது பெரும் போர் நடந்த இடமாகும். இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுவோரை விசாரிக்கவும் தடுத்து வைக்கவும் இந்த ஸ்ரேடியத்துக்கு அருகில் உள்ள கோட்டை முகாமையே பயன்படுத்தி வந்தனர். பின்னர் ஸ்ரீலங்கா படைகளும் யாழ். கோட்டை முகாமையே தடுப்பு முகாமாகப் பயன்படுத்தி வந்தன.

1980 களின் பிற்பகுதியில் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட யாழ் பொலிஸ் நிலையமும் இப்பகுதியிலேயே அமைந்திருந்தது. கோட்டை முகாமும், பொலிஸ் நிலையமும் விசாரணை மற்றும் தடுப்பு முகாம்களாக இருந்த காலத்தில் காணாமற்போனவர்களின் எச்சங்களே ஸ்ரேடியப் பகுதியில் மீட்கப்பட்டிருக்கின்றன என்றும் பொதுவாக நம்பப் படுகிறது. எனினும் புதைகுழி முழுவதுமாகத் தோண்டப்பட்டு உரிய ஆய்வுகள் சோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே உண்மை தெரியவரும். காணாமற்போன குடாநாட்டு இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்ட செம்மணி புதை குழி விவகாரத்துக்கு நேர்ந்த கதியைப் பார்க்கும் போது துரையப்பா ஸ்ரேடியப் புதை குழி தோண்டப்பட்டு உண்மை அம்பல மாக்கப்பட்டு — நீதி நிலைநாட்டப்படுமோ என்பதில் நம்பிக்கை கொள்ள முடியாதவர்களாக யாழ் மக்கள் உள்ளனர்.

—வலிகாமத்தான்




### பாஸ்போர்ட் விநியோகிப்பாரா

புதிதாக தேசிய அடையாள அட்டை பெறுவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை முட்டையில் மயிர் பிடுங்குவது போல இருக்கிறது.

கிராம மட்டத்தில் இவற்றை விநியோகிக்கும் பெரும்பாலான கிராம சேவகர்கள் பல இழுத்தடிப்புக்களைச் செய்து பணம் சுரண்டுவது பகிரங்க ரகசியம்.

இதனை அறிந்திருந்த ஒரு தமிழ் அமைச்சர் கிராம சேவகர் ஊடாக அடையாள அட்டை விநியோகம் மேற்கொள்ளப்படுவதை விரும்பவில்லையாம். இதனால் புதிய ஆலோசனை ஒன்றை அவர் விடுத்துள்ளாராம்.

அதாவது யாழ்ப்பாணத்தில் அடையாள அட்டை விநியோகத்தை இனிமேல் பிரதேச சபைகளே செய்ய வேண்டும் என்பது தான் அந்த ஆலோசனையாம்.

அந்தத் தலைவரின் கட்டுப்பாட்டில் பல பிரதேச சபைகள் இருப்பதால் இரண்டு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

பிரதேச சபைத் தலைவர்கள் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள். அடையாள அட்டை விநியோகத்தை இவர்கள் மேற்கொண்டால் தற்போதுள்ளதை விட மோசமான நிலையே ஏற்படும் என்று இந்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர். தமது எதிர்ப்பை இவர்கள் அவசர கடிதம் மூலமாக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கும் அறிவித்திருக்கிறார்கள்.

அரச பதவி நியமனங்களை அரச அதிகாரிகள் ஊடாக வழங்காமல் கட்சிக் காரியாலயத்தில் கட்சித் தொண்டர்கள் மூலமாக வழங்கிய இந்த தமிழ் அமைச்சர் இப்போது அடையாள அட்டைகளையும் பிரதேச சபைகள் ஊடாக விநியோகிக்க முற்படுவது எதிர்ப்பைக் கிளப்பி வருகிறதாம்.

இதனை உரியவர்கள் இப்போதே தடுத்து நிறுத்தா விட்டால் எதிர்காலத்தில் பாஸ்போர்ட் விநியோகத்தையும் இவர்களே செய்து முடிப்பார்களோ தெரியாது.

### வடக்கு கிழக்கில் அமெரிக்க படைகள்?

அதிகார அம்மணியின் தலைமையில் ஆளும் தரப்பு அதிகார மன்றின் உறுப்பினர்கள் ஒன்று கூடி ஆராயும் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பல விடயங்களை அவர்கள் அலசிக் கொண்டிருந்த போது புலிகள் பிரச்சினை பற்றிய விடயமும் வந்தது.

ஆளும் தரப்பின் ஜோக்கர் என்று கௌரவப் பட்டம் பெற்று விட்ட அதிகார மன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்த யோசனை கூடியிருந்த அனைவரையும் 'கொல்' என்று சிரிக்க வைத்ததாம். இந்த அதிகார மன்ற உறுப்பினர் பச்சைக் கட்சியில் இருந்து தாவி வந்தவர். அதிகார அம்மணியை புகழ்ந்து பேசுவதிலும், தாஜா பண்ணுவதிலும் கில்லாடி.

''மெடம்! எமது எதிரியை (புலியை) கூண்டோடு அழிக்க இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.'' அந்த ஆளும் தரப்பு ஜோக்கர் சீரியஸாகத்தான் பேசினார்.

ஆனால் ஏனையவர்கள் அப்போதே சிரித்து விட்டனர்.

ஆனால் ஜோக்கர் இதனைக் கண்டு கொள்ளவில்லையாம். அவர் தொடர்ந்து பேசினார்.

''உலகளாவிய அளவில் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிராக போரிடப் போகிறது. இந்த சந்தர்ப்பத்தை நாமும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு புலிகளை ஒழிக்க அமெரிக்காவின் உதவியைக் கோர இதுதான் சிறந்த சந்தர்ப்பம். அமெரிக்க படைகளுக்கு இலங்கையில் இடம் கொடுப்போம். அமெரிக்கப் படைகளை இங்கு வரவழைத்து வடக்கு கிழக்கை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் புலிகளை ஒழித்து யுத்தத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்து விடலாம்.''

ஜோக்கர் தொடர்ந்து பேசிக் கொண்டு போனாராம். கூடியிருந்தோரில் சிலர் தலையில் அடித்துக் கொண்டனர். வேறு சிலர் எக்காளமிட்டு சிரித்தனர். பாவம் அந்த ஜோக்கர்! கடைசியில் அதிகார அம்மணியும் இலேசாக புன்னகைத்து விட்டு வேறு விடயத்துக்கு தாவி விட்டார்.

இந்தக் கதை ஆளும் தரப்பு வைபவங்களில் இப்போதும் சிலாகித்துப் பேசப்படுகிற தாம்.

### என் கேள்விக்கென்ன பதில்?

இது அதிகார அம்மணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்ட ஓர் ஒப்பாரி. அமைச்சராக இருந்த ஒரு அம்மணி, அதிகார அம்மணியிடம் தனக்கு அமைச்சர் பதவி தராததையிட்டு அந்தக் கூட்டத்தில் பகிரங்கமாகவே குறைப்பட்டுக் கொண்டாராம்.

தான் கட்சிக்குச் செய்த வேலைகளை அவர் பட்டியலிட்டுப் பேசினாராம். தனது வீட்டுக்கு குண்டர்களினால் குண்டு வீசப்பட்ட சம்பவத்தையும் விவரித்தாராம்.

''கேட்காத நிலையில் பதவி தந்தீர்கள். இப்போது எனது மாவட்டத்தையே நிராகரித்து விட்டீர்கள். எனக்கு பதவி தந்திருக்க முடியும்'' என்று அந்த அம்மணி கூறினாராம்.

இவரது பேச்சை தவிர்க்க அதிகார அம்மணி ''நாம் வேறு விடயங்களைப் பற்றி பேசலாமே'' என்று வேறு ஒரு உறுப்பினரைப் பார்த்து கேட்டு விடயத்தை திசை திருப்பி விட்டாராம்.

வேறு விடயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்த போது இடையில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ''எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே'' என்று அதிகார அம்மணியைப் பார்த்து அவர் கேட்டாராம்.

அப்போதும் அதிகார அம்மணி அவரது குரலுக்கு மதிப்பு அளிக்கவில்லையாம். அந்த முன்னாள் மந்திரி அம்மை இப்போது உள்ளூரக் கறுவிக் கொண்டிருக்கிறாராம்.

### மின்வெட்டு நேரம்

மின் வெட்டு நேரம் இப்போது நாளொன்றில் மூன்று மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது.

நீரேந்துப் பகுதிகளில் கணிசமான அளவு மழை பெய்திருப்பதாலேயே மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற மின்சார சபை கூறுகிறது.

ஆனால் மின்சாரப் பகுதி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முயற்சிதான் மின்வெட்டு நேரம் குறைக்கப் பட்டதற்கு முக்கிய காரணம் என்று பேசிக்கொள்ளப்படுகிறது.

சபை தனது தவறுகளை மறைக்கவும் இயலாமைக்கு திரை போடவுமே நீரில்லை என்று காரணம் காட்டி பாரிய மின்வெட்டை அமுலுக்கு கொண்டு வந்தது. சபை சரியாகச் செயற்பட்டு, இருந்த நீரை வீண்போக விடாமல் சிக்கனமாகப் பயன்படுத்தி இருந்தால் மின்வெட்டுக்கு அவசியம் ஏற்பட்டிருக்காதாம்.

# இராணுவ கட்டளை அமைப்பில் விரைவில் பாரிய மாற்றங்கள்

## தளுவத்தையின் பதவி யாருக்கு?

இலங்கை படைத்துறையின் பிரதான பங்காளியான இராணுவத்தின் உயர் கட்டளை அமைப்பில் பாரிய மாற்றங்கள் எதிர்வரும் வாரங்களில் ஏற்படவுள்ளன.

இலங்கை இராணுவத்தின் 14 ஆவது இராணுவத் தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற பின்னர் கூட்டுப்படைத் தலைமையகத்தின் தளகர்த்தாவாக நியமிக்கப்பட்ட ஜெனரல் ரொஹான் தளுவத்த அடுத்த மாத முடிவில் தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேஸிலுக்கு இலங்கைக்கான தூதுவராக செல்லவுள்ளார் என்று நம்பப்படுகிறது.

இதற்கான விளம்பரம் அண்மைய பத்திரிகைகளில் வெளியாகியது. இவரது நியமனத்தை ஆட்சேபித்து எவராவது மனுவைத்தாக்கல் செய்யாது போனால் இவர் பிரேஸிலின் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்படுவது உறுதியாகி விடும்.

இலங்கை இராணுவம் யாழ். குடாநாட்டை கைப்பற்றும் போது வடபகுதிக்கான மேலதிக கட்டளையிடும் அதிகாரியாக கடமையாற்றியவர் ஜெனரல் தளுவத்த.

அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி. சில்வா இளைப்பாறியதைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்தின் 14 ஆவது தளபதியாக 01.05.96 அன்று இவர் பொறுப்பேற்றார். 15.12.98 வரை அப்பதவியை வகித்து வந்தார்.

யாழ் குடாநாட்டை கைப்பற்றுவதில் முக்கிய பங்காற்றிய ஜெனரல் தளுவத்த ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக விளங்குகிறார்.

இதனாலேயோ என்னவோ இவர் சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னரும் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அத்துடன் இலங்கையின் முப்படைகளினதும் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக விளங்கும் கூட்டுப் படைத் தலைமையகத்தின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டார்.

1999 மே 27 ஆம் திகதி கூட்டுப் படைத் தலைமையகத்தின் தளபதியாகவும் முப்படைகளினதும் தளகர்த்தர் (Chief of Defence staff) ஆகவும் விசேட வர்த்தமானி மூலம் நியமிக்கப்பட்ட இவர் எதிர்பாராதவிதமாக அடுத்த 9 தினங்களில் பதவி இறக்கப்பட்டு கூட்டுப் படைத் தலைமையகத்தின் பிரதான கட்டளையிடும் அதிகாரியாக (General Officer Commanding) நியமிக்கப்பட்டார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் நெருக்கடியின் பேரில் தான் இவர் இவ்வாறு திடீரென பதவி இறக்கம் செய்யப்பட்டிருந்தார். எனினும் பின்னர் இவர் மீண்டும் முப்படைகளினதும் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளிலும் இவ்வாறு கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ்த்தான் தரை, வான் மற்றும் கடற்படைகள் செயற்பட்டு வருகின்றன. அண்மையில் இந்தியாவில் புதிதாக இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படை நோக்கம் என்னவென்றால் அருமையாகக் காணப்படும் படைத்துறை வளங்களை சரியான முறையில் சேவைக்கேற்ப பயன்படுத்தி எதிரிகளை எதிர்ப்பதே ஆகும்.




இலங்கை இராணுவ வரலாற்றில் கூட்டுப்படைத் தலைமை முதல் தடவையாக 1985 பெப்ரவரி 11 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜெனரல் திஸ்ஸ வீரதுங்கவே இலங்கையின் முதல் கூட்டுப்படைத் தலைமையகத்தின் தளபதியாக நியமனம் பெற்றார்.

இவருக்குப் பின்னர் ஜெனரல் சிறில் ரணதுங்கவும் இறுதியாக ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவும் பதவி வகித்து வந்தார்கள். அதன் பின்னர் சுமார் 8 வருடங்களாக கூட்டப்படைத் தலைமை முறை இல்லாதிருந்தது.

தற்போதுள்ள நிர்வாகத்தின் படி முப்படைத் தளபதிகள் மட்டுமன்றி பொலிஸ்மா அதிபர் கூட நேரடியாக ஜெனரல் தளுவத்தையின் கட்டுப்பாட்டின் கீழேயே செயற்பட்டு வந்தனர்.

கட்டுப்பாடு என்பது என்ன வென்றால் புலிகளுக்கெதிரான போரில் இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்களும் , திட்டமிடல் நடவடிக்கைகளும் கூட்டுப் படைத்தலைமையகத்தின் நெறிப்படுத்தலின் கீழேயே செயற்பாட்டுக்கு வரும். அதாவது முப்படைத் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் கூட்டுப்படைத் தலைமையகத்தால் வழங்கப்பட்ட விதந்துரைகளினதும், அறிவுறுத்தல்களினதும் பேரிலேயே புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னும் சுருங்கக் கூறின் புலிகளுக்கெதிரான தாக்குல் நடவடிக்கைகளில் கூட்டுப் படைத் தலைமையகத்தினால் வழங்கப்படும் இலக்குகளை அது வரைந்த திட்டத்தின் ஊடாக செய்து முடிப்பதே முப்படைத் தளபதிகளினதும் பொலிஸ்மா அதிபரினதும் கடமையாகும்.

ஆனால் முப்படைகளினதும், பொலிஸாரினதும் நிர்வாகம், ஆட்சேர்ப்பு, தரமுயர்த்தல், ஆயுதக் கொள்வனவு போன்ற ஏனைய விடயங்களில் அவ்வப் படைத்துறையின் தளபதிகளே பொறுப்பாக இருப்பர்.

அத்துடன் இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சருக்கோ அல்லது பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கோதான் பதில் கூற வேண்டியவர்களாக இருப்பார்கள்.

கூட்டுப் படைத் தலைமை தளபதி வாராந்தம் கூட்டுப் படை தலைமையகத்தில் முப்படைத் தளபதிகளுடனும், பொலிஸ்மா அதிபருடனும் உள்ளக புலனாய்வுத்துறைப் பணிப்பாளருடனும், வெளியகப் புலனாய்வு பணிப்பாளருடனும் சந்தித்து கடந்தவார களநிலைமை தொடர்பாகவும், எதிர்வரும் வார செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவார்.

இவர்களிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையிலும் ஆலோசனைகளின் அடிப்படையிலும் தான் எதிர் வரும் வார செயற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

சில வேளைகளில் இத்தீர்மானம் வாராந்த தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் பரிசீலனை செய்யப்படுவதும் வழக்கம்.

இறுதியாக கடந்த 5 ஆம் திகதி பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்றது. இங்கு ஜனாதிபதி இலங்கையின் புலனாய்வுத் துறைகளின் செயற்பாடுகள் குறித்து தனது கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருக்கிறார்.

அண்மைக்காலமாக கடலில் ஏற்படும் மோதல்களினதும், புலிகளின் ஆயுதக் கப்பலின் பிரசன்னம் தொடர்பான செய்திகளினதும் தாக்கமே ஜனாதிபதி இவ்வாறு புலனாய்வுத்துறையினரை சாடுவதற்கு காரணமாக இருந்துள்ளது போல் தெரிகிறது.

ஆனாலும் புலனாய்வுத் துறையினரது செயற்பாடுகள் பற்றி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியிருக்கிறார். அதாவது புலனாய்வுத் துறையினர் வழங்கிய தகவல்களின் பேரிலேயே கடற்புலிகள் மீதான தாக்குதல் கடற்படையினரால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் விமானப் படையினருக்குக் கூட புலனாய்வு அறிக்கையில் இருந்து தான் இலக்குகள் வழங்கப்பட்டதாகவும் கூறியதாக அறிய முடிகிறது.

ஏற்கனவே ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் ஜெனரல் தளுவத்தையின் பிரேஸிலுக்கான நியமனத்தை ஆட்சேபித்து அக்டோபர் 5 ஆம் திகதிக்குள் எவராவது ஜனாதிபதி செயலகத்தில் மனு தாக்கல் செய்யாவிடில் அவர் அடுத்த மாத இறுதியில் பெரும்பாலும் பிரேஸில் செல்லக் கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்றின்படி சுமார் இரண்டுக்கும் மேற்பட்ட ஆட்சேபனை மனுக்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகிற ஆனாலும் இதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இதே வேளை இலங்கை இராணுவம் தனது 52ஆவது நிறைவு ஆண்டை 10 ஆம் திகதி எட்டிக் கடந்துள்ளது. அதற்கான மொத்த சமய அனுட்டான நிகழ்வுகள் அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதியில் ஏற்கனவே இடம் பெற்றுள்ளன.

இராணுவத் தளபதி உட்பட முப்படைகளினதும் தளபதிகளும் இதில் கலந்து கொண்டனர். அனைத்து றெஜிமெண்டுகளும் இலட்சினைக் கொடிகளும் பூசையில் வைக்கப்பட்டன.

52 ஆவது அகவையில் காலடி வைக்கும் இராணுவத்துக்கு, புலிகளின் அச்சுறுத்தல் வளர்ந்து கொண்டு போவது சவாலாகக் கூட இருக்கலாம்.





என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals


TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

## அதிசய நோய் தீர்க்கும் வர்மக்கலை + இந்திய சித்த வைத்தியம்

சித்தவைத்தியம் என்றால் என்ன?

நாம் பிறந்த இந்த மண்ணில், பூமியில் விளைந்த தாவரங்களைக் கொண்டு செய்யும் வைத்தியம். இவை மனிதனுக்கு உணவாக பயன்படும் இராஜ மூலிகைகள் ஆகும். இதன் மூலம் பக்க விளைவுகள் இல்லை. ஆதி சித்தர்களால் தீர்க்க முடியாத நோய்களே இல்லை. ஆதி சித்தர்களானால் கண்டு பிடிக்கப்பட்ட அதிசய வைத்திய முறையில் மூத்த சித்தர்களான அகஸ்தியர் மூல காரணமாவார். வர்மக் கலை என்றால் என்ன? மனித சரீரத்தில் எத்தனையோ சக்தி நாளப்புள்ளிகள் உள்ளன. அவை எங்குள்ளது என்பதை அறிந்து நாடிப் பரிசோதனை மூலம் குறிப்பிட்ட புள்ளியை திறந்து விடும் நோய் நிலை முற்றாக மறைந்து விடும். அதே புள்ளியை தெய்வ சிந்தனையோடு திறந்து விடும் போது தீர்க்கவே முடியாத நோய் என கூறப்படும் ஆத்தெரொட்டீஸ், பிட்ஸ், சையனாசைட்டீஸ், அல்சர், ஆஸ்துமா, தைரொய்ட், வெரிகோஸ், லூக்கேமியியா (கேன்சர்) இவைகள் எல்லாவற்றையும் சுகமாக்க முடியும். இறை ஆசி உள்ளவர்கள் தொடர்பு கொள்வீர்களாக.

உங்கள் நலனின் பங்காளர் வாழ்க வளமுடன்




டாக்டர். ப. சுரேஸ் (S.M.P)
இந்தியா
41A, பஸ் ஸ்டேன்ட் (ஒக்கீட் சலூன் அருகில்) அட்டன்.
T.P:- 051-24203
Fax:- 051-23650

## இலவச ஆங்கில பாடநெறி தபால் மூலம்

FREE ENGLISH COURSE BY POST

ஆங்கிலத்தை அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படுவதால் ஆங்கில முன் அறிவோ வயது கட்டுப்பாடோ கிடையாது.

பாடநெறிக் கட்டணம் இல்லை

DIPLOMA IN ENGLISH

விண்ணப்ப முடிவுத் திகதி : 10-11-2001

The ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.Box 083, Kandy, Tel : 077-802849



அனைத்து வகை செய்மதி
Dish antennas, T.V. antennas
மற்றும் உதிரிப் பாகங்களின்
இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்

UKAAYE
SATELLITE SYSTEMS (PVT) LTD.
Showroom:
No. 190, Bodhiraja Mawatha,
Colombo-11.
Tel: 075-370019, Fax: 075-370018
Sole Distributor in Sri Lanka for EUROSTAR

அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

ஒக்டோபர் 14, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com


## ஜனாதிபதியின் கல்விக் கொள்கை

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க தற்போது கடைப் பிடித்து வரும் கல்விக் கொள்கை துணிச் சலானது; வரவேற்கத்தக்கது; பாராட்டப்பட வேண்டியதும் கூட.

சிங்களப் பாடசாலைகளுக்கு இப்போ தைக்குப் புதிய ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது.

தமிழ்ப் பாடசாலைகளுக்கும் தோட்டப் பகுதிப் பாடசாலைகளுக்கும் தேவையான ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம்.

இதுதான் ஜனாதிபதியின் கொள்கை. இந்தக் கொள்கையைச் சமீபத்தில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற முக்கியஸ்தர்கள் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி அறிவித்தார்.

இந்தக் கொள்கை சிங்கள மக்களுக்குப் பிடிக்காது. அவர்கள் கடுமையாக எதிர்க்கக் கூடும். தமிழர்களுக்கு ஒரு நியாயம், தங்களுக்கு ஒரு நியாயமா என்று சிங்கள மக்கள் கேட்கலாம். சமநீதி கோரலாம்.

இவை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் ஜனாதிபதி தனது கொள் கையைத் துணிச்சலுடன் அறிவித்திருக் கிறார்.

தன்னுடைய கொள்கை உண்மையின் அடிப்படையில் எழுந்தது, உன்னதமானது என்பதில் ஜனாதிபதி அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

அதனால் தான் விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் தமக்குச் சரியெனப் பட்டதை நடைமுறைப்படுத்த முன் வந்திருக்கிறார்.

உலக வங்கி ஆய்வுகளின்படி சிங்களப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருக் கிறார்கள். குறிப்பாக கொழும்பு, கம்பஹா, கண்டி, காலி மாவட்டங்களில் உள்ள தேசியப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

வேறு பகுதிகளில் உள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவைப் பட்டால் நான்கு மாவட்டங்களிலும் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை அந்தப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யலாம். புதிதாக ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது.

இடமாற்றம் இந்த வருட முடிவுக்குள் செய்து முடிக்கப்பட்டு விடவேண்டும். மேல திகமாக உள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில் அரசியல் செல்வாக்குகளுக்கு அதிகாரிகள் மசியக் கூடாது.

எந்த ஆசிரியராவது இடமாற்றத்தை ஏற்று புதிய பாடசாலைக்குப் போகா திருந்தால் அவர் பதவியிலிருந்து நீங்கி விட்டவராகக் கருதப்படவேண்டும். இது ஜனாதிபதியின் கண்டிப்பான உத்தரவு.

தமிழ்ப் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மேலதிகமாகத் தமிழாசிரியர்கள் இருந்தாலும் அவர்களை இடமாற்றம் செய்த பின்னரும் பல பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருக்கும். அதனால் அந்த வெற்றிடங்களை நிரப்பப் புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது கட்டாயத் தேவை.

யுத்தத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அகதி வாழ்வு, புலம் பெயர்வு ஆகியவற் றாலேயே தமிழாசிரியர்களுக்குப் பற்றாக் குறை நிலவுகிறது.

தோட்டப் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் அங்கே ஆசிரியர் பற்றாக்குறை நிரந்தர பிரச்சினையாக இருக்கிறது. அதனால் அங்கும் புதிய ஆசிரியர்களைத் தேவைக்கு நியமித்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி அனுமதி வழங்கியிருக்கிறார்.

பாதுகாப்புக்கு அடுத்தபடியாகக் கல்வித் துறைக்குத் தான் ஆகக் கூடுதலான பணம் ஒதுக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள பிள்ளைகளுக்குச் சிறப்பான கல்வியைச் செம்மையாக ஊட்ட முடிய வில்லை என்றால் பெருந்தொகை பணத் தைச் செலவழித்து என்ன பயன்?

ஆகவே சிறுவர்களின் கல்வி அபிவிருத் தியையும் நாட்டு நலனையும் கருத்தில் கொண்டு ஜனாதிபதி அறிவித்துள்ள கல்விக் கொள்கை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இதில் இன, மொழி வேறுபாடு பார்த்து வெதும்புவதற்கு இடமில்லை.

# எந்தத் தாக்குதலையும் முறியடிக்க படைகள் தயார்

எந்தத் தாக்குதலையும் முறியடிக்க படைகள் தயார்

புலிகள் தரப்பில் கடந்த சில வாரங்க ளில் இடம்பெற்ற பாரிய இழப்புக்கள், உக் கிரமான ஒரு பதில் தாக்குதலாக வெளிப் படலாம். அதனால் அரச படையினர் தம்மை உஷார்நிலைப்படுத்தியுள்ளனர்.

கேர்ணல் சங்கரின் இழப்புக் குறித்து புலிகள் விடுத்த அறிக்கையில் அதற்குக் காரணம் படையினரே எனக் கூறி தகுந்த பதிலடி உண்டு என்ற அர்த்தத்தில் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அடுத்த அடுத்து வெடித்த கடற்சமர்கள் புலிகள் மேற்கொள்ளவுள்ள பாரிய கடற்சமர் ஒன்றுக்கான ஒத்திகைகளா, அல்லது தரை வழியாக நடத்தவுள்ள படை நடவடிக்கையைத் திசை திருப்பும் நோக்குடன் மேற்கொள்ளப் படும் கடல்மடி விளை யாட்டுக்களா? கடற்படையினர் ஆராய்கின்றனர்.

புலிகளின் புலனாய்வுத்துறையினதும், விமானப்பிரிவினதும் முக்கியஸ்தர் கேர்ணல் சங்கரின் மரணத்துடன் புலிகளின் அந்தத் துறைகள் செயலிழந் திருக்கக்கூடும் என்று படைத்தரப்புக் கணிப்பிட்டிருக்கலாம். இந்த வேளையில் விமானப்படை மீதான அல்லது ஊடுருவல் மூலமான அதிரடித் தாக்குதல் களை மேற் கொள்ளப் புலிகள் திட்டமிட் டிருக்கலாம் எனவும் படைத் தலைமைகள் சிந்திக்கத் தொடங்கியுள்ளன.

அக்கினிச் சுவாலைப் படை நடவடிக் கையைத் தொடர்ந்து, புலிகள் கட்டுநாயக்க அனர்த்தத்தை ஏற்படுத்தியது போல் தற் போது எந்தப்புறத்திலும் யுத்தம் வெடிக்கலாம் என்று படையினர் விழிப்பாக உள்ளனர்.

படையினர் மிகவும் அவதானமாக பாது காப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகிறார் கள் என்பதும் உண்மையே. ஏனெனில், கடற்படையினர் வடக்கு முதல் கிழக்கு கடற்கரைகளில் தொடர்ச்சியாக மேற் கொண்டு வந்த 'வருண–கிரண' தாக்குதல் ஒத்திகைகள் சமீப காலத்தில் புலிகள் மேற் கொண்ட அதிரடி மோதல்களைத் தாக்குப் பிடிக்கச் சற்று உதவியிருக்கின்றன.

புலிகளின் அடுத்த இலக்கு வடக்கு, கிழக்கிலுள்ள ஏதாவது துறைமுகமாக இருக்கலாம் எனப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதை அடுத்து படையினர் கடற்பரப்புகளில் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

தொடர்ச்சியான கடல் ரோந்துப் பணிக ளுக்கு கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி தர்மபிரிய உத்தரவிட்டிருக்கிறார். இப்படியான தீவிர ரோந்து நடவடிக்கைகளில் கடற் புலிகளின் நடமாட்டங்கள் அவதானிக் கப்பட்டுள்ளன. அதன் விளைவாக சில சண் டைகளும் ஆங்காங்கே மூண்டு தணிந்தன.

இதேபோல தரையிலும் படையினர் தமது மேலதிக கண்காணிப்புகளை முன்னரங்கு நிலைகளில் மேற்கொண்டுள்ளனர்.

வடக்கில் நாகர்கோயில், மணலாறு பகுதி களிலுள்ள இராணுவ முன்னரங்குகளுக்கு மேலதிக இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

மாவீரர் வாரத்தை ஒட்டிப் புலிகள் எப்போதும் ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொள்வது வழக்கம்.

மாவீரர் வாரம் அடுத்த மாதம் ஆரம்பமாக வுள்ளது. அதனால் இராணுவத்தினர் முன் னெச்சரிக்கையாகப் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

திலீபனின் நினைவு நாளை ஒட்டி மோதல்கள் எங்காவது வெடிக்கலாம் என இராணுவம் எதிர்பார்த்திருந்தது. எனினும் அது கடைசிவரை நடக்கவில்லை.

ஆனால் இந்தமுறை புலிகள் தவறமாட்டார்கள் என்று படையினர் உறுதியாக நம்புவதால் உஷாராகியுள்ளனர்.

ஆளணி ரீதியிலும், ஆயுத பலத்திலும் இராணுவம் தன்னை முழுமையாகத் தயார்படுத்திவிட்டது.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர் கள், புதிதாக இணைந்து கொண்டவர்கள் என்று ஒரு 'சேர்வே' எடுத்து அது ஒரு படை நடவடிக்கைக்குப் போதும் என்று இராணுவம் திருப்தி அடைந்திருக்கிறது.

ஆயுத தளபாடங்களும் போதிய அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுவிட்டன. வெறு மனே ஊடுருவல் தாக்குதல்களில் மட்டும் கடந்த காலங்களில் படைத்தரப்பு தீவிரமாக ஈடுபட்டு இருந்ததால் ஆட்கள் மற்றும், ஆயுதங்களின் இழப்பு அதிகம் ஏற்படாமல் படையினர் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

இன்றைய நிலையில் புலிகள் மேற் கொள்ளும் தாக்குதல்களுக்கு தொடர்ச்சியா கத் தாக்குப் பிடிக்கக் கூடிய வல்லமை படை யினருக்கு அதிகம் என்றே நம்பப்படுகிறது.

தலைநகர் கொழும்பிலும் அதைஅண்டிய பகுதிகளிலும் புலிகளின் ஊடுருவல் தாக்குதலுக்கான சாத்தியங்களை முகர்ந்து பிடிக்கப் பொலிஸாரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில், விஹாரமாதேவிப் பூங்கா வில் தற்கொலை அங்கி ஒன்று மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம், படையினரதும் பொலிஸாரினதும் புலனாய்வுப் பணியின் உச்சத் திறனை வெளிக்காட்டியிருக்கிறது.

கடந்த காலங்களில் கொழும்பினுள் புலிகள் மேற்கொண்ட ஊடுருவல் பாதைகள் தொடர்பான விவரங்கள் புலனாய்வுப் பிரிவினரால் பரிசீலனை செய்யப்பட்டு அதன் பிரகாரம் பாதுகாப்பு நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

புலிகள் எங்கே, எந்த விதத்தில் தாக்குதல் நடத்தினாலும் அதை எதிர்கொண்டு முறியடிக்கவும் அடுத்தபடியாகத் தாமே தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் படையினர் தயாராக உள்ளனர். படைத்தரப்பு இதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

# றிஸ்வியின் இடத்தை மீண்டும் கல்முனைக்கே தரக் கோரிக்கை

## அது அஷ்ரப்பின் 'வஸியத்' என நினைவுறுத்து

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னர் அஹமட் றிஸ்வி சின்னலெவ்வை காலமாகிவிட்டார். அதை அடுத்து வெற்றிட மாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார்? இந்த விடயம் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பரபரப்பான அரசியல் அம்சமாக உருவெடுத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸுக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையில் புரிந்து ணர்வு உடன்பாடு ஒன்று இருந்தது. அதன் படி வழங்கப்பட்டதே றிஸ்வி சின்னலெவ் வையின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி.

எனவே தற்போதைய சூழ்நிலையின் படி முஸ்லிம் காங்கிரஸின் சிபாரிசை ஏற்று பொதுஜன ஐக்கிய முன்னணி இத்தேசியப் பட்டியல் வெற்றிடத்தை நிரப்புமா? இந்தக் கேள்வி முனைப்பாகப் பேசப்பட்டு வரும் வேளை இது.

இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கெனப் பலரது பெயர்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. சிலருக்காக கையெழுத்து வேட்டைகளும், அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி, அமைச்சர் பேரியல் அஷ்ரப், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் முத லானோருக்கு மகஜர்கள் பறந்த வண்ணமுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் சிபார்சு செய்யும் ஒருவரை இந்த வெற்றிடத்துக்கு நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி மறுக்குமா? அவ்விதம் நடந்தால் அமைச்சர் பேரியலின் சிபாரிசு பெறப்படலாம். அதன் மூலம் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சேகு இஸ்ஸதீன், தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்பு சபைத் தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரில் ஒருவரை நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வரலாம்.

இவ்வாறு ஹேஷ்யங்கள் அடிபடத் தொடங்கியுள்ளன.

ஆனால் இவ்வாறான நிலைதோன்றுமா னால் புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற ரீதியில் நியமனத்தை ஆட்சேபித்து முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றத்தில் தடை உத்தரவொன் றைப் பெறலாமெனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் சிபாரிசு ஏற்றுக் கொள்ளப்படுமானால், இதற்கென ஒருவரை சிபாரிசு செய்யும் பொறுப்பை முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதி உயர் பீடம் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு வழங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் டாக்டர் உதுமா லெவ்வை, முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பொருளாளர் எம்.ரீ.ஹஸனலி, முஸ் லிம் காங்கிரஸ் அரசியல் உயர் பீட உறுப்பி னரும், 'மெஸ்றோ' அமைப்பின் தலைவரு மான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கொழும் பைச் சேர்ந்த முஸ்லிம் ஹாஜியார் வை.எல்.எஸ்.ஹமீட் ஆகியோரின் பெயர் கள் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு கட்சி சார்பில் சிபாரிசு செய்ய ஆணித்தர மான முடிவொன்றை எடுத்திருப்பதாக நம் பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதாவது முஸ்லிம் காங்கிரஸின் நீண்ட கால முக்கியஸ்தரான தேசியப் பொருளாளர் அல்ஹாஜ் எம்.ரீ.ஹஸனலி சிபாரிசு செய்யப் படுவார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்முனைத் தொகுதிக்கு நாடாளு மன்ற பிரதிநிதித்துவம் ஒன்றினை நிரந்தரமாக முஸ்லிம் காங்கிரஸ் ஒதுக்க வேண்டும். இவ்வாறு தலைவர் அஷ்ரப் வஸியத் உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார். அதன் மூலம் றிஸ்வி சின்னலெவ்வை நாடாளுமன்ற உறுப்பினராக தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டார்.

எனவே தற்பொழுதும் இந்தப் பிரதி நிதித்துவம் கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இந்த வஸியத் மீறப்பட்டால் அது மறைந்த தலைவரின் உத்தரவை மீறிய செய லாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகள் சிரேஷ்ட சட்டத் தரணி நிஸாம்காரியப்பரையே நியமிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளன.

-அனார்க்கலி.

# அலுவலக மூடு விழாவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு மூடுவிழா நடத்தப்படவிருக்கிறது.

15–10–2001 ஆம் திகதியுடன் இந்த அலுவலகம் மூடப்படுகிறது. இது குறித்து அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் பலத்த ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

தபால் அலுவல்களை மீண்டும் அம்பாறை அஞ்சல் அத்தியட்சகரின் கீழ் கொண்டுவருவதற்கு முடிவுசெய்யப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் முயற்சியாலேயே மேற்படி கரையோரப் பிரதேசத்திற்கான அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் நிறுவப்பட்டது.

2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி இது அக்கரைப்பற்றில் திறந்துவைக்கப்பட்டது.

இதற்கென தமிழ் பேசும் அஞ்சல் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அலுவலக நடவடிக்கைகளும் ஆரம்பமாகி நடைபெற்று வந்தன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் நீலாவணை தொடக்கம் பொத்து வில் வரை அமைந்துள்ளது. அங்குள்ள தமிழ், முஸ்லிம் கிராமங்களில் 13 பிரதம தபாலகங்களும் 50 உப தபாலகங்களும் இருக் கின்றன. அவற்றை உள்ளடக்கியதாக அக் கரைப்பற்று அலுவலம் இயங்கி வருகிறது.

தற்பொழுது இந்த அலுவலகத்தை மூடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக் கைக்கு அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தி யோகத்தர்கள் சங்க கல்முனைக்கிளை பலத்த ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

கிளைப் பொதுச் செயலாளர் யூ.எல்.எம். ஜைஸர் இது விடயமாக அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோருட்பட நாடாளுமன்ற உறுப்பி னர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இந்த அலுவலகம் மூடப்பட்டால் கரையோரப் பிரதேசங்களிலுள்ள தமிழ் பேசும் அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள் பாதிக்கப்படுவார்கள்.

மற்றும் தபாலக ஊழியர்களும் மொழி ரீதியாக மீண்டும் பெரும் பிரச்சினைகளை யும், அசௌகரியங்களையும் எதிர்கொள்வர்.

இந்த அலுவலகம் மூடப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

—ஏ.எல்.எம். சலீம்

# ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த நிலைமை இலங்கைக்கு வருமா?

''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று எங்கடை முன்னோர்கள் சும்மாவே சொன்னவை. ஒற்றுமையின் பலத்தைக் கண்டு வல்லரசே சண்டைக்குப் பின்னடிக்குது'' அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

நல்ல வேளையாக அவர் பேசியது அமெரிக்காவைப் பற்றியும், இஸ்லாமிய மக்களின் ஒற்றுமையைப் பற்றியும் என்று புரிந்ததால் மற்றவர்களின் ஏச்சில் இருந்து விநாசியர் தப்பித்தார்.

''சுற்றிவளைச்சு, மற்றவைக்கு விளங்காமல் பேசுவதை விநாசியண்ணர் எப்பதான் நிறுத்தப் போறாரோ'' சிரித்தபடி கேட்டான் டானியல்.

''அமெரிக்க அதிபர் புஷ், இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இவையெல்லாம் விநாசியரை விட விளக்கமில்லாமல் கதைக்கினம்'' என்றான் லோகன்.

''விமானத் தற்கொலைத் தாக்குதல் நடந்தவுடன் தலிபான் மீதும், பின்லேடனின் நிலைகள் மீதும் அமெரிக்கா அதிரடித் தாக்குதலை அடுத்த சிலநாட்களிலேயே தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அமெரிக்கா கூட தனக்கு ஆதரவான இஸ்லாமிய நாடுகள் எல்லாம் உதவும். ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி விடலாம் என்று தான் நினைத்திருக்கும்.

''ஆனால் நாடுகள் வேறானாலும் இஸ்லாமியர்கள் பயங்கரவாதத்தைக் கண்டித்த அதே வேளை அமெரிக்கப் பயங்கரவாதத்துக்கு — ஆப்கான் மக்களுக்கு துயரத்தைக் கொடுக்கும் தாக்குதலுக்கு — கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே சவூதி அரேபியா பாகிஸ்தான் உட்பட அமெரிக்காவுடன் நல்லுறவு கொண்ட இஸ்லாமிய நாடுகள் கூட அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு ஒத்துக் கொள்ள மறுத்து விட்டன.'' நிலைமையை ஒப்பித்தார் மாஸ்டர்.

''ஆனாலும், ஆதிக்க வெறியர்களின் வழக்கம் போல, தலிபான்களை எதிர்க்கும் ஆப்கானிஸ்தானியர்கள் அடங்கிய வடக்குக் கூட்டணிக்கு சகல உதவிகளும் வழங்கி, அவர்கள் மூலம் தலிபான்களை ஒழிக்க அமெரிக்கா முயற்சிப்பதாகச் சொல்லுகினம்'' தனக்கு வெளிநாட்டு விடயமும் தெரியும் என்று காட்டினாள் சின்னாச்சி.

''ஓப்பியம் போன்ற போதைப் பொருள்களை கடத்தி விற்பவர்கள், ஆயுத வியாபாரிகள் ஆகியோரைக் கொண்டதே வடக்குக் கூட்டணி என்று அமெரிக்கத தேசிய பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த வில்லியம் டி சிங்கிள் ரன் கூறியிருக்கிறார். இப்படிப்பட்டவர்களை ஆட்சியில் அமர்த்தினால் தான் தங்கடை இழுப்புக்கு வருவினம் என்ற நினைப்பில் அமெரிக்கா இப்ப முயற்சி எடுக்குது போல. பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்சி ஒன்று ஆப்கானிஸ்தானில் இருப்பதையே இந்தியா விரும்புகிறது.

''ஆக தங்கடை சுயநலத்துக்கு ஏற்றமாதிரி ஆட்சிகளை அமைக்க விரும்பும் இவை, பயங்கரவாத்தை ஒழிப்பது மட்டுமே தமது நோக்கம் என்று வேஷம் போடுவது தான் வேடிக்கை'' விவரித்தான் டானியல்.

''அது மட்டுமல்ல பாகிஸ்தானில் பிரதமராக இருந்த போது பெரும் பணத்தை ஊழல் செய்ததாக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டு, இன்று பிரிட்டனில் தண்டனைக்குத் தப்பி வாழும் பெனாஸிர் பூட்டோ, பின்லேடனுக்கு பாகிஸ்தானில ஆதரவில்லை அமெரிக்க நடவடிக்கையை வரவேற்க வேணும் என்று கூறியிருக்கிறார். இவரைப் போல இஸ்லாமிய நாடுகளி[illegible] சில மன்னர்கள் தமது சுகபோகங்களுக்காக அமெரிக்கச் சார்புப் போக்கை எடுத்தவர்கள் தான். ஆனால் மக்களின் எதிர்ப்பு காரணமாக அமெரிக்காவுக்கு கண்மூடித்தனமாக ஆதரவளிப்பதை நிறுத்தியுள்ளார்கள்'' என்றான் லோகன்.

''பின்லேடன் அமெரிக்கா மீது தாககுதல் நடத்தியதற்கு ஆதாரங்கள் வெளியிடப்படாமலேயே, அவரை விசாரணைக்காக அமெரிக்காவிடம் ஒப்படைக்கும்படி கேட்கும் பிரிட்டன், முன்னர் ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற பெனாஸிரை பாகிஸ்தான் கேட்டும் நாடு கடத்த மறுத்தது. ஆக மக்களை ஏமாற்றும் ஊழல் வாதியை தாங்கள் ஆதரிப்பினம், ஆனால் தங்களுக்குப் பிடிக்காதவர்களை மற்ற நாடுகள்



## தேரடி அரட்டை

உடனே வெளியேற்ற வேண்டும் என்று சொல்லுகினம். நல்ல நீதிதான்'' சிலாகித்தாள் சின்னாச்சி.

''இதைச் சொல்லுறியள், தனக்குத் தனக்கென்றால், பழுஞ்சுளகும் படக்குப் படக்கென்று அடிக்குமாம். அதைப் போல இன்று ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கிருமி ஆயுதங்கள் இருக்கு, அவற்றை சோதனை செய்து கைப்பற்ற வேண்டும் என்று மார்தட்டும் அமெரிக்கா, மருத்துவத் தேவைக்காக கிருமிகளை உற்பத்தி செய்யும் நாடுகள் அதனை பகிரங்கமாக்க வேண்டும். அப்போது தான் கிருமி ஆயுதங்கள் தயாராவதை தடுக்க முடியும் என்று உலக நாடுகள் கோரிய போது, அதனை முதல் ஆளாக மறுத்தது.

''தான் கிருமி ஆயுதம் தயாரிப்பது அம்பலமாகிவிடும் என்ற பயத்தில் அப்போது மறுத்த அமெரிக்கா இப்போது, கிருமி ஆயுதத்திலிருந்து உலகைக் காப்பாற்றுபவனாக நடிக்கிறது.'' அம்பலப்படுத்தினார் மாஸ்டர்.

''மற்ற நாடுகள் மீது அழுத்தங்களை பிரயோகிக்க ஐ.நா.மூலம் தடைகளை விதிக்கும் அமெரிக்கா, தனது நாட்டில் தாக்குதல் நடந்தவுடன் மட்டும் ஐ.நா.வை கிள்ளுக் கீரையாக நினைக்கிறது. அமெரிக்காவுக்கு தற்பாதுகாப்பு உரிமை உண்டென்றும், பயங்கரவாதத் தா[illegible]க்கு பதிலடி கொடுக்க ஐ.நா. வின் அனுமதி தேவையில்லை[illegible]என்றும் அது கூறியிருக்கிறது.

''ஆனால் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஐ.நா. அங்கீகாரம் தேவை என்று ரஷ்யா, பிரான்ஸ் போன்றவை வலியுறுத்தியுள்ளன. மற்ற நாடுகளைத் தனது வழிக்குக் கொண்டுவர மட்டும் ஐ.நா. தேவை. ஆனால் ஐ.நாவை புறக்கணித்து விட்டு, தான் மட்டும் தன்னிச்சையாகச் செயற்படலாம் என்று தான் அமெரிக்கா நினைக்குது'' என்றார் மாஸ்டர்.

''அமெரிக்கா போன்ற வல்லரசு நாடு, தனது இராணுவத்தை அவ்வப்போது போரில் ஈடுபடுத்திப் புத்துணர்வு ஊட்ட வேண்டிய கட்டாயம் உண்டாம். அதோட இராணுவத்தில் சேர்க்கப்பட்ட புதிய ஆயுதங்களை உபயோகித்து பார்க்கவும் போர் தேவைப்படுகுதாம். ஆகவே அத்தகைய போர் நடவடிக்கையாகவே இதை இலகுவாக முதலில் அமெரிக்கா நினைத்தது.

''ஆனால் இஸ்லாத்துக்கு எதிரான புனிதப் போர் என்று ஆப்கானிஸ்தானில் மட்டுமன்றி, எல்லா நாட்டு இஸ்லாமியர்களும் நினைத்ததால், சிக்கல் பெரிதாவதை உணர்ந்த அமெரிக்கா தனது 'பொலிஸ்' வேலையை நடத்தத் தயங்குதாம். அதுக்குப் பதிலாக சி.ஐ.ஏ வெளிநாடுகளில் அமெரிக்க நலனை காக்கும் நடவடிக்கைகளில் — இதில் கொலைகளும் அடங்குமாம் — ஈடுபட்டு பின்லேடனை ஒழித்துக்கட்டலாம் என்று திட்டமிடப்படுகுதாம்'' அறிந்ததைச் சொன்னார் விநாசியர்.

''தங்கடை மக்களுக்கு ஆபத்து என்றால் சி.ஐ.ஏ. மற்ற நாடுகளில் சதி செய்யலாம். ஆனால் தங்கடை நாட்டிலை அமைதி காப்பதாகக் கூறிக் கொண்டு வந்து அட்டூழியம் செய்தவையை மற்றவை தட்டிக் கேட்டால் மட்டும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்துவினம். நல்ல நியாயம் தான்'' சலித்துக்கொண்டாள் சின்னாச்சி.

''அத்துடன், சந்தடி சாக்கில் அமெரிக்காக்காரரை இங்கேயும் காலூன்ற வைத்து கொளுவி விடத் திட்டம் நடக்குது போல'' என்றும் கூறினாள்.

''ஆப்கானிஸ்தான் பிரச்சினையை வைத்து திருகோணமலையில் அமெரிக்காவைக் காலூன்ற வைத்தால் துறை முகத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து பாதுகாத்த மாதிரியும் இருக்கும். அதே நேரம் கிழக்குக் கடல் பகுதியை அமெரிக்கா கண்காணித்து புலிகளுக்கு ஆயுதம் போவதை தடுக்கச் செய்த மாதிரியும் இருக்கும் என்று மேலிடம் கணக்குப் போடுதாம்'' என்றான டானியல்.

''அமெரிக்காவுக்கு இடம் கொடுப்பது, ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த மாதிரி என்பது இவைக்குத் தெரியவில்லை. இதுவரையிலும் தாம் அமைத்த நாடுகளில் இருந்து அமெரிக்கா வெளியேறியதில்லை. அதைவிட அமெரிக்கப் படைகளின் அட்டகாசம் கொடூரம், இது கடைசியில அவைக்குத்தான் சிக்கல் என்பது விளங்கினால் சரி'' என்றபடி எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்

## டிஜிட்டல் முறையில் குடிதண்ணீர் பெறலாம்

பிறேசில் நாட்டில் டிஜிட்டல் முறையில் இயங்கும் கருவி மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. ரோக்கன் கின்ஸ் மாநிலத்தின் பொறியலாளர்கள் இந்த முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தக் கருவி மூலம் நீர் பெற்றுக்கொள்வதற்கு தற்போது தொலைபேசிப் பாவனையில் நடைமுறையிலுள்ள பண அட்டை முறை பயன்படுகிறது.

இதற்கான பண அட்டை ஒன்றை உரிய நிறுவனத்தில் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டும். பின்னர் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் குடிதண்ணீர் பெறும் நிலையங் களில் இந்தப் பண அட்டையை அதற்கென உள்ள கருவியில் செலுத்தி தமக்குத் தேவையான அளவு குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அடிக்கடி பருவ மழை தவறி வரட்சியால் பாதிக்கப்படும் பிறேசில் நாட்டுக்கு இந்த டிஜிட்டல் முறையிலான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மிகப் பயனுடையதாக உள்ளது.

பண அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணப் பெறுமதி திடீரென முடிவடைந்துவிட்டால் கவலைப்படத் தேவையில்லை.

கருவியில் இருக்கும் 'லோன்' எனக் குறிப்பிட்ட பொத்தானை அழுத்தினால் குடிதண்ணீர் தொடர்ந்தும் கிடைக்கும். மற்று மொரு பண அட்டையை கொள்வனவு செய்யும்வரையில் குறிப்பிட்ட அளவு நீர் கடன் அடிப்படையில் வழங்கப்படும்.

மழையின்றி வரட்சியால் பாதிக்கப்படும் எமது நாட்டுக்கும் இத்திட்டம் நல்ல பலனைத் தரும்.

## களத்திலிருந்து......

அவன் ஓர் இந்திய இராணுவ வீரன்.

நீண்டகாலமாக நாட்டின் எல்லையில் நடைபெற்று வந்த தீவிர யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தான்.

யுத்தம் முடிவுக்கு வந்தது.

அப்போதுதான் பெற்றோரின் ஞாபகம் அவனை வாட்ட ஆரம்பித்தது.

பெற்றவர்களுக்கு ஒரே மகன் அவன்.

ஊரில் அவர்களும் தன் நினைவாகவே இருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

போர் முனையிலிருந்து பெற்றோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினான்.

''அப்பா... யுத்தம் முடிவடைந்து விட்ட செய்தி உங்களுக்குத் தெரிந்திருக்கும். நான் இங்கிருந்து புறப்பட்டு உங்களைப் பார்க்க வரப்போகிறேன்.''

மகனது குரலைக் கேட்ட பெற்றோருக்குப் பேரானந்தம்.

''அப்படியா...? எப்போது வருகிறாய் மகனே?'' அவர்களது கேள்வியில் அன்பும் ஆவலும் நிறைந்திருந்தன.

''விரைவில் வந்துவிடுவேன். இன்னொரு விடயம்... அப்பா, என் நண்பன் ஒருவனையும் என்னுடன் அழைத்து வருகிறேன். யுத்தத்தில் அவன் தனது ஒரு கையையும் காலையும் இழந்து விட்டான். அவனுக்கு என்னைவிட்டால் வேறுயாரும் இல்லை.''

இதைக் கேட்டதும் பெற்றோர்களின் பக்கமிருந்து பேச்சு எதுவும் வரவில்லை. சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு அவனது தாயார் பேசினார்.

''இதோ பார் மகனே... இவ்வாறு ஊனமுற்றுப் போனவர்களுக்கு ஓரிரு நாட்களுக்கு வேண்டுமானால் உதவி செய்யலாம். அதற்கு மேல் எப்படி நம்மால் உதவ முடியும்? அவனை விட்டுவிட்டு நீ மட்டும் வந்து சேர்...!''

''இல்லையம்மா... அவனுக்கு எல்லாமே நான்தான். சொல்லப் போனால் அவன் வேறு, நான் வேறு என்று இல்லை...'' சற்றுத் தயக்கம் கலந்த எதிர்ப்புடன் வந்தது மகனின் குரல்.

''அதெல்லாம் சரிதான்... என்ன இருந்தாலும் கால், கை இழந்த ஒருவனை வைத்துப் பராமரிப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை யோசித்துப் பார்...!''

பெற்றோர்களின் அந்த மறுப்புடன் தொலைபேசி உரையாடல் முடிவுக்கு வந்தது.

சிலவாரங்கள் கழிந்த பின்னும் மகன் வந்து சேர்ந்தபாடில்லை. காத்திருந்த பெற்றோர்களிடம் வந்து சேர்ந்தது மகன அனுப்பிய கடிதம் ஒன்று.

''கை, கால் இழந்த ஒருவனை வைத்துப் பராமரிப்பதில் உங்களுக்கு எவ்வளவு சிரமம் இருக்கும் என்பது எனக்குப் புரிகிறது.

''அதனால் நான் இங்கேயே தங்கிவிடத் தீர்மானித்து விட்டேன். அங்கே வந்து உங்களுக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை'' இப்படி அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான் அவர்களது மகன்.

அப்போது தான் அந்தப் பெற்றோருக்குப் புரிந்தது. போரில் கை, கால்களை இழந்தவன் வேறு யாரும் அல்லன். தங்களுடைய மகன்தான் என்று!.

— தென்றல்


அகில இலங்கை இந்து மாமன்றம் இணையத்தளம்

http://www.hinducongress.org

இந்து மாமன்றத்தின் இணையத்தளம் ஊடாக மாமன்றச் செய்திகளையும், ''இந்து ஒளி'' சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களையும் பார்த்துப் பயனடையுங்கள்.



# இமய மலை உச்சியில் என்னதான் இருக்கிறது?

பனிபடர்ந்த இமய மலையின் உச்சியில் ஏறி இயற்கை வளங்களைக் கண்டு ரசிக்க எத்தனையோ பேருக்கு ஆசை. ஆனால் அதற்கான வாய்ப்புத் தான் அனைவருக்கும் கிடைப்பதில்லை. இருந்த போதிலும் உடல் ஊனமுற்றவர்களும் இமயத்தின் உச்சியை அடைந்து சாதனை படைத்திருக்கிறார்கள். கல்லூரி மாணவர்கள் இமயமலையில் ஏறி சூழல் நலன்கள் பற்றி ஆய்வு நடத்த விருப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் சண்டி காரிலிருந்து மாணவர் அணி ஒன்று இமாசல பிரதேச பனிமுடி ஒன்றில் ஆய்வு நடத்தச் செல்லும் காட்சி இது. இமயமலை உச்சியில் என்ன இருக்கிறது என்பதைக் காண ஆர்வத்துடன் செல்கிறார்கள் இந்த மாணவர்கள். ஆனால் அதே நேரத்தில் இவ்வாறு மாணவர் அணிகள் மலையேறிச் செல்வதை அடுத்து இமயமலை உச்சியில் குப்பை கூளங்கள் அதிகரித்திருக்கின்றன என்று சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

"பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்பது ஒரு பழமொழி. ஆனால் பாம்பு ஒரு கொடிய விலங்கு அல்ல. அன்புடன் பழகினால் பாம்பு ஒரு செல்லப் பிராணியாக மாறி விடக் கூடியது என்று கூறுகிறார்கள் உயிரின ஆய்வாளர்கள்.

இந்தியாவின் மும்பாய் நகரில் சமூகவியல் மாணவியாக இருக்கும் ரூபாலி பாத்கே பாம்புகளுடன் நெருங்கிப் பழகும் துணிவு மிக்கவர். அவர் வீட்டிலேயே பாம்புகள் வளருகின்றன. தம்மிஷ்டப்படி நடமாடித்திரிகின்றன. கொடிய பாம்புகளின் நஞ்சை சேகரித்து மிகவும் சக்திவாய்ந்த விஷக்கடி மருந்துகளைத் தயாரிப்பதில் இவருக்கு ஆர்வம் இருக்கிறது.

இருப்பினும் ரூபாலிக்கு ஒரு தாங்க முடியாத கவலை உண்டு. இவர் வீட்டில் பாம்புகள் நடமாடுவதால் உறவினர்கள், நண்பர்கள் வருவது குறைந்து விட்டதாம்.



# பாம்புடன் நட்புக் கொண்டு வாழ்ந்திட ஆர்வம் உண்டு

# மிருகக் காட்சி சாலையில் உருவான இயற்கை சூழல்

அடர்ந்த வனங்களில் சுதந்திரமாக நடமாடித்திரியும் விலங்குகளை மிருகக் காட்சிச் சாலையில் அடைத்து வைத்தால் அவற்றின் சுதந்திரம் பறிபோய் விடுவது உண்டு. இருந்த போதிலும் மிருகக் காட்சிச் சாலையில் அடைத்து வைக்கப்பட்ட விலங்குகளில் புதிய தலைமுறைகள் உருவாகும் போது அங்கு இயற்கைச் சூழல் பரிணமிப்பது வழக்கம். சினாவிலுள்ள ஜினான் நகர மிருகக் காட்சிச் சாலையில் ஒரே சூலில் நான்கு சிறுத்தைக் குட்டிகள் பிறந்தன. அதே மிருகக் காட்சிச் சாலையில் சில மாதங்களுக்கு முன் மற்றொரு சிறுத்தை ஈன்றெடுத்த இரு குட்டிகளும் இருக்கின்றன. மிருகக் காட்சிச் சாலையில் ஏற்பட்ட இயற்கை சூழலில் இந்த ஆறு சிறுத்தைக் குட்டிகளும் ஒன்றாகப் பிணைந்து குதூகலம் அடைவதை இந்தப் படத்தில் காணலாம்.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



செப்டெம்பர் 30, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் எஸ்.எஸ். சந்திரனுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. எஸ். சுந்தர் அருள்பிரசாத், தெமட்டக்கொடை.
2. எம்.ஆர்.எம். ரிஸ்வி, தலவாக்கலை.
3. தி. வேந்தன், கொழும்பு —05.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (07.10.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில், மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? துணை நடிகராக இருந்தவர் எவருக்கும் சொல்லாமலே கதாநாயகனானவர். தனக்குப் புகழ் சேர வேண்டும் என்றால் தனது நாக்கையே அறுத்து விடுவார் இவர்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

# யானைக் குளியலை காண மகிழ்ச்சியா?

பெண்கள் ஆற்றில் இறங்கி நீராடும் போது அதனை ஒழிந்திருந்து களவாகப் பார்த்து மகிழ்வார்கள் சில போக்கிரிகள். அதே மாதிரியான தவறு தானே இங்கேயும் நடக்கிறது என்று கேட்கத் தோன்றவில்லையா இந்தக் காட்சியைப் பார்த்ததும்? நோர்வே நாட்டு வனவிலங்கு சரணாலயம் ஒன்றில் யானைகள் நீராடிக் களிக்கின்றன. அந்தக் காட்சியைப் பார்வையாளர்கள் கூட்டம் ஒன்று பார்த்து மகிழ்கிறது. அதற்கு அவர்கள் கட்டணம் செலுத்துகிறார்கள் என்பது முக்கிய அம்சமாகும். யானைக் குளியலைக் காண அவர்களுக்கு அத்தனை மகிழ்ச்சி.



# அமெரிக்க தாக்குதலை அடுத்து பின்லேடன் பதிலடி எச்சரிக்கை


புஷ்

அமெரிக்கா மீதான அகோரத் தாக்குதலைத் தொடர்ந்து 26 நாட்களின் பின்னர் — எதிர்பார்த்தவாறே ஆப்கான் மீதான பழிவாங்கும் தாக்குதலை அமெரிக்கா தொடங்கி இருக்கிறது.

அமெரிக்காவின் இந்த யுத்த நடவடிக்கையில் பிரிட்டிஷ் படைகளும் இணைந்து கொண்டுள்ளன.

தாக்குதலுக்கான உத்தரவை தான் பிறப்பித்துவிட்டதாகக் கூறிய அமெரிக்க ஜனாதிபதி புஷ், நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் போரில் நேரடியாகப் பங்காற்றுவதாக அறிவித்திருக்கின்றன என்றார்.

மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த பல நாடுகள் தமது நாட்டில் அமெரிக்கப் படைகளின் பிரசன்னத்துக்கும், அவற்றுடனான தமது படைகளின் கூட்டுக்கும் பூரண ஆதரவு தருவதாகக் கூறியுள்ளன. அவை தமது புலனாய்வுத் துறை, அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளன என்று புஷ் மேலும் கூறினார்.

அதேசமயம் ஆஸ்திரேலியா தனது படைகளை அமெரிக்காவுக்கு அனுப்பி உதவத் தயார் என்றும் பிரான்ஸின் படைகள் அடுத்த சில நாட்களினுள் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து போரிடும் என்றும் பெண்டகன் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை நேரப்படி கடந்த 7ஆம் திகதி இரவு 11 மணியளவில் ஆப்க்ன் மீதான தாக்குதல்களை அமெரிக்க —


பி — 52 குண்டுவீச்சு விமானம்

பிரிட்டிஷ் விமானப் படைகள் ஆரம்பித்தன.

ஆப்கானின் தென்பகுதி நகரான காபூல், கந்தஹார், ஜலாலபாத், ஹிராத் நிலைகள் மீது விமானப் படைகள் முதலில் தாக்குதல் நடத்தின.

கந்தஹார் விமான நிலையத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவு, றேடார் செயற்பாடுகள், குண்டு வீச்சினால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பித்துள்ள இந்த யுத்தம் ஆப்கான் மீதானது அல்ல. அங்குள்ள அல்—குவா தீவிரவாத அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மீதானது என்றும் புஷ் கூறி உள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியிலுள்ள ஹிராத் விமான நிலையத்திலுள்ள எண்ணெய் குதமும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறி உள்ளது.

விமானத் தாக்குதல்களின் போது அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் குரூஸ், ஹமவக் ஏவுகணைகளைத் தாராளமாகப் பயன்படுத்துகின்றன என்று பெண்டகன் வட்டாரங்கள் கூறின.

தாக்குதல் ஆரம்பமாகி சொற்ப நேரத்தில் அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகன், செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

ஆப்கானிஸ்தான் மீதான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ஹம்ஸ்பீல்ட், அமெரிக்கக் கூட்டுப் படை பிரதானிகளின் தளபதி றிச்சார்ட் மிரஸ் ஆகியோர் அங்கு விளக்கமளித்தனர்.

தமது முதற்கட்ட யுத்த முன்னெடுப்பு நடவடிக்கையில் 15 தரைக் குண்டு விமானங்களும் 25 வான் தாக்குதல் விமானங்களும் ஈடுபட்டுள்ளன என்று றிச்சார்ட் மிரஸ் அப்போது தெரிவித்தார்.

முதற் கட்டத் தாக்குதல்களில் சுமார் 50 டொமஹொக் ஏவுகணைகள் அமெரிக்க — பிரிட்டிஷ் படையினரால் ஏவப்பட்டுள்ளன.

வான் தாக்குதலின் ஆரம்பத்தில் பி—2 குண்டு வீச்சு விமானங்கள், மிசோரியிலுள்ள வைற்மான் தளத்திலிருந்து புறப்பட்டு குண்டு வீசிவிட்டு இந்து சமுத்திரத்திலுள்ள டியோகோ கார்சியா தளத்தைச் சென்றடைந்தன. பின்பு அங்கிருந்து பி—1 லான்ஸர், பி—52 சமர் விமானங்கள் புறப்பட்டுச் சென்றன.

யூ.எஸ்.எஸ். கார்ல் வின்சன், யூ.எஸ்.எஸ்.என்டர்ப்ரைஸ் ஆகிய விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து 25 குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் சென்று தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்பின.

யூ.எஸ்.எஸ் பிலிப்பின் ஸீ கப்பலிலிருந்து குறூஸ் ரக ஏவுகணைகளும், யூ.எஸ்.எஸ். ஓ பிறின் கப்பலிலிருந்து தகர்க்கும் ஏவுகணைகளும், யூ.எஸ்.எஸ்.ஜோன் போல் ஜோன்ஸ் கப்பலிலிருந்தும், யூ.எஸ்.எஸ். பௌஎல் கப்பலிலிருந்தும் நெறிப்படுத்தித் தகர்க்கும் ஏவுகணைகளும் ஏவப்பட்டன.

இந்தக் கடற்கலங்களுக்கு உதவியாக யூ.எஸ்.எஸ்.ப்ரொவை டென்ஸ், பிரிட்டனின் எச்.எச்.என்.ட்ராவல்கர் கப்பல்களும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

தொடரும் யுத்தத்தில் பன்னாட்டுப் படைகளின் வளங்களும் மேலதிகமாகப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதிநவீன தொழில்நுட்பத்திறனுடைய விமானத் தாக்குதல்களால் ஆப்கான் தலைநகர் காபூல், கந்தஹர் பகுதிகளில் முற்றாக மின்சாரம் தடைப்பட்டது.

அப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டபோதும் மக்கள் சாரிசாரியாக அண்டை நாடுகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்துள்ளனர். சுமார் இரண்டரைக் கோடி மக்கள் தொகை உள்ள ஆப்கானிஸ்தானில் பத்து லட்சம் பேர் ஏற்கனவே இடம்பெயர்ந்துவிட்டனர். இன்னும் 15 லட்சம் பேர் ஆப்கானை விட்டு வெளியேறும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஆப்கான் அகதிகளுக்கு 37500க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களையும் மருந்துப் பொதிகளையும் சி 17 ரக விமானங்கள் மூலம் அமெரிக்கா வானிலிருந்து போட்டது.

அதேசமயம் பாகிஸ்தான் ஆப்கானுடனான தனது 240 கிலோ மீற்றர் நீளமான எல்லையை மூடிவிட்டது. ஏற்கனவே இருபது லட்சம் பேர்வரை ஆப்கான் — பாக். எல்லையில் கூடாரங்கள் அமைத்துக் குடியிருக்கும் வேளையில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி உணவுத் தட்டுப்பாடு மிக்க ஒரு சூழலை உருவாக்கும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

தாக்குதல் ஆரம்பமாகி சொற்ப நேரத்தில் கட்டார் தொலைக்காட்சியான அல் ஜஸிராவுக்கு பின்லேடன் நேரடிப் பேட்டி ஒன்றை வழங்கினார்.

இந்தப் பேட்டியில் ''அமெரிக்கா இஸ்லாத்தின் மீதான தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. இதன் விளைவாக அது மேலும் பாரிய அனர்த்தங்களைச்


பின்லேடன்

சந்திக்க நேரிடலாம். அல்லாவின் அருளால் நாம் பதிலடி கொடுக்கும் புனிதப் போருக்குத் தயாராகிவிட்டோம். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கான் படையினர் தமது புனிதப்போருக்கு எல்லையை நோக்கி விரைந்துவிட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை — பிரிட்டன் தனது விசேட படையணியை உஸ்பெகிஸ்தானை நோக்கி நகர்த்தி வருகிறது. ஏற்கனவே அங்கு சுமார் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

படை நடவடிக்கைகள் ஆப்கானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள், விமானப்படைத்தளம், விமான எதிர்ப்பு நிலைகள் ஆகியவற்றை இலக்குகளாகக் கொண்டே மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையில் கந்தஹார் விமானத்தளம் தகர்த்து அழிக்கப்பட்டது. குறைந்தது அல். குவாடாவின் மூன்று பயிற்சி முகாம்கள் அழிக்கப்பட்டன.

காபூல் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 15 நிமிடங்களில் கந்தஹார் மீது விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று ஆப்கானின் வடக்கு முன்னணியில்


பி — 2 குண்டுவீச்சு விமானம்

பாதுகாப்பு அமைச்சர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான தலிபான் தூதுவர் தாக்குதல் தொடர்பாக கருத்து வெளியிடுகையில், அமெரிக்காவின் இந்தத் தாக்குதல் ஒரு தீவிரவாதச் செயல். ஆனால் ஆப்கான் பதிலடி கொடுக்கும். அல்லாவின் அருளால் பின்லேடனுக்கும் முல்லா அகமட் ஓமருக்கும் எந்த ஆபத்தும் நிகழவில்லை என்றார்.

இந்த மோதல்களில் சொத்து அழிவு, உயிர் சேதங்கள் என்பன குறித்த சரியான விவரங்கள் இதை எழுதும்வரை வெளியாகவில்லை.

— சேனாவரையன்.



# திருமலை — மூதூர் கடல் பயணம் சோதனை தொடர்கிறது தினமும்

மூதூர் — திருகோணமலை கடற் பயணப் போக்கு வரத்துச் சேவையில் இரு சிறிய படகுகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் படகுச் சேவைகள் அடிக்கடி ரத்துச் செய்யப்படுகின்றன.பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தினமும் சுமார் 1,500 பேர் இந்த படகுச் சேவையைப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பலர் தொழில் நிமிர்த்தம் மூதூரில் இருந்து திருமலைக்கு வருபவர்கள். படகுச் சேவை திடீர் திடீர் என ரத்துச் செய்யப்படுவதால் இவர்களில் பலரும் கடமை முடிந்து மூதூர் திரும்ப முடியாத நிலைமை ஏற்படுகிறது.

பயணிகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் 'சேருவில — 2' என்ற பயணிகள் கப்பல், சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் பின்னர் இக்கப்பலும் பழுதடைந்த நிலையில் பல மாதங்களாக திருமலைக் கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வடக்கு — கிழக்குத் தமிழ் எம்.பிக்களின் முயற்சியால் இக்கப்பல் கொழும்புத் துறை முகத்துக்குத் திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டது.

இன்னொரு கப்பலின் துணையுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு இழுத்து வரப்பட்ட 'சேருவில — 2' கப்பலின் திருத்த வேலைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் பயணிகள் சேவைக்காக திருமலைத் துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆயினும் கப்பல் இன்னும் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. கப்பல் பயணிகளுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கட்டண உயர்வுகளுக்கெதிராக மக்கள் குரலெழுப்பியதைத் தொடர்ந்தே இப்பயணிகள் சேவை நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் 40 ரூபாவாக இருந்த பயணக் கட்டணம் திடீர் என 70 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகளாலேயே சேவையில் ஈடுபடுத்தப்படாமல் இந்த கப்பல் துறை முகத்திலேயே தரித்து நிற்கிறது. இதனால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர்.

கடல் கொந்தளிப்பு அதிகமாக உள்ள காலங்களில், தற்போது போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் சிறிய படகுகளில் பயணங்களை மேற்கொள்ள முடிவதில்லை.

என்று பயணிகள் அங்கலாய்க்கின்றனர்

— சுதன்



பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் மூதூர் கிழக்கில் இருந்து மூதூர் நகருக்கு மக்கள் விறகு எடுத்துச் செல்கின்றனர்.

# மீன்பிடித்தொழிலை கைவிட்டு விறகு வெட்டும் மீனவர்கள்

திருகோணமலை மாவட்டத்தில் போர் அனர்த்தங்களினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொழிலின்றிப் பெரும் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். மீனவர் குடும்பங்கள் பலவும் தொழில் இழந்த நிலையில் வறுமையில் வாடுகின்றன.

கிண்ணியாவில் ஆரம்பித்து கடல் ஓரமாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சூடைக்குடா கிராமம் வரையுள்ள பிரதேசத்தில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட மீனவக்கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

அண்மைக் காலமாக மேற்படி பிரதேசங்களில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் கடற்படைப் படகுகள் இல்லாத சமயங்களிலும், இரவு நேரங்களிலுமே பயந்து பயந்து மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இந்நிலை காரணமாக மீனவர்கள் பலர் மீன்பிடித் தொழிலைக் கைவிட்டு விறகு வெட்டுவதிலும் கூலி வேலை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரங்கள், வன்செயல்கள் காரணமாக கணவன்மாரை இழந்த விதவைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

கணவனை இழந்த மனைவிமார் தமது பிள்ளைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு கல்வி கற்பிப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் விறகு சேகரித்து, அவற்றை மூதூர் நகருக்கு எடுத்துச் சென்று விற்றுத் தான் பலர் வாழ்க்கை நடத்துகின்றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட விறகு சேகரித்து மூதூர் நகருக்கு எடுத்துச் செல்லும் காட்சியை மூதூர் கிழக்குப் பகுதியில் காண முடிகிறது.

மூதூர் கிழக்குப் பகுதி மக்கள் துன்பங்களைத் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் என்பதால் தான் மேலும் மேலும் அவர்களைத் துன்பம் வாட்டுகிறதா?



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கடந்த 5ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஒரு மணி நேர அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். திருகோணமலையிலும் இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெற்றது. பிரதான வீதியில் உள்ள கூட்டுத்தாபன அலுவலகத்தின் முன் ஊழியர்கள் பதாகைகளுடன் நிற்கின்றனர். — எஸ்.எஸ்.ஆர்

# கப்பல்துறை கிராமத்தின் தண்ணீர் பிரச்சினை தீரும்

திருகோணமலை நகரிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கப்பல் துறை கிராமம்.

1995 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்கின்றன.

சமீப காலமாக இந்தக் கிராமத்தில் தண்ணீருக்கு பெருந்தட்டுப்பாடு நிலவி வருகிறது. குறிப்பாக கிராமத்தில் உள்ள சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் குடி தண்ணீர் பெறுவதற்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தனர்.

பாடசாலைக்கு அண்மையிலுள்ள பொதுக் கிணற்றில் நீர் வற்றியதால், நிலைமை மேலும் மோசமடைந்தது.

தற்பொழுது திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதியுதவியுடன் இப்பகுதியில் ஏழு கிணறுகளை அமைந்துத் தர முன் வந்துள்ளது.

சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் நலன் கருதியும் ஒரு கிணறு அமைத்துக் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய கிணறுகளை அமைப்பதுடன் நாற்பது பழைய கிணறுகளை துப்புரவு செய்யவும் சங்கம் முன்வந்துள்ளது.

இவற்றோடு சரஸ்வதி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை புனரமைக்கவும்; விளையாட்டுத் திடல் ஒன்றை புதிதாக நிர்மாணிக்கவும் சங்கம் முடிவு செய்துள்ளது.

இவை தொடர்பான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தனர்.

—தங்கம்

# சேதமடைந்த பாலங்களை திருத்த எவரும் இல்லையா?

மூதூர் பிரதேசத்தின் மிக முக்கியமான போக்குவரத்துப் பாலங்கள் நீண்ட காலமாகப் பழுதடைந்த நிலையில் கிடக்கின்றன.

'வீதி அதிகார சபை நித்திரை செய்கிறதா?' என்று கோபத்தோடு கேட்கின்றனர் பாதிக்கப் பட்ட மூதூர் பிரதேச மக்கள். 'மக்கள் நலனில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் கூட இந்த விடயத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கின்றாரே!' என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தின் பிரதான போக்குவரத்துக்குரிய வீதியில், பொதுச் சந்தைக்கு அருகில் அமைந்திருக்கும் பாலமே மிகப் பழைமையானதும் முக்கியமானதுமான பாலமாகும்.

இப் பாலத்தின் கோலம் பார்ப்பவர்களின் மனதில் பரிதாபத்தை உண்டு பண்ணுகிறது.

பாலத்தின் பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. அது மட்டுமன்றி பயணிகளின் பாதுகாப்புக்காக பாலத்தின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டிருந்த தடைக் கம்பங்களும் உடைந்த நிலையில் நீரில் தொங்கியவாறு உள்ளன.

இதனால் இப்பாலத்ினூடாக வாகனங்களைச் செலுத்திச் செல்வதில் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். மிகக் குறுகிய காலத்தில் பாரிய இடர்களை இப்பாலம் ஏற்படுத்துமென பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர மூதூர் மின்சார நிலைய வீதியிலுள்ள பாலமும் கட்டைபறிச்சான் பாலமும் சிதைவுற்று ஓட்டை உடைசலாகக் காணப்படுகின்றன. இக்குறைபாடுகள் சம்பந்தப்பட்டவர்களது காதில் விழுமா?

# பித்தன் பதில்கள்

**ப. ஆனந்தகுமாரி, தெஹிவளை.**

கே : என் கணவர் எதற்கெடுத்தாலும் பாம்பாகச் சீறுகிறாரே!

ப : *நீங்கள் மகுடி வாசிக்கத் தெரிந்து சொல்லுங்கள்.*



**ந. மங்களேஸ், கொக்குவில்.**

கே : அச்சுக்கலை வளர்ந்ததெப்படி?

ப : *தாளுக்கும் — மையுக்கும் இடையில் ஏற்பட்ட காதலில் பிறந்து வளர்ந்ததே அச்சுக்கலை!*

**லோ. துஷா, காரைதீவு.**

கே : பாடல்களே இல்லாமல் தமிழ்த் திரைப்படங்கள் வெளிவர ஆரம்பித்து விட்டனவே?

ப : *கதையே இல்லாமல் படங்கள் வருகின்றபோது இது எம்மாத்திரம்?*

**க. வரதன், அராலி.**

கே : பித்தனே! கொழும்புப் பெண்களின் உடைக் கலாசாரம் பற்றி யாது கூறுவீர்?

ப : *கொழும்புப் பெண்கள் 'உடை' அணிகிறார்களா? மன்னிக்கவும்; நான் பார்த்ததில்லை!*

**சி. மருதன், கோண்டாவில்.**

கே : நான் எதையும் தாங்கும் இதயம் கொண்டவன். திருமணம் செய்யலாமா?

ப : *எதையும் தாங்கும் இதயம் மட்டும் போதாது. உதையும் தாங்கும் உடம்பும் வேண்டும்.*



**எ. மரியன், பாஷையூர்.**

கே : பெண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என்று இப்போது ஆண்களும் பரவலாகக் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்களே ஏன்?

ப : *சமையல், துவையல் என்று எல்லா வீட்டு வேலைகளையும் தனியே செய்ய முடியாததால் தான்!*

**எம். ஆனந், களுபோவெல.**

கே : பெண்ணுக்கு அழகு தருவது எது?

ப : *ஆடவரின் கண்ணுக்கு விருந்து தருவது அது.*

**அ. காந்தி, பம்பலப்பிட்டி.**

கே : கரும்பில் இனிப்பது அடிப் பகுதி காதலில் எது?

ப : *காதலிலும் அதே போலத் தான்.*

**எஸ். மாறன், வெலியமுனை.**

கே : உயரமான பெண்ணைத் திருமணம் செய்யலாமா?

ப : *எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட நேரிடுமே..!*

**அ. சோதிநாதன், மட்டக்களப்பு.**

கே . காதலுக்கு, நிறம் இருக்கிறதா?

ப : *இந்தக் காலத்துக் காதலர்கள் பச்சை பச்சையாகக் கதைக்கிறார்களே!*

**பிரவீன், மருதானை.**

கே : மகிழ்ச்சியின் எல்லை எது?

ப : *குறைந்த பட்சம் 17 வருடங்கள் என்கிறது ஐ.தே.க.*

**எஸ். சரத், பாலாவி.**

கே : இந்தக் கால வாழ்க்கை எப்படிப்பட்டது?

ப : *பெற்றோரை முதியோர் இல்லங்களில் விட்டுவிட்டு பிள்ளைகளைப் பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைத்துவிட்டு நாயோடு 'வாக் கிங்' போகும் நவீன வாழ்க்கை!*



**சிந்துபைரவி, பொன்னாலை.**

கே : பெண் கவிஞர் தாமரை பற்றி...?

ப : *வசீகர பாடலால் இதயங்களை வசீகரித்தவர். இவருடைய 'இஞ்சாருங்கோ' பாடலுக்கு இலங்கை ரசிகர்கள் கிளீன் போல்ட் ஆகியிருக்கிறார்கள். ஆங்கிலம் கலக்காது இரட்டை அர்த்தம் வராது. கவனமாகக் கவிபாடும் கலைஞர் இவர்.*

**ம. சாந்தி, களுதாவளை.**

கே : பெண்கள் அதிகம் வாசனைத் திரவியங்களை பயன்படுத்துவது ஏன்?

ப : *வாசமுள்ள மலர்களால் தானே வண்டுகளை வளைக்க முடியும்.*

# வவுனியாவில் தொடரும் மர்மக் கொலைகள்!

## துண்டுப்பிரசுரங்கள் ஏற்படுத்திய பரபரப்பு

வவுனியாவில் அண்மையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவமும் அதனைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட மர்ம அச்சுறுத்தல்களும் இயல்பாகவே அங்கு நிலவும் பதற்றநிலையை மேலும் அதிகரிக்க வைத்துள்ளன.

கடந்த 3 ஆம் திகதி வவுனியா பண்டாரிக் குளம் பகுதியில் தாறுமாறாக வெட்டிக் கொல்லப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள குளக்கட்டுக்கு அருகில் காணப்பட்ட சடலத்தில் தலை, கழுத்து, கை என ஏழு இடங்களில் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. இறந்தவர் இள நீலநிறடெனீம்காற்சட்டையும்பெனியனும் அணிந்திருந்தார்.

இறந்தவர் ராமசாமி சதீஸ்குமார் (வயது 18) என பின்னர் அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு விரைந்த வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் விசாரணைகளை நடத்தினார்.

இறந்தவரின் காற்சட்டைப் பொக்கட்டுக்குள் இருந்து வவுனியாவில் தங்கும் வதிவிட அனுமதிப் பத்திரங்களுக்கான சிபார்சுக் கடிதங்கள் சில மீட்கப்பட்டன.

இவர் வெளியிடங்களிலிருந்து வவுனியாவுக்கு வருபவர்களுக்கான வதிவிட அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும்தரகராகச்செயற்பட்டுவந்தார்எனநம்பப்படுகிறது.

இந்தச் சம்பவம் வவுனியா நகரை மிகுந்த பரபரப்புக்குள்ளாக்கியிருந்தது.

படையினர், ஆயுதக்குழுக்கள், சில பாதாள உலகக் குழுக்கள், புலிகள் என அனைவரினதும் நடமாட்டங்கள் மிகுந்த வவுனியாவில் இந்தக் கொலையை யார் செய்திருப்பார்கள்? கொலைக்கான காரணம் என்ன? போன்ற கேள்விகள் அப்பகுதி மக்களை துளைத்தெடுத்தன. இந்த மர்மக் கொலைச் சம்பவம் வவுனியா நகரையே பீதியில் ஆழ்த்தியது.

சடலம் வவுனியா ஆதார ஆஸ்பத்தியில் சேர்க்கப்பட்டது.

இந்தக் கொலை இரத்தம் காயும் முன்னரே அடுத்த நாள் காலை வவுனியா நகரில் ஒட்டப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்கள் நகர மக்களை மேலும் பரபரப்புக்குள்ளாக்கின.

கையால் எழுதப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வவுனியா விபுலானந்த கல்லூரி, முனியப்பர் கோயில் ஆகிய இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

அவற்றில் முதல் நாள் கொலை செய்யப்பட்ட சதீஸ்குமாரின் பெயரும் அதற்கு முன் கொலை செய்யப்பட்ட ஒருவரின் பெயருமாக பத்துப் பேரின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.

தொடர்ந்தும் தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டால் மீதிப் பேருக்கும் இதே கதிதான் என்று எச்சரிக்கும் வசனங்களும் அந்தத் துண்டுப் பிரசுரங்களில் இடம் பெற்றிருந்தன.

துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்ட விவகாரம் அதிகாலை வேளை அப்பகுதியில் காட்டுத் தீ போல் பரவிவிட்டது.

துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்ட இடங்களை மக்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது.

ஆனால், உடனடியாக அப்பகுதிகளுக்கு வெள்ளை வானில் விரைந்து வந்த கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினர் துண்டுப் பிரசுரங்களை அகற்றி எடுத்துச் சென்று விட்டனர்.

ஆனாலும், அகற்றியது துண்டுப் பிரசுரத்தை மட்டுமே. மக்கள் மனதில் பதிந்த பீதியை அல்ல.

அப்பகுதியில் ஒரே பரபரப்பு.

பல்வேறு ஆயுத அமைப்புக்களும் உலாவும் வவுனியாவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதால் சம்பவத்துக்கான காரணத்தை ஊகிப்பது சற்று சிரமமானது என்பது உண்மையே.

கொல்லப்பட்டவரின் தந்தை ராமசாமி, நீதிவானுக்கு வாக்கு மூலம் அளிக்கையில் தனது மகனிடம் பொலீஸாரும், இராணுவத்தினரும் அடிக்கடி வந்து போவார்கள் எனக் கூறியிருக்கிறார்.

அதே சமயம், பிரஸ்தாப நபர் வெளியிடங்களிலிருந்து வவுனியா வருபவர்களுக்கு வதிவிட அனுமதிப் பத்திரம் வழங்கும் தரகராகச் செயற்பட்டு வந்திருக்கிறார் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இராணுவம், பொலீஸ் ஆகியோருடனான தொடர்புகள் இவருக்கு இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அதே வேளை:—

வவுனியாவில் மாற்றுத் தமிழ்க் குழுக்கள் அல்லது படையினர் அல்லது பொலீஸார் இந்தச் சம்பவங்களுக்கான பொறுப்பை புலிகளின் தலையில் கட்டி விடுவதற்கு இப்படியான துண்டுப் பிரசுரங்களை ஒட்டி இருக்கலாம் என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர்.

இன்னும் இது மர்மமாகவே உள்ளது.

— ஆதித்யன்



### நிழலைத் தேடி!

நிழலைத் தேடி நிஜத்தைக் கைவிடாதே
நிஜத்தைத் தேடி நிழலைக் கைவிடு
காதலின் நிழல் திருமணம் வரை
காமத்தின் நிழல் விடியல் வரை
கனவின் நிழல் விழிக்கும் வரை
கற்பனையின் நிழல் உறங்கும் வரை
கோழையின் நிழல் வீரம் வரை
தோல்வியின் நிழல் வெற்றி வரை
மரத்தின் நிழல் வெய்யிலின் வரை— உன்
வாழ்வின் நிழல் நீ சாகும் வரை!

இ.ராதலக்ஷ்மி
கொழும்பு—13.

### நெருப்பு மழை

நெஞ்சினில் பொழியுது நெருப்பு மழை— அவள்
நேசம் தந்தது இந்த நிலை
வஞ்சனை செய்த பெண்ணாலே— என்
வசந்தக் கனவும் பொய்யாச்சே!

அலையின் தேக் கடலோரம் — அவள்
அன்று சொன்ன சொல்லெல்லாம்
விழியில் கண்ணீர் நதியாச்சே—பெரும்
விசனம் ஒன்றே விதியாச்சே!

இனியொரு ஜென்மம் எனக்கிருந்தால்— கடவுள்
இந்தக் காதலைத் தர வேண்டாம்
எனதெழில் வாழ்வில் காதலெனும் எரிமலை மட்டும்
வரவேண்டாம்!

இ.விஜயேந்திரன்,
வசாவிளான்.

### அன்பு?

விடுமுறை நாட்களில் தாயன்போடு
ஆட்டின் உடலிலிருந்து
உண்ணிகளை அகற்றுகிறார்
இறைச்சிக்கடைக்காரர்

— யாரோ

### அலைகள்

திரும்பத் திரும்ப நீ ஏன்
தரைக்கு வருகிறாய்?
நம் மண்ணில் செந் நீரைக் கழுவிடவா?
சமாதானம் வந்து விட்டதா எனக் கண்டிடவா?

காவ்யா, கிளிநொச்சி.

# கவிதைச் சமர்

(சமர் புரியும் கவிதைகளுக்குப் பதில் கவிதைகள்)

### இருப்பிடத்தை மாற்றும் இனி

சொற்களின் கோர்வை எல்லாம்
சுந்தரக் கவிதையென்று வெளிப்
பற்களைக் காட்டி வெறும் 'பாப்பா'டும் கவிஞர்காள்!
பத்திரத்திலுள்ள பா அமைப்பு, சீர்தளைகள்
கற்காலம் கடந்திப்ப போனதனால்..... அதை விடுவோம்
கவியினுள்ளே உள்ளதென்ன? காத்திரமா? வெறுங்காற்றா?
சொற்பமாய் ஏதும் சுரணை உள்ளே இருக்கிறதா?
சுட்டாலும் வருமா? பார்ப்போம்.

நாம் யார்? நம் இருப்பென்ன? அடிப்படையில்
நம்மூல வேருக்கு நடக்கும் நிலையென்ன?
சாம்பலாய்ப் போகும் நம் சந்ததியின் கதைவிட்டு
சட்டை, பாவாடை, உட்சதைகள் என்றே நீர்
அம்மணமாய்ப் பார்த்தால்..... அரியண்டம் என்றுணரும்
அழகிகளைப் பற்றியெல்லோ உம்பாட்டு, அடிமட்டம்
உம் மாநிலத்தின் சுதந்திரத்து விளை நிலத்தில்
எதுவரைக்கும் போச்சு உம் கவிப்பார்வை?.....

வேல் விழியென்றா சொல்ல வரும்? விழிகளினை
வேவு பார்க்கும் அதன் வீச்சம் அறிவீரோ?
கால் அழகைப் பாடும், காற்புள்ளிகளே நீவிர்
கடந்தே அது பாயும் முட்கம்பி அறிவீரா?
நூல் என்றா சொல்லி நொடிப்பீர்? இடையழகை
நூறு முறை விழுப்புண் அடைந்த கதை அறிவீரா?
ஆலிலையாம் வயிறழகு அது தாங்கும் கந்தகத்தை
அணிய வேண்டாம், கண்ணால் பார்த்தேனும் இருப்பீரா?

உம்மை நான் சொல்லிக் குற்றமில்லை உண்மையிலே
உம் பார்வை அனுபவங்கள் உணர்வலைகள் எல்லாம் தான்
வெம்பி வெடித்து வெளியேறும் பிழையில்லை
விதை அறிந்து கவிஞன் மறைபொருளாய்ச் சொன்னதுபோல்
அகல விழி திறந்து ஆழ்ந்து கவி செய்வீர்.....
அரவணைக்கத் தமிழ்த்தாயும் ஆயத்தம், அவளின் நற்
தாகத்தைச் சற்று தலைமேலே கொண்டுவந்து
தரமாய்க் கவிதையினித் தாரும்.

— தி.திருக்குமரன்

### விழி அகட்டக் கவி

விழி அசைவால் பிறந்த கவி
வித்து ஒன்று முளைத் தெழுந்து
பழி எறியும் தொடராகப்
பார்த்தும் நான் சுடர் ஒளியில்
களித் திருந்து படித்துவிட்டுக்
கட்டி வைக்க விருப்பமில்லை!
விழி இமைக்குள் புதைந்திருந்து
வேர்த்த தனால் அது எழுந்து
நலிந்திடு மோர் கவித்துறைக்கு
நல்லதொரு பதில் தரும் — பார்!

மரங்கள் பழுத்தால் வௌவாலை
மாலை சூட்டி அழைப்பதில்லை! — பூ
சுரந்த அமுதம் பருக வண்டைச்
சேதி சொல்லி அழைப்பதில்லை!
இருந்த படியே இனப்பெருக்கம்
ஏற்றவாறு நடந்திடும் பார்!
பொருந்தும் திறத்தால் வல்லதுகள்
பாரில் வாழும் உணர்ந்திடுவீர்!

அழகென்று வர்ணித்து கவி செய்தால்
ஆணுக்கும் பொருந்தப்பா வரவேண்டும்!
வளமென்று பெண்கவிகள் செய்குவரா?
வீணாக எழுதுகோலை ஊன்றுவரா?
நலமன்று நம் கவிகள் விழி அசைவால்
நாணாது கவிசெய்தல் பெரிதன்று;
தளமொன்று கவிக்கென்று தரமொன்று
தமிழுக்கும் இருக்கப்பா — தர வேண்டும்!

பெண்ணைப் பேரழகை வான்மதியை
பேடு நடை காட்டி விடும் காதலினை
கண்ணைப் பாடிவைத்த பாவலர்கள்
காலமொன்றின் தேவையென்று பாடிச்சென்றார்!
மண்ணை, பேரிடியை போர்க் கொடுமை,
மானுடங்கள் சீரழியும் கேவலத்தை
பெண்மை பாதையிலும் வெந்தழியும்
பேடித்தனம் வீழ்வதற்காய்ப் பாடிடுவோம்!
இன்னும் ஏன் தயக்கம் இன்கவிகாள்
எம் விழிகள் அகட்டிக் கவி செய்திடுவோம்.

சி.சத்தியகுமாரன், சம்மாந்துறை.

### டயறி

உன்னைத் தேடிப் பிடித்து
என் உள்ளத் துணர்ச்சிகளை
சேமித்து வைக்க........
சினேகிதத்தைத் தேடினேன்.
ஆனால் நீ கூட
ஆத்ம நண்பனில்லையே !!
ஏனென்றால்.......
ஒரு வருடந்தானே
உன் உத்தரவாதம்.
இருந்தும் நான்
என் இதய ராகங்களை
உன்னிடம் தானே
ஒளிக்காமல் சொல்லுகிறேன்.

எம்.வி.எம். அன்சார்
முள்ளிப் பொத்தானை.

### மீண்டும் அழைக்கிறது!

எண்ண ஓட்டங்களை
முந்திக் கொண்டு
நானும் எழுந்து ஓடுகிறேன்
என் மண்ணை விட்டு!

எலும்புத் துண்டுகளுக்காய்
எச்சில் வடிக்கும்
நாய்கள் கூட்டம்
மெச்சிக் கொண்டே
மொய்த்துக் கொள்கிறது
அந்தப் பேய்கள் கூட்டத்தை!

எனக்கு தெரியும்
மடி கனக்கும் மட்டும்
மந்திர வித்தை காட்டும்
இந்தக் கூட்டம்
மக்களை ஒரு நாள்
மறந்து விட்டுப் போகுமென்று!

மீண்டுமொருமுறை
இங்கே
தோண்டும் படலம்
தோன்றக் கூடாதென்ற
வேண்டுதலுடனேயே நானும்
நடைப்பிணமாக
நாட்டை விட்டு ஓடுகிறேன்!

ஆனாலும்
என் அடிக் காலில் ஒட்டிய
தாய் மண்ணின் வாசனை
என்னை மீண்டுமழைக்கிறது
தன்னை மீட்டெடுக்க வேண்டுமென்று!

—புதுமை

சுடர் ஒளி சிறுகதை

# அவள் வாழ்க்கை

ரமா

அவள் வழமைபோல் தன் பொழுதைக் கழிக்க ஆலமரத்தடிக்குச் சென்றாள். கையில் இருந்த றேடியோவை ஒலிக்க விட்டாள். அப்போது "ஓ நெஞ்சே ஓ நெஞ்சே, என்னை மறவாதே" என்ற பாடல் ஒலித்தது. சுதன் பாடு வது போல் அவளுக்குப் பிரமை. அப்போது அவள் நினைவுகள் எல்லாம் கடந்த காலத்தை நினைவு படுத்தின.

ரேகா, கல்லூரியில் படிக்கும் மாணவி. ராமதாஸ், ராகினி தம்பதிகளின் கடைசி வாரிசு அவள். அவளுக்கு வீட்டில் எல்லாச் சுதந்திரங்களையும் பெற்றோர் கொடுத்தனர். ஆனால் காதல் என்ற வார்த்தைக்கு மட்டும் இடம் இருக்கவில்லை. அவள் கல்லூரியில் படிக்கும் போது சுதனும் அவளும் நெருங்கிய நண்பர்கள். நாட்கள் செல்லச் செல்ல நண்பர்கள் காதலர்கள் ஆனார்கள்.

தாம் தங்கி இருந்த அறைக்குச் சமீபத்திலுள்ள ஆலமரத்தடியில் வழமை போல் அவர்கள் தம் காதல் மொழிகளைப் பேசி மகிழ்ந்தனர். அவளும் அவனும் உயிருக்கு உயிராகக் காதலித்தனர். பரீட்சை முடிந்து லீவு நாள் வந்தது. அவள் வீடு செல்லத் தயாரானாள். விரைவில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினர்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. அவளுக்குத் திருமணம் செய்து வைக்க அவளுடைய வரவை பெற்றோர் எதிர் பார்த்திருந்தனர். தாம் மாப்பிள்ளை பார்க்கப் போவதை அவளிடம் கூறினர். அவள் திருமணத்தை வெறுத்தாள். தான் காதலித்த சுதனையே திருமணம் செய்ய வேண்டும் என்பது அவள் ஆசை. ஆனால் அதைச் சொல்ல முடியாத நிலையில் தவித்தாள். வீட்டில் காதல் என்ற வார்த்தைக்கு இடமில்லை. தன் காதலைத் தெரியப்படுத்த முடியாது தவித்தாள். அதனால் திருமணத்திற்கு இப்ப என்ன அவசரம் என்றாள்.

அவளது தந்தை அதனை ஏற்கவில்லை. வயது வந்தவுடன் திருமணத்தை நடத்திவிட வேண்டும் இல்லாவிடில் குடும்ப கௌரவம் என்னவாகும் என கௌரவப் பிரச்சினையைக் கிளப்பினார். நான் பார்க்கும் மாப்பிள்ளையை நீ கலியாணம் செய்யவேணும். இல்லாவிடில் என்னையும் அம்மாவையும் உயிருடன் பார்ப்பாய் என நினைக்காதே என்று ஏசினார்.

அவளது திருமணப் பொறுப்பை ராமதாஸும் அவரின் நண்பர் ராஜனும் சேர்ந்து ஏற்றனர். மாப்பிள்ளை அமெரிக்க யூனிவேசிட்டியில் கொம்பியூட்டர் என்ஜினியரிங் செய்கின்றார். அடுத்த மாத முடிவில் படிப்பு முடிந்து வருகிறார். வந்து திருமணம் செய்து மணப் பெண்ணை அழைத்துச் செல்லப் போகிறார் என்ற விடயங்களை ராஜன் தெரிவித்தார்.

தம் மகளுக்கு ஏற்ற விதத்தில் மாப்பிள்ளை படிப்பு, நிறம், பணவசதி கொண்டவர் என்றதும் தந்தையும் விருப்பம் தெரிவித்தார். மணமகன் வீட்டாருக்கும் பெண்ணைப் பிடித்து விட்டது. தகுதிக்கேற்ற வகையில் சீதனம் கொடுக்கப்பட்டது.

அவளது திருமணத்தை அருகிலுள்ள கோயிலில் மிகவும் விமரிசையாக நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அன்று திருமண நாள். அவளுக்கு பல அலங்காரங்கள் செய்யப்பட்டன. அவளுக்குத் தன் வாழ்க்கையில் இறுதிக் கட்டத்தை அடைவது போல் ஒரு பிரமை. முகூர்த்த நேரம் நெருங்க மணமகள் மணவறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அந்தணர்கள் மந்திரம் ஓத மங்கள வாத்தியங்கள் முழங்க அவள் கழுத்தில் திரு மாங்கல்யம் கட்டப்பட்டது. ரேகா அப்போது தான், தன் கழுத்தில் தாலி ஏறியதை உணர்ந்தாள். அவளுக்கு அது தாலியாகத் தென்படவில்லை. தன் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்குப் போடப் பட்ட ஒரு தூக்குக் கயிறாகவே தென்பட்டது. மனதில் சுதனின் நினைவுகள். கழுத்தில் கட்டிய தாலியை ஏற்கப் பொறுக்காது அவள் மனம் துடித்தது. எல்லோரும் மகிழ்ச்சியில் காணப்பட்டனர். தான் மரணவேதனையில் துடிப்பது அவளுக்குத் தெரிந்தது. குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்றவும், தன் பெற்றோரின் உயிரைக் காப்பாற்றவும் தன் காதலை மனதில் அடக்கிவைத்துக்கொண்டு புது வாழ்க்கையை எதிர்கொள்ள முடிவு செய்தாள்.

மாப்பிள்ளையின் லீவு நாள் முடிந்தது. தன் புது மனைவியுடன் அவன் அமெரிக்கா செல்லத் தயாரானான். எல்லோரிடமும் பிரியாவிடைபெற்று அவளும் அவனும் அமெரிக்கா சென்றனர்.

* * *



அவனுடன் புது வாழ்க்கை வாழ வந்ததாக எண்ணினாள் ரேகா. அவள் தமிழ் ஒலிபரப்பின் மூலம் றேடியோவில் நிகழ்ச்சியை கேட்டுக்கொண் டிருந்தாள். அவன் தன் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அப்போது அவர் களின் வீட்டு அழைப்பு மணி ஒலித்தது. அவன் சென்று கதவைத் திறந்தான். ஓர் அமெரிக்கப் பெண் கையில் பையுடன் வந்தாள். அவனைக் கண்டதும் "ஹலோ! டார் லிங்" எனக் கட்டி முத்தமிட்டாள். அவனிடம் ஆங்கிலத்தில் ரேகாவைப் பற்றி விசாரித்தாள். அவன் வேறு மொழியில் ஏதோ கூறினான். அவள் வந்து கைகொடுத்தாள்.

நாட்கள் நகர்ந்தன. அமெரிக்கப் பெண்ணும் அவர்கள் வீட்டில் தங்கினாள். அவளுக்காக ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டது. அமெரிக்கப் பெண்ணும் அவனும் ஒரே அறையில் தங்கினர். வேலைவிடயமாகக் கதைக்கிறார்கள் என்றே ரேகா எண்ணினாள்.

அன்று வெள்ளிக்கிழமை ரேகா கோயிலுக்கு வருமாறு அவனிடம் கேட்டாள். அவனும் கோயில் செல்லத் தயாரானான். காரில் அவன் ஓட்டுநர் இடத்தில் அமர, அமெரிக்க பெண்ணும் அவன் பக்கத்தில் அமர்ந்தாள். இவளைப் பின் சீட்டில் உட்காரும்படி அவன் கூறினான். இவளும் வெளிநாட்டுக் கலாசாரம் என எண்ணிப் பெரிதுபடுத்தாது விட்டாள். ஆனாலும் அவள் மனதில் நெருடல்... உண்மையை அறிந்து கொள்ளத்துடித்தாள்.

அவர்கள் வீட்டிற்கு அயலிலுள்ள அறையில் ஒரு தமிழ்க் குடும்பம் இருந்தது. அவர்களுடன் இவள் சென்று கதைத்தாள். அப்போது தான் இவளுக்கு இடிவிழுவதுபோல் அந்தச் செய்தி தெரிய வந்தது. அவன் ஏற்கனவே திருமணமானவன். அவனின் மனைவிதான் அந்த அமெரிக்கப் பெண் என்று.

தனது நிலையை எண்ணி அவள் அழுதாள். தாய் நாடான இலங்கைக்கே திரும்பி விட்டாள். அவள் திரும்பி வந்ததைக் கண்ட பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

தனது மகளின் வாழ்வு பாழாய்ப் போனதை அறிந்த தந்தை உயிரை விட்டார். தாய் நோய் வாய்ப்பட்டாள்.

இவளது பிரிவைத் தாங்காது சுதன் ஏற்கனவே இறந்து போனவிடயமும் இவளுக்குத் தெரிய வந்தது.

"காதல் மாலையே தோளிலே சேருமா? கொஞ்சம் கொஞ்சமாய் ஜீவனும் ஓயுமா?" என்ற பாடலின் கடைசி வரி அவளது காதுகளில் அப்பொழுது விழுந்தது. தனது கண்ணில் வழிந்த நீரை அவள் துடைத்துக் கொண்டாள். பொழுது இருண்டு கொண்டு போனது. அவளது வாழ்க்கையிலும் இருள் சூழ்ந்து கொண்டது. அவள் நடைப் பிணமானாள்.

(யாவும் கற்பனை)

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பஞ்சவர்ணம் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி.. | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | கொண்டாட்டம் | பில்லர் | நம்ம நேரம் | பில்லர் | திரை விமர்சனம் | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.15–13.30 | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

## சுடர் ஒளி தொடர் கதை

இதழ் — 21

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

மு.சிவநேசன்

சுமராவின் நிலைமை சிக்கலாகியது. அவள் என்னதான் பிஸியாக இருந்தாலும்கூட அப்போதெல்லாம் ருஷனின் நினைவும் உள்ளிருந்து வாட்டிக்கொண்டே இருந்தது. கோர்ட்டில் வழக்காடும் வேளைகூட உள்மனதில் அனல் போல வேதனை கக்கிக் கொண்டே இருந்தது. உறக்கத்திலும் அவனது நினைவு கனவாகி வந்து மனதை மாய்த்தது.

சுமரா குணமடைந்து வீட்டுக்கு வந்தபோது வில்லியமிடம் மிகவும் கடுப்பாகவே இருந்தாள். ''கணினியைக் குடைந்து ருஷனைக் கண்டுபிடித்துவிட இயலாது!'' எனச் சீறினாள். 'அவர்கள் கேட்ட எல்லாவற் றுக்கும் ஒப்புக் கொண்டு கௌரவத்தை விட்டுக்கொடுத்து அவனை மீட்டுவிடல் வேண்டும்' எனத் துடித்தாள்.

வில்லியம், 'ஒரு பொலிஸ் அதிகாரி அப்படி நடக்கலாமா?' எனத் தயங்கினான். ''றொபேட்டுடன் கூடிக் குடித்துக் கூத்தடித்துத் திரிய மட்டும் இயலும் போது, ஏன் அவனைப் பயன்படுத்தி ருஷனை மீட்கக் கூடாது?'' எனக் கேட்டாள். அவனது நடிப்பு அவளை மேலும் கொன்றது. இரத்தக் கொதிப்பு அதிகமானது.

குழந்தைக்காக எதனையும் விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். அவனை மீட்க முடியுமென்றால் வேலையைக்கூட விட்டுவிடலாம் என்பது அவளின் வாதம்.

''வேலையோடு ஒட்டிக்கொண்டு இருந்தால்தான் அவனை மீட்கச் சுலபமாக இருக்கும்'' என்பது வில்லியமின் வாதம். ஆனால் சட்டத்தரணியோடு வாதிட்டு வெல்ல அவனால் இயலவில்லை.

வாக்குவாதம் வலுத்தபோது ''நீ உனது நியாயத்தை கோர்ட்டில் போய் கேட்டுப்பார்!'' என்றான் அவன்.

வாக்குவாதம் வலுத்ததும் வில்லியம் சோர்ந்து போனான். அவள் கொதிப்பின் உச்சத்தில் இருந்தாள். அவனோடு காய்வதைத் தவிர அவளுக்கு இப்போதைக்கு வேறு வழி இருக்கவில்லை. கையாலாகாத்தனம் அவளை வாட்டி வதைத்தது. இனி அவளிடம் கோர்ட்டிலோ வீட்டிலோ நின்று பிடிக்க சக்தி இல்லை. அந்த வீடியோ 'கஸட்' அவளது இதயத்தைச் சல்லடை போட்டிருந்தது.

ஒருவாரம் நடைப்பிணமாக வீட்டில் வலம் வந்தாள். ஒவ்வொரு நிமிடமும் யுகங்களாகவே கழிந்தன. வில்லியமோடு அவள் ஏதுவும் பேசவில்லை. கோல்களும் அதிகம் வரவில்லை. அவளும் எதிர்பார்க்கவில்லை. 'கடத்தல்காரர்கள் போனில் சந்தித்தால் பேரம் பேசிவிட்டு மைக்கேலிடம் போகலாம்' என்கின்ற எண்ணம் மட்டும் அவளிடம் இருந்தது.

'மைக்கேல் விடுதலையாகியிருப்பான். ஆனால் கோல் எடுக்கவில்லை; சுகம்கூட விசாரிக்கவில்லை; மறந்திருப்பான்; நன்றி கெட்டவன்; வழக்கு முடிந்து மாதங்கள் பல கடந்துவிட்டன. 'லோயர் பீஸ்' பற்றி ஒரு சம்பிரதாயத்துக்காகவாவது 'மைக்' பேசவில்லை. இனி நோட்டீஸா அனுப்ப வேண்டும்?' என்று நினைத்துக் கோபப்பட்டாள்.

மோனாவும் அதிகம் கதைப்பதில்லை. பாவம் அவள்பாடு பிஸி. தனது அதிக நேரத்தை தேவைப்பட்ட இக்கட்டான வேளைகளில் சுமராவுடன் செலவழித்திருந்தாள். 'இப்போதும் தொடர்ந்து அதை எதிர்பார்ப்பது எப்படி?' எனச் சுமரா தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

றொபேட்டிடம் மோனா இறைத்த பணத்திற்கு சுமரா கணக்குக் கேட்கவில்லை. கேட்டாலும் அவள் சொல்லப் போவதில்லை. அதனால் றொபேட்டைத் தவிர யாருக்கும் ஏதும் பயன் இருப்பதாகவும் அவள் கருதவில்லை. 'ருஷனை இழந்தது இழந்ததுதான்!' என முடிவு கட்டிவிட்டாள்.

'இனி அப்படி வீடியோக்கள் வராவிட்டால் சரி!' என நினைத்துக் கொண்டாள். 'எனது சோகத்தை மேலும் தூண்டுவதால் அவர்களுக்கு எந்த லாபமும் கிடைக்கப் போவதில்லை' என நினைத்தாள். அவர்களால் வில்லியமின் மனதைத் தொட இயலாது. ருஷனைப் பலி கொடுத்தாலும் அவன் மனதை மாற்ற இயலாது.

யாராவது 'கேஸ்' என்று வந்து கொண்டிருப்பார்கள். அவள் எல்லாவற்றையும் மேவினிடம் அனுப்பிக் கொண்டிருந்தாள். பழைய பாக்கிகளை சிலர் தந்துகொண்டிருந்தார்கள். மேசை மீது வைத்துவிட்டுப் போகும்படி சைகை காட்டுவாள். எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை.

புதிதாக ஒருவன் வந்திருந்தான். ஒரு பெரிய கவரை மேசை மீது வைத்துவிட்டுத் திரும்பிப் போயிருந்தான். வில்லியம் வந்தபோது அதனை எடுத்துப் பார்த்தான். உள்ளே ஒரு லட்சம் டொலர்கள் புத்தம் புதுக் கரன்ஸிகளாக இருந்தன. நிச்சயமாக அது மைக்கேலின் 'பீஸாக' இருக்கும் எனச் சுமரா நம்பினாள். அத்தோடு ஒரு குறிப்புக்கூட இருக்காதது சுமராவைச் சினக்க வைத்தது.

அவன் போய்ச்சற்று நேரத்தில் அழைப்பு மணி ஓசை கேட்டது. எழுந்துவந்த சுமரா கதவைத் திறந்தாள். வாசலில் ருஷன். கண்களை அவளால் நம்பவே இயலவில்லை. அவனது ஆடைகள் பளபளப்பாக இருந்தன. ஆள் நிறையவே தேறியும் தெம்பாகவும் இருந்தான்.

சுமரா அவனை இறுகக் கட்டிக்கொண்டாள். அவளது கண்ணீரின் உப்புச் சுவை அவனுக்கு அமிர்தமாக இருந்தது. சுமராவின் ரோஜா இதழ்கள் ருஷனின் கன்னத்தில் ஆழப்பதிந்தன. அந்த முத்தங்கள் தந்த மயக்கத்தில் அவன் திளைத்தான்.

இருவரும் ஆரத்தழுவி நின்றவேளை வில்லியம் வந்து சேர்ந்தான். அவனை நோக்கி ஓடிய ருஷன் கால்களைக் கட்டிப் பிடித்து ஆரவாரம் போட்டான். வில்லியமின் பார்வையில் பலகேள்விகள் தெரிந்தன.

''குழந்தையிடம் எதனையும் கேட்கக் கூடாது. எந்த விடுப்பும் வேண்டாம். அவன் நடந்ததெல்லாம் மறக்கட்டும்!'' என்றாள் சுமரா கண்டிப்பான குரலில்.

'இனி தான் குழந்தையை விட்டு ஒரு கணமும் எங்கும் விலகமாட்டேன்' என்று நினைத்துக் கொண்டாள். அவன் எப்படிக் கிடைத்தான் என்று ஆராய அவள் நினைக்கவில்லை. அவளுக்கு அவன் கிடைத்ததே போதும்.

'இனி அவனை வைத்து ஆராய்வது அவனுக்கு ஆபத்தைத் தந்துவிடும்' என்பது அவளது எண்ணம். ''உடனடியாக அவன் கிடைத்த தகவலை வெளியிட வேண்டாம்!'' என மன்றாட்டமாக வில்லியமைக் கேட்டுக் கொண்டாள்.

''பொலிஸிற்கும் றொபேட்டிற்கும் தெரிவித்தாக வேண்டும்!'' என வில்லியம் வாதிடத் தொடங்கினான்.

''அது என் வேலை. நானே ருஷனை மீட்ட மாதிரி நான் அவர்களிடம் தெரிவிக்கிறேன். வாதங்களை வளர்க்க வேண்டாம். குழந்தையின் கண் முன்னே வாதாட வேண்டாம். அவன் நிம்மதியாக இருக்கட்டும். அது ஒன்றே போதும்'' என்றாள்.

சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினாள் சுமரா. சமையல் அறைக்குள் புகுந்து கொண்டாள். ருஷனும் அவளுடன் இணைந்து கொண்டான். அவனுக்குப் பிடித்தமான சமையல் ஆரம்பம் ஆகிறது. ஆனால் என்றும் இல்லாத, நிதானமாக, ஆறுதலாக பரபரக்காமல் சுமரா செய்யும் சமையலின் வாசனை அவன் மூக்கைத் துளைத்தது.

அவளுக்கு கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் இல்லாதபோது சமையல் நிதானமாகத்தான் இருக்கும். அவள் பேசிய கடைசி 'கேஸ்' மைக்கேலினுடையதாகத்தான் இருக்கும் என்பது தெரிந்தது.

அவள் சமையலில் மும்முரமாக இருந்தபோது ஹோலுக்கு வந்த ருஷன் அன்றைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். அதில் கைது செய்யப்பட்ட பதினொரு பேரின் படங்களும் அனற்றின் படமும் பிரசுரமாகி இருந்தன. அவற்றை ருஷன் உற்றுப் பார்த்தவேளை சுமரா பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

ருஷன் ஒரு பேனையை எடுத்து அனற்றின் முகத்தில் வெறுப்பாகக் குத்தினான். அவளது கண்களைக் குறிவைத்துக் குத்தினான். கடைசியில் அவளது முகம் முழுவதையும் சிதைத்தான். அடுத்து இன்னொருவனின் படத்துக்கும் அந்தக் கதிதான்.

பத்திரிகையின் வேறோர் மூலையில் காணப்பட்ட மைக்கேலின் படத்தை அவன் கொஞ்சிக் கொடுத்தது சுமராவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. காரணங்கள் புரியவில்லை. 'எதனையும் கேட்கக் கூடாது' என்று குழந்தை காணாமலே விலகிவிட்டாள் அவள்.

'ஆம்! மைக்கேலை ருஷன் எங்கே கண்டு கொண்டான்? அவன்தான் இவனை விடுவித்திருக்க வேண்டும். ஒரு வேளை கடத்தலும் அவனது கும்பல்களின் அல்லது சிநேகக் கும்பல்களின் வேலையாக இருக்குமோ? மைக்கேல் பற்றிய வதந்திகளில் உண்மை இருக்குமோ?' சுமராவின் எண்ணங்கள் சுழன்றன.

மீண்டும் மைக்கேல் மீது வழக்கொன்று தாக்கலாகி இருந்தது. அதை றோமன் நெறிப்படுத்தத் தயாராகி இருக்கிறான் என்கின்ற செய்தி அன்றைய பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. 'என்னதான் ஆனாலும் இம்முறை மைக்கேலுக்காக வாதாடப் போவதில்லை!' என்று சுமரா தீர்மானித்திருந்தாள்.


''மைக்கேல் நிரபராதி! காரணம் இல்லை!'' என்று அவளது மனம் சொல்லியது.

'குற்றவாளி என்றால் தண்டனையை அனுபவிக்க வேண்டும்' என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

கேள்விகள் சுமராவின் மண்டையைக் குடைந்தன. அவற்றை விலக்கிவிட்டு நிம்மதியாக ருஷனிடம் வந்தாள். அவனின் இருமருங்கும் வில்லியமும் சுமராவும் அமர்ந்து கொண்டனர். அவனது புன்னகை தவழும் முகம் பூத்துக் குலுங்கும் ரோஜா மலர்கள்போல் மலர்ந்தது.

மாறி மாறி பரிமாறிக் கொண்ட ரோஜா இதழ் முத்தங்களில் உலகினை மறந்து லயித்தனர் அவர்கள் மூவரும்.

முற்றும்.



**இது வரை....**

மகன் ருஷன் படும் துன்பங்களை வீடியோ கஸட்டில் கண்ணுற்ற சுமரா மயங்கி விழுகிறாள். அந்த கஸட் எப்படி அவர்களுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தது என்பது தெரியாது தடுமாறுகிறார்கள் சுமராவும் வில்லியமும்.

தனது மகன் இனி மறுபடியும் தன்னிடம் வந்து சேரும் சாத்தியமே இல்லை என்று நினைத்து உள்ளம் குமுறுகிறாள் சுமரா...

இனி.....

## வாசகர் இதயம் பேசுகிறது

சென்றவார இதழில் வெளிவந்த அமெரிக்கச் செய்திகள் சிறப்பாக இருந்தன. இதழின் முன்பக்க அட்டைப்படம் மிக சூப்பர். நீ தினமும் சுடர்விட்டுப் போவதை, வன்னி வாசகர்களாகிய நாம் மகிழ்ச்சியடைகிறோம். மற்றும் கவிதைச் சமருக்கும் ஒருசபாஷ். இதுபோல் இன்னும் பல புதிய படைப்புகளுடன் களத்தில் பயணிக்க எம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

வெ.தெனியா, சே.எம். பாரிஸ்,
குஹ்ஸார்
பாத்திமா ரொனானா.

தரமான ஆக்கங்களைப் பிரசுரித்து வரும் சுடர் ஒளியே உன்னை நான் நேசிக்கின்றேன். உன்னில் வெளிவரும் விடயங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை.

ஆர். கிருஷ்ணன் புஷ்பராஜ்,
இறக்குவானை.

சுடர் ஒளியை தொடர்ந்து வாசித்து வரும் வாசகி நான். ''சுடர் ஒளி'' குறுகிய காலத்துக்குள் பெருவெற்றி பெற்றிருப்பதிலிருந்தே அதன் ஆக்கங்களுடைய சிறப்புத் தெரிகிறது.

மிறா. செல்வதாசன், திருமலை.

சுடர் ஒளியே உனக்கு ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டது. இந்த ஒரு வருடத்தில் சுடர் ஒளியை ஆவல் மீறப் படித்துச் சுவைத்தேன். தரம் குன்றாத உன் ஆக்கங்கள் இனிவரும் காலங்களில் மென் மேலும் மெருகு ஏற என் வாழ்த்துக்கள். ''சுடர் ஒளிக்கு'' நான் எழுதும் ஆக்கங்கள் இதுவே முதற்தடவை. என் கவிதை அரங்கேற ''சுடர் ஒளி'' படிக்கற்களாக இருக்கும் என்ற நம்பிக்கை ஒளியில் எழுதுகிறேன். ''சுடர் ஒளிக்கே'' நன்றி.

ஜெயா இரவீந்திரன்,
ஐயனார்புரம், வன்னேரிக்குளம்.

எங்கள் அபிமான பத்திரிகையான சுடர் ஒளிக்கு ஒரு வயது பூர்த்தியானதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறோம். சூடான செய்திகளை உடனுக்குடன் சுவைபட வழங்கும் சுடர் ஒளியே வாழ்க பல்லாண்டு.

க. பிலேந்திரன்,
க.தேவதாஸ், எஸ்.பி.
பொற்கேணி.



பிரகாசமாகச் சுடரும் சுடர் ஒளியே!

நீ துணிவான செய்திகளை உள்ளதை உள்ளபடி பிரசுரிக்கின்றாய் பாராட்டுக்கள்! மேலும் 'களநிலைமை எப்படி' பகுதி வாசிக்கத் தூண்டுகின்றது. சுடர் ஒளியே நீ தொடர்ந்தும் வாசக நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடிக்க எனது வாழ்த்துக்கள். நன்றி

ம. கஜேந்திரன், புதுக்குடியிருப்பு.

அன்பின் சுடர் ஒளியே! நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சுவையாக உள்ளன. உன்னை என் உயிர் உள்ளவரை மறவேன். வாரத்தில் ஒரு இதழாக எம்மை வந்து மகிழ்விக்கும் உனக்கு எனது பாராட்டுக்கள். தற்போது வெளிவருவது போலவே தொடர்ந்தும் ஆழமான செய்திகளைத்தந்து தமிழ்ச் சமுதாயத்தின் எழுத்தாற்றலை வளம் பெறச் செய்ய வேண்டும் என்று திடமாக நம்பி வாழ்த்துகிறேன்.

எஸ்.பி.சேகர்,
புதுக்குடியிருப்பு.

சுடர் ஒளியில் பிரசுரிக்கப்படும் பெண்கள் பகுதி சூப்பர். சுடர் ஒளியை எடுத்தவுடன் முதலில் படிப்பது பெண்கள் பகுதியைத்தான்.

எம்.சுயன், கோண்டாவில்.

என் இதயம் கவர்ந்த சுடர் ஒளியே நீ கொண்டு வரும் அனைத்து அம்சங்களும் சுவையானவை. உனது பெயருக்கேற்ப எமது நெஞ்சங்களில் எல்லாம் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறாய். இந்த சுடர் என்றுமே அணையாமல் ஒளி பரப்ப உன்னை வாழ்த்துகின்றேன்.

சு. மதிவதனி,
புலோலி, பருத்தித்துறை.

எமது தாகம் அறிந்து சாந்தி செய்யும் சுடரொளியே உன் வரவுக்காக தினமும் ஏங்குகின்றேன். நீயோ வாரம் ஒரு முறை தானே வருகிறாய். நீ சுமந்து வரும் பித்தன் பதில்கள் கவிதைப்புனல், தேரடி அரட்டை அரசியல் அம்பலம் மற்றும் ரமணனின் கள நிலைவரம் இப்படி எல்லாமே சிந்திக்க வைக்கும் அம்சங்கள். எத்தடைவரினும் தொடர்ந்தும் ஒளி வீச எனது வாழ்த்துக்கள்.

ச.ரவி, புதுக்குடியிருப்பு.

வன்னி வாழ் மக்களின் இதயங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்ட சுடர் ஒளியே, எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் உன் வரவிற்காகக் காத்திருக்கிறோம்.

ஆர்.ஜெயா, வன்னேரிக்குளம்.

23, செப்டெம்பர் சுடர் ஒளியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'கவிதைச் சமர்' பகுதி சுவையாக உள்ளது. பாராட்டுக்கள்.

என். கே. தயாளகுணசீலன், கிரான்.

சுடர்ஒளியே, கவிதைப் புனலில் நீ தாங்கி வரும் கவிதைகள் அனைத்தும் சூப்பர்! இளம் வாசகர்களுக்குக் கவிதைப் புனலில் களம் அமைத்துக் கொடுத்து, வளர்த்துவரும் இளைய தலைமுறையின் ஆக்கங்களுக்கு ஊக்கம் அளிக்கிறாய்! உன் அளப்பரிய பணி தொடர வாழ்த்தும்,

த. அஜந்தகுமார், வதிரி.

இரண்டாவது வருடத்தில் பிரவேசிக்கும் சுடர் ஒளியே, உன் சேவை மேன்மேலும் வளர்ச்சியடைய என் கோடி வாழ்த்துக்கள்.

என். சுஜாதா, முழங்காவில்



கவர்ச்சியினால்கோடம்பாக்கத் தைக் கலக்கிக்கொண்டிருக் கிறார் மும்தாஜ். இவருக்கு இப்போது ஆடைக் குறைப்பு செய்து அலுத்து விட்டது. சேலை கட்டி நடிக்க ஆசையாக இருக்கிறது என்று ஸ்டேட் மெண்ட் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்நேரத் தில் 'குயின்' என்ற படத்திலும் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு மும்தாஜிற்குக் கிடைத் திருக்கிறது. இவர் இதுவரை ஏற்றிராத வித்தி யாசமான பாத்திரமாம். தன் குடும்பத்தினைக் காப்பாற்றுவதற்காக தனியார் கம்பனி யொன்றில் வேலைக்குச்செல் கிறாள் ஒரு பெண்.

அங்கு வேலை செய்யும் மூவரின் கெட்ட சகவாசத் தினால் பணத்தாசை ஏற்பட்டுப் பாதை மாறு கின்றாள். சுதந்திரப் பறவையாக கட்டுக்கடங் காமல் திரிகிறாள். குடி, கும் மாளம் என்று காலத்தைக் கடத்துகிறாள். தகாத செயல்களினால் அழகை இழந்த அவள் தற்செயலாகத் தன் பாதையைத் திசை மாற்றியவர்களைச் சந்திக்க நேரிடுகின்றது. பழிவாங்கும் எண்ணத்தினால் அவர்களைக் கொலை செய்து விடுகிறாள். சட்டத்தின் பிடியில் இருக்கும் அவளுக்கு எயிட்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்படுகின்றது.

# கவர்ச்சி 'குயின்' மும்தாஜ்

அவளுக்காக வாதாடும் வக்கீல் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்.

இதுதான் 'குயின்' படத்தின் கரு. எயிட்ஸை மையமாக வைத்து அறிவுறுத்தல் தரும் வகையில் உருவாக்கப்பட்டிருப்பதனால் இப் படத்தினை பெண்களும் விரும்பி ரசிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இப்படம் வெளிவந்த பின்னர் மும்தாஜிற்கு ரசிகைகள் அதிகமாகலாமாம்.

# விஜய் திகைப்பு

ஊரிலிருந்து முதன் முறையாக சென்னைக்கு வருகிறான் உதயா. தனது நண்பன் பஷீர் வீட்டுக்குச் சென்றவனை வரவேற்ற பஷீர் ''வாடா நாம் வெளியே போய் திங்ஸ் வாங்கிக்கொண்டு வரலாம்'' என்று அழைக்கின்றான். ''நான் வரலைடா'' என்று உதயா சோம்பலாகச் சொல்ல,

''ஒரு தடவை வந்து பார்த் தேன்னா திரும்பி வர மனமிருக் காது. எத்தனை ஃபிகருங்க, என்ன கூட்டம்'' என்று ஆசைகாட்டிய பஷீர் உதயாவை அழைத்துச் செல்கி றான்.

மார்க்கெட்டில் கடைக்காரர் களிடம் அடாவடித்தனம் செய்யும் பெண்ணைக் கண்டு திகைத்து நிற் கிறான். இப்படி இருக்கையில் எங் கிருந்தோ வந்த நடனக்கும்பல் அந்தப் பெண்ணைச் சுற்றி வட்டமிட்டு,

''திருவல்லிக் கேணி ராணி

தெரியாதா எங்க பாணி'' என்று பாடி ஆட ஆரம்பித்தனர். இப்படி ஒரு காட்சி 'உதயா' படத்திற்காக அண்மையில் படமாக்கப்பட்டது. உதயாவாக விஜய்யும் நண்பனாக விவேக்கும் நடித்தனர்.



# அப்பா செல்லம் அம்சவிர்தன்

வாரிசு நடிகர் வரிசையில் வந்தவர் அம்சவிர்தன். அறிமுகப்படத்தில் நடிக்கும் போது அசத்துவார் இந்த இளம் வாரிசு என்று திரையுலகினர் கருத்துக் கூறினர். ஆனாலும் அம்சவிர்தனை ரசிகர்கள் கண்டு கொள்ளவில்லை. அடுத்து இவர் நடித்த 'நேற்றுவரை நீ யாரோ' படம் இன்னும் வெளி வந்தபாடாக இல்லை. அம்சவிர்தன் பரபரப்பாக அறிமுகமாகாததற்குக் காரணம் அவர் இன்னும் அப்பா பிள்ளையாக இருப்பதுதானாம். பத்திரிகைப் பேட்டி முதல் தயாரிப்பாளர்களுடன் பேரம் பேசுவது வரை அனைத்திற்கும் அவரது தந்தையின் உதவியை அவர் நாடுவதனால்தான் அடுத்த அடி எடுத்து வைப்பதில் தாமதம் ஏற்படுகிறதாம்.

# சிம்ரன் - காதலருடன் ரகசியக் குடித்தனம்

பஞ்சாப்பைச் சேர்ந்தவர் சிம்ரன். அமிதாப் பச்சனின் 'ஸ்டார் டக்' நிறுவனம் மூலம் 'தேரே மேரே சப்னே' என்ற இந்திப் படத்தில் அறிமுகமானார். ஆனாலும் அந்தப்படம் பெரிய அளவில் போகாததனால் வேறு மொழியில் கவனஞ் செலுத்தத் தொடங்கினார்.

அவரது எதிர்பார்ப்பின் படியே 'இந்திர பிரஸ்தம்' என்ற மலையாளப்படம் பெரிய அளவில் 'ஹிட்' ஆனது.

இதனால் தென்னிந்திய ரசிகர்களின் பார்வையும் சிம்ரனின் பக்கம் திரும்பியது. தயாரிப்பாளர்கள் சிம்ரனை ஒப்பந்தம் செய்வதற்குப் படை எடுத்தனர்.

பலர் இவரை ஒப்பந்தம் செய்வதற்கு அலை மோதிக் கொண்டிருக்க, கலைப்புலி தாணு முந்திக் கொண்டார். வி.ஐ.பி படத்தில் லைலாவின் பந்தாவினால் சிம்ரனுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

அப்பாஸுடன் காதல் வசப்பட்டார் சிம்ரன். அதனால் காதல் காட்சிகளில் கண்டபடி நடித்தார். அப்பாஸுடன் ஈருடல் ஒருயிராகத் திரிந்தார். ஆனாலும் விஷயத்தைக் கேள்விப்பட்ட அப்பாஸ் தரப்பினர்,

உடனடியாக உறவினப் பெண் ஒருவரை அப்பாஸிற்குத் திருமணம் செய்து வைத்தனர். காதல் பிரிவினால் தவித்தார் சிம்ரன்.

இந்நேரத்தில்தான் 'எதிரும் புதிரும்' என்ற படத்தில் நடனம் ஆடப்போனார். அப்படத்தின் டான்ஸ் மாஸ்டரான ராஜூசுந்தரத்துடன் காதல் வசப்பட்டார். அப்பாஸின் இடத்தினை நிரப்பினார் ராஜூசுந்தரம்.

சிம்ரனின் காதலுக்கு அவர் வீட்டில் ஆரம்பத்திலிருந்தே கடும் எதிர்ப்பு நிலவியது. காரணம் அவர்களைப் பொறுத்த வரைக்கும் சிம்ரன் காசு காய்க்கும் மரம்.

அவர் திருமணம் செய்து கொண்டுபோய் விட்டால் தமது வருமானத்திற்கு என்ன செய்வது! அதுமட்டுமல்ல, நடிகைகள், குரூப் டான்ஸர்கள் என்று தினமும் ஒரு பெண்ணுடன் சுற்றும் ராஜூசுந்தரம் சிம்ரனையும் ஒரு கட்டத்தில் தூக்கி எறிந்து விடுவார் என்று சிம்ரனின் பெற்றோர்கள் பயந்தார்கள்.

ஆனால் சிம்ரன் இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ராஜூசுந்தரத்தினைத் துரத்தித் துரத்திக் காதலித்தார்.

இதற்கிடையில் ராஜூசுந்தரத்தின் வீட்டிலும் இவர்களது காதலுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. பல காரணங்களைக் கூறி எதிர்த்தார்கள். இப்போது ராஜூசுந்தரத்தின் தந்தை சம்மதம் கொடுத்திருக்கிறார் என்பது வேறு விஷயம்.

தன் குடும்பத்தினரின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் சிம்ரனை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பித்தார் ராஜூசுந்தரம்.

அவரின் பாராமுகம் சிம்ரனைக் கோபத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது. ஜோடி படத்திற்காக கனடா சென்ற போது இருவருக்கும் தகராறு ஏற்பட்டு ஹோட்டல் ரூமில் இருந்த பொருட்களை எல்லாம் போட்டு உடைத்து ரகளை செய்த சிம்ரன், தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார். பிறகு ஒரு வழியாக காப்பாற்றப்பட்டார்.

இவை அவ்வப்போது பத்திரிகைகளில் செய்தி யாக வெளிவந்தன. பின்னர் ராஜூசுந்தரம் இறங்கி வந்தார். சிம்ரன் தன் மீது வைத்திருக்கும் காதலைப் புரிந்து கொண்டவராக அவரிடம் பரிவாக நடந்து கொள்ள ஆரம்பித்தார். ராஜூசுந்தரத்தின் மாற்றம் சிம்ரனை உருக வைத்தது. முன்பை விட அதிகமாக அவருடன் ஒட்டி உறவாட ஆரம்பித்தார். ராஜூவை தினமும் தன் வீட்டுக்கு வர வைத்து காதலை டெவலப் செய்ய....

சிம்ரனின் அம்மா டென்ஷனானார். வீட்டில் மோனல், ஜோதி என்ற வயதுக்கு வந்த இரண்டு பெண்கள் இருக்கும் போது தினமும் இப்படிக் கொட்டம் அடிக்கிறாயே? என்று சிம்ரனைத் திட்ட கோபமடைந்த சிம்ரன் வீட்டிலிருந்து கிளம்பி திநகர் ரெசிடென்ஸி ஹோட்டலில் ரூம் போட்டுத் தங்கினார். சுமார் ஒரு மாதம் அங்கே தங்கிய சிம்ரன் ஹோட்டல் பில்லை, ஐலவ்யூடா, பார்த்தாலே பரவசம், குடை படங்களின் தயாரிப்பாளர்களின் தலையில் கட்ட நினைத்தார். சென்னையில் வீடு இருக்கும் போது ஹோட்டல் பில்லுக்கு எப்படி பணம் தர முடியும், நாங்கள் தரமாட்டோம் என்று ஹோட்டல் நிர்வாகத்திடம் சொல்லிவிட்டனர் தயாரிப்பாளர்கள்.

இந்த விஷயம் தெரியாமல் அந்த ஹோட்டலில் உள்ள ரெஸ்டூரன்ட்டிற்கு தன் நண்பர்களுடன் சாப்பிடப் போனார் சிம்ரன். ஹோட்டல் ஊழியர்கள் ரூம் பில்லை செட்டில் பண்ணினால்தான் சாப்பாடு சர்வ் பண்ண முடியும் என்று சிம்ரனிடம் சொல்லியிருக்கிறார்கள்.

மீண்டும் தன் வீட்டுக்கே வந்தார். அவரது அம்மா சிம்ரனை கண்டிக்க பெரும் சண்டையே நடந்திருக்கிறது. அம்மா மகளுக்கு இடையே நடந்த வாக்குவாதம் உச்சக் கட்டத்துக்குப் போக, ஒரு கட்டத்தில் இது என் வீடு. என் இஷ்டப்படிதான் இருப்பேன். நீங்கள் எல்லோரும் வெளியே போங்கள் என்று சொல்ல....... தன் இரு மகள்களுடன் சிம்ரனின் அம்மா வெளியேறினார். மோனல் வட பழனியில் தனி பிளாட் பார்த்து குடியேற, சிம்ரனின் அம்மா மும்பாய்க்கே திரும்பிப் போனார். குடும்பத்தாரை வீட்டை விட்டு விரட்டியதும் நிம்மதியாக ராஜூ சுந்தரத்துடன் குடித்தனம் நடத்தத் தொடங்கினார் சிம்ரன். அந்த சந்தோஷம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. ராஜூசுந்தரம் என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது. என்ன காரணத்தினாலோ சிம்ரனின் காதலை நிராகரிக்க ஆரம்பித்தார். குட்பை சொல்லி விட்டு புறப்பட்டுப் போனவர் மறுபடி சிம்ரன் வீட்டுப் பக்கம் தலை வைத்துப் படுக்கவில்லை. ஆனால் தனது தாய்க்காகவே ராஜூசுந்தரம் சிம்ரனைக் காதலிக்காதது போல் வெளியில் காட்டுகிறார் என்றும் இருவரும் இன்னும் காதலித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்றும் ஒரு செய்தி அடிபட்டது. சம்பந்தப்பட்டவர்கள் வாய்திறந்து கூறும் வரை வெளியாகுபவை அனைத்தும் செய்திகள் தான்.



# பத்திரிகைச் செய்தி பதற்றத்தில் ரோஜா

நீண்டநாள் காதலர்களாகத் தம்மை இனங்காட்டிக்கொண்டிருந்த ரோஜாவும் செல்வமணியும் சமீபத்தில் ரகசிய திருமணம் செய்து கொண்டார்கள் என்ற செய்தி ரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்ததோ இல்லையோ, நடிகை ரோஜாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டதாம்.

இப்பொழுதுதான் உருப்படியாக நடிக்க ஆரம்பித்திருக்கின்றேன். இந்த நேரத்தில் போய் இப்படி ஒரு செய்தியை வெளியிட்டு விட்டார்களே என்று பத்திரிகையாளர்கள் மேல் எரிந்து விழுகிறாராம்.

''அப்படியென்றால் இந்த செய்தியில் உண்மையில்லையா'' என்று கேட்டால், ''உண்மையோ பொய்யோ என் பர்சனல் லைஃபில் தலையிடுவதற்கு இவர்கள் யார்?'' என்று எகிறிப் பாய்கிறார் ரோஜா.

## காதலுடன் திரும்பி வந்தார்

கதை தேடி சொந்த ஊருக்குச் சென்றிருப்பதாகக் கூறப்பட்ட தேவயானியின் கணவர் இராஜகுமாரன் காதல் கதையுடன் திரும்பி வந்திருக்கிறாராம். 'காதலுடன் .......' என்று பெயரிட்டுள்ளார். வழமையான காதல் கதையை மாறுபட்ட கோணத்தில் தரப்போவதாகச் சொல்லும் அவர் இப்படத்தில் முரளி, லைலா, தேவயானி ஆகியோரை நடிக்க வைக்கிறார்.

'நாகவள்ளி', 'நாகதேவதை', 'தேவி' உட்பட பல படங்களைத் தயாரித்துள்ளது. தேவி சித்திரம் பட நிறுவனம். இதன் சார்பில் எஸ்.மாதேஸ்வர் தயாரிக்கும் படம்— 'அங்காள பரமேஸ்வரி' இப்படத்தில் மீனா, ரோஜா, பிரேமா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். இவர்களுடன் அனுஷா, சாய்குமார், கசன்கான் ஆகியோரும் நடிப்பில் கூட்டணி சேர்க்கின்றனர். விசேஷ மாக இந்தப் படத்தில் 214 இடங்களில் கிராபிக்ஸ் காட்சி கள் கிட்டத்தட்ட 45 நிமி டங்களுக்கு இடம் பெறும் வகையில் படமாக்கப் பட்டு ள்ளதாம்.



மீனா

## கிராபிக்ஸ் கலக்கலுடன் அங்காள பரமேஸ்வரி

## இனி இவர்கள்...

* 'ஆனந்தம்' பட இயக்குநர் லிங்குசாமி சூப்பர் குட் பிலிம்ஸின் 50ஆவது படத்திற்குக் கதை எழுதி முடித்து விட்டார். ஹீரோவாக யாரைப் போடுவது என்ற குழப்பத்தில் இருக்கிறாராம்.

* நாசரின் 'மாயன்' பெரிதான வசூல் இல்லாவிட்டாலும் முதலுக்கு மோசமில்லை. அதனால் தனது அடுத்த படமான 'தீம் தரிகிட' வில் பிஸியாகி விட்டார் நாசர்.

* 'பொன்னான நேரம்' படத்தில் பிரதியூஷாவுடன் நடித்து வரும் ராமராஜன் படத்தை முப்பதே நாளில் தயாரித்து முடிக்க எண்ணியுள்ளாராம்.



## நந்தா வரும்வரை..

'நந்தா' படத்தினையும் 'சேது' லெவலில் வெற்றி பெறவைத்துவிட வேண்டும் என்பதில் ஒரே குறியாக இருக்கிறார் டைரக்டர் பாலா. இதற்கு ஒத்துழைப்புத் தரும் விதத்தில் நடிகர் சூர்யாவும் சாப்பாடு உட்பட பலவித தியாகங்களைச் செய்து இருக்கிறார்.

தனக்கு வந்த புதிய படங்களின் வாய்ப்பைக் கூடத் தவிர்த்ததுடன் ஒப்பந்தமாகியுள்ள 'ஸ்ரீ' படத்தின் கால்ஷீட்டையும் 'நந்தா' படம் முடிந்த பின்னரே வழங்கத் தீர்மானித்துள்ளாராம். 'நந்தா' முடியும் வரை காத்திருக்கிறது 'ஸ்ரீ'.



## நேகாவிற்கு அட்வைஸ்

'அள்ளித்தந்த வானம்' படத்தில் நடிப்பதற்காக மும்பையிலிருந்து அழைத்து வரப்பட்டவர் நேகா. இந்தியின் முன்னணி ஹீரோ ஹிருதிக் ரோசனுடன் ஒரு படத்தில் ஜோடியாக நடித்தவர் என்ற தகுதியுடன் களமிறங்கி யிருக்கிறார் நேகா. பார்வைக்கு ஒல்லியாகத் தோற்றமளிக்கிறார். அவரைப் பார்த்த தமிழ்த் திரையுலகைச் சேர்ந்த நலன் விரும்பிகளில் ஒரு சிலர் ''நீங்க இப்படி ஒல்லியாக இருந்தால் அடுத்த வாரமே மும்பைக்கு பிளைட் புக் பண்ண வேண்டியிருக்கும். அதனால் சென்னையில் கிடைக்கும் அயிட்டங்களை அள்ளிப் போட்டு விழுங்கியாவது உடம்பை கொஞ்சம் சதை போட வைச்சிடுங்க'' என்று அட்வைஸ் செய்திருக்கின்றனர்.

'கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு' பாட்டின் மூலம் பிரபலமானவர் கவிஞர் விஜய். 'சார்லி சாப்ளின்' படத்தில் 'சந்திப்புகளை' கருவாக வைத்து அருமையான பாடலை எழுதியுள்ளாராம்.

'தயா' பிரகாஷ்ராஜ் தயாரித்து தானே கதாநாயகனாக நடிக்கும் படம். இவருக்கு ஜோடியாக மீனா நடிக்கிறார். இவர்களுடன் ரகுவரன், லட்சுமி, ஜனகராஜ் ரமேஷ் கண்ணா ஆகியோரும் நடிக்கிறார்கள். 'தயா' இவன் காது முழுவதும் கம்மலுடன் பிறந்தவன். இவனுக்கு யாரும் காது குத்த முடியாது. இது தான் தயா கரெக்டர். இயக்கம் —செந்தில் குமார்.



ஜோதிகா — பிரசாந்

## இஷ்டத்திற்கு உயர்வு!

விலைவாசிபோல் கடகடவென உயர்ந்து வருகிறது ஜோதிகாவின் சம்பளம். 'குஷி' படத்தின் மூலம் நட்சத்திர அந்தஸ்தினைப் பெற்ற ஜோதிகாவிற்குக் கிடைத்த வெற்றிகள் குறைவு தான். 'குஷி'க்குப் பின்னர் அவர் தந்த ஒரே வெற்றிப் படம் 'தெனாலி'. 'லிட்டில் ஜான்', 'பூவெல்லாம் உன் வாசம்', 'ஸ்டார்' போன்ற படங்களும் பெயர் சொல்லும்படியாக அமையவில்லை.

ஆனால் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தான் நினைத்தபடி சம்பளத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்.

'பூவெல்லாம் உன் வாசம்' படத்திற்கு இருபது இலட்சம் வாங்கியவர் தனது அடுத்தடுத்த படங்களுக்கு முப்பத்தைந்து லட்சமாக்கினார். இப்போது திடீரென தனது சம்பளத்தை 60 லட்சமாக உயர்த்தி விட்டார்.

முன்னணி ஹீரோவின் அளவுக்கு ஒரு கதாநாயகியின் சம்பளம் உயர்ந்தது இதுவே முதல் தடவை. அதனால் தயாரிப்பாளர்கள் மீனா, தேவயானி, ஸ்நேகா நடிகைகள் பக்கம் தமது பார்வையைத் திருப்பியிருக்கிறார்களாம்.

## போரிசு நடிகை ரம்யா கிருஷ்ணன்

கவர்ச்சிப் போட்டியைச் சமாளிப்பதற்காகத் தனது சம்பளத்தைக் குறைத்துப் பார்த்தார் ரம்யா கிருஷ்ணன். அந்தத் திட்டமும் பெரிதாக கைகொடுக்காததினால் தனக்குத் தெரிந்த மூத்த நடிகர்களிடம் நைசாக பேசி வாய்ப்புக்களை வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியுள்ளாராம். 'அசத்தல்' நாயகன் சத்யராஜின் சிபாரிசில் 'சேரன் எக்ஸ் பிரஸ்' படம் கிடைத்தது பழைய செய்தி.

இப்போது நடித்து வரும் கிருஷ்ணனுக்கு சிபாரிசு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளாராம்.

ஏற்கனவே விஜயகாந்தின் பலத்த சிபாரிசு அம்மணிக்கு உண்டென்பது அனைவரும் அறிந்த விஷயம் தானே!

'ஆயிரம் பொய் சொல்லி' படத்தில் ஜோடி சேர்ந்து பிரபுவும் ரம்யா



ரம்யா கிருஷ்ணன் — சத்யராஜ்

## தாய்சொல்லைத் தட்டாத தனயன்

தன் விவேகம் பொதிந்துள்ள நகைச்சுவை நடிப்பால் முன்னணியில் திகழும் விவேக் சமீபத்தில் நடித்து வெளிவந்துள்ள படம் 'விஸ்வநாதன் ராமமூர்த்தி'. இராமநாராயணனின் இயக்கத்தில் உருவான இப்படத்தில் விவேக் 'திருப்பதி வெங்கடாசலபதி' வேடத்தில் நடித்திருந்தார்.

தன் மகன் திருப்பதி வெங்கடாசலபதி வேடத்தில் தோன்றி நடிப்பதைக் கேள்விப்பட்ட விவேக்கின் அம்மா மணியம்மாள் மகனுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பினார்.

தாயின் ஆசையை நிறைவேற்ற எண்ணிய விவேக் தனது அம்மாவைத் தன்னுடன் விஸ்வநாதன் — ராமமூர்த்தி படப்பிடிப்புக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். பின்னர் வெங்கடாசலபதி வேடத்தில் நடித்த போது தன் தாயுடன் சேர்ந்து நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டாராம். தனது ரசிகர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக சாலிக்கிராமத்தில் ஒரு புதிய வீடு வாங்கியுள்ளார் விவேக். படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் வெளியூர்களிலிருந்து வரும் ரசிகர்களைச் சந்தித்துப் பேசுவதுடன் அவர்களுடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக்கொள்கிறாராம். அந்த அலுவலகத்தில் தன் தாயுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தை மாட்டி வைத்துள்ளாராம்.

## திரை மறைவில்

வீட்டை விட்டு ஓடிவந்து இளம் இயக்குநரைக் கைப்பிடித்த இந்திரனின் மகளின் பெயர் கொண்ட நடிகை.

கௌரவம், பார்க்காமல் படக் கம்பனிகளின் கதவைத் தட்டி வருகிறாராம். எல்லாம் காதல் கணவருக்காகத்தான். அம்மணியின் அவதார புருஷன் தயாரிக்கும் 'காதலுடன்' படத்திற்கு பணம் தேவைப்படுகிறதாம்.

**

'ஏறுமுகம்' வேறு முகம் காட்டியதற்கு தன் நண்பரான இளம் இயக்குநர்தான் காரணம் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் குமார நடிகர் நண்பரின் குறைகளை அக்கு வேறு ஆணிவேறாக அம்பலப்படுத்தி வருகிறாராம்.

**

'அழகி' படத்தில் நடித்துவரும் கிறுக்கல் நடிகர் தனது மீனவ இசை கொண்ட படத்திற்கு பரபரப்பாகப் பூஜை போட்டார். இதில் அவரே கதாநாயகராக நடிப்பதாகவும் பேசப்பட்டது. ஆனால் நீங்கள் நடிப்பதைவிட அஜித் அல்லது விஜயை ஹீரோவாகப் போடுவது நல்லது என்று புத்திமதி கூறியிருக்கிறார்களாம். இக்கருத்து அழகியின் நாயகனுக்கும் சரியெனப்படவே படத்தைப் பற்றிய பேச்சையே மறந்துவிட்டு மற்ற அலுவல்களைக் கவனிக்கின்றாராம். அழகனா! கொக்கா!

**

'பந்தா' காட்டும் மறைந்த இங்கிலாந்து இளவரசியின் பெயர் கொண்ட நடிகை கோடம்பாக்கத்தில் நடிக்காமலே பல வழிகளில் முன்னேறி வருவது ஒரு புறமிருக்க, நடிகையின் தாய்க் குலமும் தன் திறமையைக் காட்டி வருகிறாராம். சமீபத்தில் 2ஆவது திருமணமும் செய்துள்ளாராம்.

**

கால்ஷீட் சொதப்புவதில் கை தேர்ந்தவர் வாரிசு நடிகர். சமீபத்தில் ஒரு படப் பிடிப்பிற்காக பொள்ளாச்சி சென்றிருக்கிறார். படப்பிடிப்பினர் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்க, நடிகரோ ஃபுல்லாக ஏற்றிக் கொண்டு தூங்கி விட்டாராம். அவருக்காகக் காத்திருந்து வெறுத்துப் போன இரண்டெழுத்து டைரக்டர் சத்தம் போடாமல் மொத்த யூனிட்டையும் கூட்டிக் கொண்டு சென்னை திரும்பியிருக்கிறார்.

**

சிங்கப்பூர் சீமோட்டியான 'டைம்' நடிகை மீண்டும் தன் சொந்த ஊருக்கே போய்விடும் எண்ணத்தில் இருக்கிறாராம்.

**

''அநேகமாக தமிழில் எனக்குப் பிடித்த ஹீரோக்களுடன் (கமல், அர்ஜுன்) நடித்து விட்டேன். இன்னும் ஒருவர் தான் …யாக்கி. (ரஜினி) ஆமா அவர் நடிக்கிறதையே நிப்பாட்டி விட்டாரா? இல்ல..... ஒரு சேஃப்டிக்காக அடுத்த படத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறாரா!'' தன்னைச் சந்திக்கும் சென்னைத் தயாரிப் …ளர் …ளிடம் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறாராம் நேபாளத்து வரவு கொய்ராலாவின் மகள்.

**

ஒளிமயமான நடிகையை ஒப்பந்தம் செய்யப் போன தயாரிப்பாளர்கள் போன மச்சான் திரும்பி வந்தார் என்ற கதையாக நடிகையைச் சந்திக்காமலே திரும்பி வந்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் நடிகையின் தாய்க்குலத்தின் அடாவடித்தனம் தானாம். பணத்தோடு வரும் பட அதிபர்களை மோசமாக வரவேற்று படாதபாடு படுத்துகின்றாராம். ''பொம்பளையா அவ ராட்சசி'' என்று கூட ஒரு சில தயாரிப்பாளர்கள் முணு முணுக்கும் அளவுக்கு தயாரிப்பாளர்களை வெறுப்பேற்றியிருக்கிறார் 'ஒளி'மயமான நடிகையின் தாய்க்குலம்.

**



ராதிகா சௌத்ரி

# தலை முடி உதிர்வையும் தடுத்து நிறுத்த மருந்து

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு — 06.

கே : எனக்கு வயது 17 (ஆண்) கடந்த 7 மாதங்களாக எனக்குத் தலைமுடி உதிர்ந்த வண்ணம் இருக்கிறது. சிறு வயதிலேயே எனக்கு மொட்டை வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. இதனால் எனக்கு முழு மனதுடன் படிப்பில் கவனம் செலுத்துவது கஷ்டமாக இருக்கிறது. முடி உதிர்வது முன் தலையின் இரண்டு பக்கங்களிலுமே அதிகமாக இருக்கிறது. இதை நிறுத்துவதற்கு நான் பல முயற்சிகள் செய்தும் பயன் ஏதும் இல்லை. இது ஏன் ஏற்படுகிறது? ஏதாவது சத்துக் குறைவினாலா? இதற்கு வைத்தியம் உண்டா? இதனை நிவர்த்தி செய்வதற்கு ஏதாவது முறைகள் இருக்குமானால் தயவுசெய்து இது சம்பந்தமாக அறியத்தருவீர்களா?

ப : *உங்களுக்கு ஏற்பட்டிருப்பதை (முடி உதிருவதை) அன்றெஜெனிக் அலோபேசியா (Androgenic Alopecia) என்று சொல்லுகிறார்கள். இது சத்துக்குறைவினாலோ அல்லது வேறு எந்தக் குறைபாட்டினாலோ ஏற்படுவது இல்லை. இது பரம்பரை காரணமாக உங்களுடைய முன்னோர்களிடமிருந்து பிறப்பின்போதே உங்களுக்குக் கடத்தப்பட்ட ஓர் இயல்பின் காரணமாகவே ஏற்படுகிறது. உடலில் ஆண்மைக்குப் பொறுப்பாக உள்ள அன்றெஜன் (Androgen) என்னும் ஒரு ஓமோன் சுரப்பே தலைமுடி உதிருவதற்கும் காரணமாக அமைகிறது. ஆண்களுக்கு ஏற்படும் இந்தத் தலைமுடி உதிர்வு 12 வயது தொடக்கம் 40 வயதுவரை நீடிக்கும். காலங்காலமாக இதற்குப் பல்வேறுபட்ட வைத்திய முறைகள் செய்யப்பட்டு வந்தாலும் இவை பெரும்பாலும் வெற்றியளிக்கவில்லை. இதற்கான வைத்திய முறைகள் திருப்திகரமாக அமைய வில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் முன்னேற்றகரமான பெறுபேறுகளைக் கொடுத்துள்ளன.*

*Finasterid என்னும் ஒரு மருந்து பலருக்குக் கொடுத்துப் பரீட்சிக்கப் பட்டுள்ளது. இவற்றைப் பாவித்தவர்களில் 83 சதவீதமானவர்களுக்கு தலைமுடி உதிர்வது முற்றாக நின்றதுடன் தலைமுடி அதிகமாக வளர்ந் துள்ளது. இந்த மருந்துடன் Minoxidil எனும் ஒரு மருந்தையும் தலையில் பூசி வந்தால் இன்னும் நல்ல பெறுபேறுகள் கிடைக்கும் என்று உறுதி செய்யப் பட்டுள்ளது. அன்றெஜெனிக் அலோபேசியாவை நிவர்த்தி செய்ய இந்த இரண்டு மருந் துகளுக்கு மாத்திரமே USFDA அனுமதி வழங்கியுள்ளது.*

**இயற்கைக்கு முரணான நடத்தை ஆபத்துத் தரக்கூடியது.**

*இந்த மருந்துகளைப் பாவிக்கும் பொழுது சில பக்க விளைவுகள் ஏற்பட முடியும். எனவே ஒரு மருத்துவரின் அனுமதியுடனேயே நீங்கள் இதனைப் பாவிக்க முடியும்.*

*இந்த மருந்துகளை நீண்ட நாட்களுக்குப் பாவிக்க வேண்டியிருக்கும். உங்களுக்கு இயற்கையாக ஏற்படும் நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை வளர்த்துக் கொண்டால் இந்த மருந்துகளைப் பாவிக்க வேண்டிய அவசியம் இருக்காது.*

கே :எனக்கு 22 வயது (ஆண்) கடந்த 3 வருடங்களாக ஓரினச்சேர்க்கைப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டேன். நான் இதை நிறுத்துவதற்கு முற்பட்டபோது சிலர் இது ஒரு தவறான காரியமல்ல எனவும் இதனால் எதுவித ஆபத்தும் ஏற்படாது என்றும் கூறினார்கள். இது சம்பந்தமாக ஒரு வைத்தியரிடம் நேரடியாகச் சென்று கேட்க முடியாதுள்ளது. இது சம்பந்தமாக உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

ப : *ஓரினச்சேர்க்கை என்பது இயற்கைக்கு முரணானதும், ஆபத்தானதுமான ஒரு செயற்பாடாகும். இதை நீங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதன் போது HIV (AIDS) தொற்றிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் மிகமிக அதிகமாகும். இதைவிட வேறு பல பயங்கரமான நோய்களும் ஓரினச் சேர்க்கை மூலம் தொற்றக்கூடிய சாத்தியம் உண்டு. உதாரணமாக Hepatitis B, Hepatitis -C, சில பக்றீயா தொற்றுதல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுடன் சமூகத்திலிருந்தும் நீங்கள் ஒதுக்கப்படுவீர்கள். எனவே இந்தப் பழக்கத்தை நீங்கள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

கே : எனக்கு 43 வயது (பெண்). நான் கடந்த 10 வருடங்களாக வயிற்று நோவினாலும் வயிற்றுப் போக்கினாலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வயிற்றுப் பொருமலும், வயிற்று நோவும் அடிக்கடி ஏற்படுகின்றன. சில சமயம் மலம் கழித்தபின் நோ சற்றுக் குறைவடைந்தாலும் சற்று நேரத்தின் பின் மீண்டும் அடிவயிற்றில் நோவும் வயிற்றுப் பொருமலும் ஏற்படுகின்றன. இந்த நோவினால் ஒரு நாளைக்கு 4—5 தடவைகள் வரை மலம் கழிக்க வேண்டி ஏற்படுகிறது. சிலசமயம் மலத்துடன் சீதமும் வெளியேறுகிறது. X- றே, ஸ்கான், சிக்மொய் டோஸ்கோபி, எண்டோஸ் கோபி, இரத்தச் சோதனைகள் எனப் பலவிதமான சோதனைகள் செய்யப்பட்டன. மலமும் சோதித்துப் பார்க்கப்பட்டது. இருந்த போதும் இந்த நோய்க்கான காரணத்தைக் கண்டறிய முடியாமல் போய்விட்டது. சில டாக்டர்கள் இது மன நோயுடன் சம்பந்தப்பட்டது என்று சொல்கிறார்கள். எனக்கு எந்த விதமான மன நோயும் இல்லை. எனது ஒரே மகளுக்கு அஸ்மா நோய் ஏற்பட்டிருக்கிறது என்ற கவலை மட்டும்தான் இருக்கிறது. எனது இந்த நோயை மாற்றுவதற்கு உங்கள் ஆலோசனை உதவும் என நம்புகிறேன். இது வயிற்றில் ஏற்பட்ட புற்றுநோயின் அறிகுறியாக இருக்குமோ எனப் பயமாக உள்ளது. உங்கள் பதிலை விரைவாக எதிர்பார்க்கிறேன்.

**கீரை, அவரை, பழங்கள், சோயா மற்றும் மரக்கறி வகைகள் பெருங்குடல் நோயைக் கட்டுப்படுத்தும்.**

ப: *உங்களுக்கு ஏற்பட்டிருப்பது இறிரபிள் பவல் சின்றோம் (Irritable bowel syndrome) என்று சொல்லப்படுகின்ற பெருங் குடல் சம்பந்தமான ஒரு நோயாகும். இது ஒரு ஆபத்தான நோய் அல்ல. புற்றுநோயோ அல்லது வேறு எந்தக் கடுமையான நோய்களோ ஏற்படுவதற்கு இது காரணமாக அமைய மாட்டாது. எனவே நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.*

*உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நீண்டகால கடுமையான அறிகுறிகளை நல்ல முறையில் கட்டுப் படுத்த முடியும். இதற்குப் பொறுமையும் உங்கள் நாளாந்த நடைமுறையில் சில மாற்றங்களும் அவசியமாகும். உங்கள் உணவிலே நார்த்தன்மை கூடிய உணவுகளான மரக்கறி, கீரை வகைகள், பழங்கள், அவரை, சோயா போன்றவற்றை 3 வேளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். தவிட்டு அரிசிச் சோற்றைப் பாவிப்பது நல்லது. எண்ணெய், கொழுப்புக் கூடிய உணவுவகைகள் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளவேண் டும். சில வகையான உணவுகளைத் உண்ணும் போது உங்களுக்கு இந்த அறிகுறிகள் கடுமையாகத் தோன்றினால் நீங்கள் அந்த வகையான உணவு களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். (ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதமான உணவு ஒத்துக் கொள்ளாமல் இருக்க முடியும்).*

*இவற்றைவிட பதற்றம், கவலை, பயம் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். தினமும் போதியளவு நேரம் அமைதியான சூழ் நிலையில் ஓய்வு எடுப்பது அவசியம். நித்திரை விழித்து வேலைசெய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.*

*உங்களுடைய மகளின் அஸ்மா நோயை ஆரம்ப நிலையிலேயே முற்றாகக் கட்டுப்படுத்தலாம். (இது சம்பந்தமாக முன்பு சுடர்ஒளியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது) இதை நினைத்துக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.*

*இவற்றுக்கு மேலதிகமாக உங்களுடைய வயிற்று நோவையும் வயிற்றுப் பொருமலையும் கட்டுப் படுத்துவதற்குப் பலவகை மருந்துகள் உள்ளன. இவை பெருங்குடல் கடுமையாக சுருங்கி விரிவதைத் தடுத்து நோவைக்குறைக்கும். அத்துடன் உங்கள் மன நிலையைச் சாந்தப்படுத்துகின்ற மருந்துகளும் உங்கள் அறிகுறிகளைக் கட்டுப்படுத்த உதவியாக இருக்கும். எனவே வைத்தியர் உங்களை சோதித்துப்பார்த்து உங்களுக்கு ஏற்ற மருந்தின் ரகத்தையும் அளவையும் தெரிவுசெய்து தருவார். Anti- cholinergic drugs, Antacids, Anti- diarrhea medication, Antidepressants போன்ற வகையான மருந்துகள் உங்களுக்கு உதவலாம். இவற்றை வைத்தியரின் மேற்பார்வையில் பாவித்துவர வேண்டும்.*

*உங்களுடைய இந்த நீண்டகால நோய் கட்டுப் பாட்டிற்குள் வர சில காலம் எடுக்கலாம். எனவே அது வரை நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.*

# ராசி பலன்

14 10 2001 முதல் 20 10 2001 வரை
பொ.சந்திரன்.

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

சனி, குரு நல்ல இடத்தில் இல்லாவிடினும் செவ்வாய் உச்சமாக இருப்பதும் ராகு, கேது நல்ல விதமாக இருப்பதும் விசேஷம். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் போதிய கவனம் இருக்காது. மன அமைதி இருக்காது. தொடங்கிய கருமம் தடை வரினும் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் முன்னேற்றம் உண்டு. தெய்வ அனுக்கிரகம் உண்டு.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

சனியையும் ராகுவையும் தவிர மற்றைய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது விசேஷ அம்சம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும் மன அமைதி ஓர் அளவு இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். தொடங்கிய செயல் நல்ல விதத்தில் முடிப்பீர்கள். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறுது பாதிக்கலாம். தொழில் துறை சீராக இருக்கும்.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

குரு, ராகு, கேதுவைத்தவிர மற்றைய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது யோகம். எடுத்த கருமத்தைத் திறம்படச் செய்து முடிக்க இயலும். பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் சீரான முன்னேற்றம் இருக்கும். தெய்வ அனுகூலம் இருக்கும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்களைத் தவிர மற்றைய கிரகங்கள் எல்லாம் உதவக்கூடிய நிலையில் இருப்பது விசேஷம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன நிறைவு இருக்கும். எடுத்த கருமத்தை இடையில் தடை காரணமாக விட வேண்டி வரலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் யோகம் உண்டு.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

சூரியன், கேதுவைத்தவிர மற்றைய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது விசேஷ அம்சம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன ஒருமைப்பாடு இருக்கும். தொடங்கிய செயல் நல்ல முறையில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் சில பின்னடைவுகள் வரலாம்.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

செவ்வாய், கேது, சூரியனைத்தவிர மற்றைய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது யோகம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். நினைத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உடல் ஆரோக்கியம் நன்று. திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

சனி, சூரியன், சுக்கிரனைத்தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எடுத்த கருமங்கள் தாமதமாக நிறைவேறும். உடல் ஆரோக்கியம் நன்று. திருமண யோகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

குரு, சனி, கேதுவைத்தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணம் தட்டுப்படலாம். கல்வியில் போதிய கவனம் இருக்காது. மனம் சமநிலையில் இருக்காது. நினைத்த காரியத்தை நல்ல முறையில் செய்து முடிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. தேக சுகம் நன்று. தொழில் துறை முன்னேறும். தெய்வகடாட்சம் இருக்கும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

ராகு, கேதுவைத்தவிர மற்றைய கிரகங்கள் எல்லாம் நன்மைசெய்யும் நிலையில் உள்ளன. பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன ஒருமைப்பாடு இருக்காது. நினைத்த கருமம் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் முன்னேற்றம் உண்டு.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

குருவைத்விர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை நேர்த்தியாகச் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். தேகசுகம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறை முன்னேறும். நண்பர் களின் உதவியுண்டு. தெய்வீக அருள் கிடைக்கலாம்.

### கும்பம் : அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1,2,3

சனி, சுக்கிரன், புதனைத்தவிர மற்றைய கிரகங்கள் நன்மைசெய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த கருமம் இலகுவில் முடிக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. தேகசுகம் நன்று. தொழில்துறை முன்னேறும். புதிய தொழில் அமையலாம். நண்பர்களின் உதவியுண்டு. தெய்வ அருள் கிட்டும்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

ராகு, சூரியன் நன்மை செய்யாது குரு மத்திமபலம் மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயல் நல்ல முறையில் செய்து முடிக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். தேக சுகம் நன்று. தொழில் துறையில் போதிய முன்னேற்றம் இல்லை.



# பிரச்சினைகள் சவால்களாக...!

எந்த ஒரு பெண்ணுடன் கதைக்க நேர்ந்தாலும் அவள் தனக்குரிய பிரச்சினைகளைச் சங்கிலி போல கூறிக்கொண்டே போவாள். ஆனால் அவற்றிற்குரிய அடிப்படை எங்கே உள்ளது என்று அறிய மறந்து போகிறார்கள்.

எமக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால் உடனே அப்பிரச்சினைக்கான காரணத்தைக் கூறு கூறாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். அதிலிருந்துதான் பிரச்சினையின் ஆரம்பத்தை அறிய முடியும்.

இவ்வாறாகத் தேடிக்கொண்டு போகும்போது பெண்ணாகப் பிறந்ததுதான் பிரச்சினைக்கான காரணம் என்று பலர் நினைக்கின்றனர்.

உண்மையாகவே பிரச்சினைகளுக்கு இதுதான் காரணமா? அவ்வாறாயின் ஆண்களுக்குப் பிரச்சினைகளே ஏற்படுவதில்லையா? அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

உங்கள் பிரச்சினையின் ஆரம்பத்தைத் தேடிக்கொண்டு போகும்போது நீங்கள் பெண்ணாக இருப்பதே அதற்குக் காரணம் என விடை கிடைத்தால், அத்தகைய விடையை மீண்டும் மீண்டும் பரிசீலியுங்கள்.

நீங்கள் பெண்ணாக இருக்கும் ஒரே காரணத்துக்காகப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்குப் பலரும் முயற்சிக்கலாம். ஒரு பெண்ணின் பலங்களையும் பலவீனங்களையும் அறிந்துகொள்ளும் நபர்கள் பிரச்சினைகளைத் தூண்ட முற்படுகின்றனர்.

இவற்றைக் கருத்தில்கொண்டு ஒருவர் பெண்ணாக இருப்பதால்தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கூறமுடியாது.

ஒரு பெண்ணின் மன உறுதி, சிந்திக்கும் முறை, அனுபவம் என்பவற்றின் தன்மைகளுக்கேற்ப பிரச்சினைகளும் கூடிக் குறைகின்றன.

பிரச்சினைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ வரலாம். அனைத்தையும் உள்வாங்கி இதுதான் முடிந்த முடிவு என்று தீர்மானிக்கக் கூடாது. மனச் சுமைகள் அதிகமாக வரும்போது தாங்கிக்கொள்வது கடினம்தான். அதற்காக இடிந்துபோய்விடக் கூடாது.

ஒவ்வொரு கருமையான முகிலிலும் வெள்ளிக்கோடொன்று இருப்பதாக ஆங்கிலப் பழமொழி ஒன்று இருக்கிறது. (Every dark cloud has a silver line) எனவே பிரச்சினைகளைச் சவால்களாக எடுங்கள்.

உங்களை ஒருவர் சுழற்றி நிலத்தில் அடித்தால் கூட அந்தக் காயங்களைப் பற்றியே சிந்தித்து காலத்தைக் கடத்தாதீர்கள். அடியைத் தாங்கும் வலிமை உடலுக்கு இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்.

பெண்ணாகப் பிறந்தது ஒரு குறையல்ல. உங்கள் சாதனைக்காக சமுதாயம் காத்திருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

# தேக ஆரோக்கியத்துக்கு உகந்த உடற்பயிற்சி

நல்ல தேக ஆரோக்கியம் இருந்தால்தான் அன்றாட வேலைகளை நாம் சிறப்புறச் செய்யலாம். எனவே உங்கள் உடலைத் திடமாக வைத்துக்கொள்வது அவசியம்.

கீழே குறிப்பிட்டுள்ள இலகுவான உடற்பயிற்சிகளைச் செய்துபாருங்கள். வித்தியாசத்தை உடலில் உணர்வீர்கள். காலையில் அல்லது மாலையில் அரை மணி நேரத்திற்குச் செய்து பழகுங்கள்.

* குதிக்கால் தரையில் படாதவாறு இருபது தடவைகள் இருந்து எழும்பவும்.
* இடுப்பில் கை வைத்துக் கொண்டு கால்களை அசைக்காமல் இடுப்புக்கு மேல் இடது பக்கமாக 10 முறை திரும்புங்கள். பிறகு 10 முறை வலது பக்கமாகத் திரும்புங்கள்.
* கால்களை அகல விரித்துக் கொண்டு முட்டி மடங்காமல் கைளைக் கொண்டு தரையைத் தொட முயற்சியுங்கள்.



* சாதாரணமாக நின்றுகொண்டு வலது கையை 10 முறை சுழற்றுங்கள். பின்பு இடது கையை 10 முறை சுழற்றுங்கள்.
* 20 தடவைகள் ஒரே சமயத்தில் குனிந்து எழும்புங்கள்.
* நின்ற நிலையில் ஓடுகிற மாதிரி 5 நிமிடங்களுக்கு செய்யுங்கள்.

இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் உடல் பலம் பெற்று அழகுடன் திகழ்வீர்கள்.



# காதலியுங்கள்! ஆனாலும் 'உஷ்..... கவனம்!'

பெண்களே அதிகமாக அவர்களுடன் தொடர்புகொள்வார்கள். எப்போதுமே தன் காதலனைச் சந்தோஷப்படுத்த முற்படும் பெண்களுக்கு அதே சந்தோஷம் திரும்பவும் கிடைப்பதில்லை.

தாம் காதலிப்பவரை இழந்து விடுவோமோ என்ற அச்சம் எப்போதும் பெண்களுக்கு இருக்கும். அவர் பக்கத்தில் இருந்தால் மட்டுமே சில பெண்களுக்கு

பெண்கள் காதலிக்க ஆரம்பித்தால்போதும் தம்மைக் காதலனுக்கே அர்ப்பணித்து விடுவார்கள். இது சற்று ஆபத்தான ஒரு நிலைமை.

ஏனெனில் தாம் காதலிக்கும் ஆண் தம்மைக் கைவிட்டுச் சென்றுவிட்டால் அதைத் தாங்கிக்கொள்ளும் மன வலிமை பெண்களுக்கு இல்லாமல் போய்விடும். காதல் தோல்வியிலிருந்து விடுபட்டுச் சாதாரண நிலைமைக்கு வருவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

காதலிக்க ஆரம்பித்துவிட்டால் பெண்கள் தம்மைப் பற்றி கவனம் எடுப்பதில்லை. நெருங்கிய நண்பர்களுக்காகத்தானும் நேரம் ஒதுக்கமாட்டார்கள்.

காதலனை விட்டுப் பிரிய மனம் வராது. சந்தோஷம்.

இப்படியான மன நிலைகளில் இருந்து பெண்கள் விடுபடல் வேண்டும். காதல் என்பது சந்தோஷமான, இனிமையான ஓர் உணர்வு. ஆனால் அதற்கு உங்களை அடிமைப்படுத்தி விடாதீர்கள்.

எப்போதும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து மன நிறைவுடன் பழகுங்கள். இதில் தவறில்லை.

ஆனால் சற்று யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து வாழ எல்லாப் பெண்களும் முன்வர வேண்டும். என்ன நடந்தாலும் வாழ்க்கையின் மிகுதி நாட்களை ஆக்கபூர்வமாக வாழும் மன பலத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

காதலியுங்கள் ஆனால் கவனமாக இருங்கள்!

பெண்

பசீனா

# உடனிருந்து கொல்லும் வியாதி



எந்த ஒரு விடயத்தையும் சந்தர்ப்பம் வரும்போது மட்டும்தான் பேசுகிறோம். பின்பு அதன் தலைப்பையே மறந்துவிடுகிறோம்.

இதனால்தான் பல விடயங்கள் இன்னும் தெளிவு பெறாமல் இருக்கின்றன.

எயிட்ஸ் என்ற கொடிய நோயும் அவ்வகையானதுதான். டிசம்பர் மாதம் முதலாம் திகதியில் தான் பலர் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வு தொடர்பாகப் பேசுகிறார்கள்.

பெண்களுக்கு எயிட்ஸ் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகரித்துவிட்டன. சரியான பாலியல் கல்வி இன்மை, இடம்பெயர்வு, போதிய சுகாதார வசதிகள் இன்மை முதலான காரணங்களால் இந்நோய் பரவுகிறது.

பல பெண்கள் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். குறிப்பாக மத்திய கிழக்கிற்குச் செல்லும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுகின்றனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் காரணமாகப் பல பெண்கள் இடம்பெயர்கின்றனர். இவர்கள் பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பெருந்தோட்டங்களில் வசிக்கும் பெண்களின் பாலியல் கல்வி அறிவு மிக மிகக் குறைவு. வைத்திய அறிவுரைகள், மருத்துவ வசதிகள் என்பன போதிய அளவில் அவர்களைச் சென்றடைவதில்லை.

இன்று பெண்கள் திருமணம் செய்யும் வயது பிற்போடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் பாலியல் உறவில் ஈடுபடுகிறார்கள். ஆண்கள் பாதுகாப்பு முறைகளைக் கையாள்வதும் மிகக் குறைவாகக் காணப்படுகிறது.

சட்டரீதியற்ற கருக்கலைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இவர்களுள் பலர் பால்ய பருவத்தில் இருக்கும் பெண்கள். சிறுவர்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் கணிசமான எண்ணிக்கையில் கூடி வருகின்றன.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் பெண்களுக்கு எயிட்ஸ் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை அதிகரிக்கின்றன.

'எயிட்ஸ்' என்ற நோயை வெறுமனே ஒரு சுகாதாரப் பிரச்சினையாகப் பார்ப்பது தவறு. இது ஒரு சமூக பொருளாதார பிரச்சினை. இதனைத் தீர்க்க முழுச் சமூகமும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படல் வேண்டும்.

# வேலை பகிர்வு சுமையைக் குறைக்கும்

வீட்டு வேலைகளைப் பெண்கள் மட்டும்தான் செய்ய வேண்டுமா? ஏன் ஆண்களும் சேர்ந்து செய்தால் என்ன?

வீட்டு வேலைகளை யார் செய்வது என்ற கேள்வி எல்லா இடங்களிலும் கேட்கப்படுகிறது.

லண்டனில் நடந்த ஒரு ஆராய்ச்சி பின்வரும் தகவலை வெளியிட்டிருக்கிறது.

1960ஆம் ஆண்டில் ஒரு ஆண் வீட்டு வேலைகளை 10 நிமிடங்களுக்குத்தான் செய்தார். ஆனால் சமீபத்திய தகவல்களின்படி ஒரு ஆண் 50 நிமிடங்களுக்கு வீட்டு வேலைகளைச் செய்கிறாராம்.

இப்போது பெண்களும் ஆண்களுக்குச் சமமாகத் தொழில் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.



இந்நிலைமை 2015ஆம் ஆண்டுவரை தொடர்ந்தால் வீட்டு வேலைகளை யார் செய்வது என்ற பிரச்சினை தீர்ந்து விடும்.

யாருக்கு நேரம் இருக்கிறதோ அவர் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்படும். இவ்வாறு ஆராய்ச்சி கூறுகிறது.

காலத்துடன் கோலமும் மாறுமா?

சற்றுப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

# மலையக கல்வி, சுகாதாரம்: இந்தியாவின் உதவி தாராளம்

## ஆறுமுகம் தலைமையிலான குழு விரைவில் புறப்படுகிறது

மலையகத்தில் கல்வியை அபிவிருத்தி செய்வற்கும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும் உதவ இந்திய அரசு முன் வந்துள்ளது. இது தொடர்பான பூர்வாங்க பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு இ.தொ.கா. உயர்மட்டக் குழு ஒன்று விரைவில் இந்தியா செல்லவிருக்கிறது.



ஆறுமுகம்

தோட்ட உட்கட்டமைப்பு கால் நடைகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

சலுகை அடிப்படையிலும் சிபார்சுகளின் பேரிலும் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்களால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இவ்வாறு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சமுதாய உணர்வுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

நகர்ப்புற பாடசாலைகளை விட இன்று மலையக பாடசாலைகளிலேயே முறைகேடுகள் நிகழ்கின்றன. பாலியல் சேஷ்டைகளும் அதிகரிக்கின் றன. செய்தித்தாள்களில் இந்த விடயங்கள் வெளிவரும் போது மலையகத்தைச் சேர்ந்த அனைவருமே வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

தோட்டத்திலேயே பிறந்து தோட்டத்திலேயே படித்து தேர்ச்சி பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு விசேட சலுகை அடிப்படையில் மறைந்த தலைவர் ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஆனால் இன்று நிலமை தலைகீழாகிவிட்டது. இது வேதனையைத் தருகின்றது.

இதற்கான அடிப்படைக் காரணம் இந்த ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி வழங்கபடாததே ஆகும். இவர்களுக்கு பயிற்சி வழங்கக் கூடிய வாய்ப்பும் இருக்கவில்லை. எனவே உயர்வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகளை வழங்கும் ஆசிரியர்களை தந்து உதவுமாறு இந்திய அரசிடம் கேட்டுள்ளோம். இதே வேளை மலையக ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சித் திட்டம் ஒன்றையும் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

அதே சமயம் மலையகத்தில் சுகாதார வசதிகள் திருப்திகரமாக இல்லை. கடுமையான நோயாளர்கள் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டி உள்ளது. இதற்காக பெரும் தொகையான பணத்தையும் அவர்கள் செலவிடவேண்டி இருக்கிறது.

எனவே ஸ்ரீ ஜெயவர்தனபுர ஆஸ்பத்திரிபோன்று சகல வசதிகளுடனும் கூடிய வைத்தியசாலை ஒன்றை மலையகத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என இந்திய அரசாங்கத்திடம் கேட்டுள்ளேன். இந்திய அரசும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இப்படி அமைச்சர் மேலும் கூறினார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடரவும் பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று இந்தியாவுக்கு செல்ல இருக்கிறது. இத்திட்டம் வெற்றி பெற்றால் நன்மை மலையகத்திற்கே.

# குடிசைகளும் விவசாயமும் நாசம் கிராமவாசிகள் வெறியாட்டம்

தோட்டக் காணிகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து சட்டவிரோதமாக மாணிக்கக் கல் தோண்டுகின்றார்கள் கிராம வாசிகள். தோட்டத் தொழிலாளர்களின் குடிசைகளைத் தீக்கிரையாக்கி அவர்களின் விவசாயத்தையும் நாசமாக்குகின்றனர். தட்டிக் கேட்க ஆள் இல்லை.

இந்த கிராம வாசிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய தோட்ட நிர்வாகமோ அல்லது இந்த அடாவடித் தனங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொலிஸாரோ கண்டும் காணாதது போல் நடந்து கொள்கின்றனர்.

இச்சம்பவங்கள் காவத்தை எத்தாளை மியனவிட்டிய, அவுப்பை ஆகிய தோட்டங்களில் இடம் பெற்றுள்ளன.



தேயிலைச் செடிகள் நாசமாக்கப்பட்டுக் கிடக்கும் அவுப்பைத் தோட்டத்தின் அவல நிலைமை

இங்கு கைவிடப்பட்டு தரிசாகக் கிடந்த 30 ஹெக்டர் தோட்டக் காணியை அத்தோட்டத் தொழிலாளர்கள் துப்புரவு செய்து விவசாயம் செய்து வந்தனர். அங்கு அவர்கள் தமக்கென குடிசைகளையும் அமைத்திருந்தனர்.

தோட்டங்களில் வரட்சி காரணமாக வேலை நாட்கள் குறைந்தன. தொழிலாளர்கள் வருமானம் இழந்தனர். அதனால் தரிசு நிலத்தில் விவசாயம் செய்து வந்தனர்.

இப்பிரதேசத்தில் உள்ள ஓர் இனவாத அரசியல் வாதியின் தூண்டுதலின் பேரில் இக்காணிகளுக்குள் அத்துமீறி பிரவேசித்த கிராமவாசிகள் தொழிலாளர்களின் குடிசைகளுக்குத் தீ வைத்ததோடு விவசாயப் பயிர்களையும் நாசப்படுத்தி விட்டனர்.

இது தொடர்பாக அவுப்பை எத்தாளை தோட்ட நிர்வாகங்களுக்கு அறிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை பிரதேச அரசியல் வாதி ஒருவரின் ஆதரவாளர்களும், கிராமவாசிகளும் மியனவிட்டிய 32 ஆம் இலக்க தேயிலைக்காணியையும் அத்துமீறி அபகரித்து பலாத்காரமாக மாணிக்கக்கல் தோண்டுகின்றனர்.

கிராமவாசிகளுக்கு அரசியல் வாதியின் ஆதரவு இருப்பதால் தோட்ட நிர்வாகமும், பொலிஸாரும் மௌனமாக இருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கத் தலைவர்களிடம் முறையிட்டும் பலன் இல்லை என்று கூறப்படுகிறது.

## மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி

# டேஸ்ட் கடை தணிகாசலம்

தோட்டத்தில் மட்டுமல்ல அந்த டவுன்லயும் தணிகாசலத்திற்கு மரியாதை உண்டு. யார் நல்லது செய்தாலும் பாராட்டுவார், உதவி செய்வார். அதே வேளை யாராவது அடிதடிக்குப் போனால் அதையும் தட்டிக் கேட்க தயங்கமாட்டார்.

நேரடியாகப் பொலிஸ் நிலையத்திற்குப் போய் இன்ஸ்பெக்டரிடம் உண்மையான சம்பவங்களை அவர் எடுத்துக் கூறினார். கசிப்பு கந்தனும் அவனது அடியாட்களும் நடத்திய காட்டுத் தர்பாரையும் ஒன்று விடாமல் கூறினார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட இன்ஸ்பெக்டர் மருதையையும் ரிமாண்டில் இருந்து அழைத்து புத்திமதி கூறியதோடு சற்று கடுமையாக எச்சரிக்கை செய்தார். பின் தணிகாசலத்திடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு மருதையை தணிகாசலத்துடன் அனுப்பினார். மீண் டும் ஒருநாள் இருசாராரையும் அழைத்து விசாரிப்பதாகக் கூறி அன்றைய தினத்தில் தணிகாசலத்தையும் வரும்படி கேட்டுக்கொண்டார்.



மருதையை வீட்டிற்கு அனுப்பிவிட்டு கடைவீதிக்குப் போனார் தணிகாசலம். அப்போது மிகவும் சோர்ந்து போய் கையில் பைலுடன் வந்து கொண்டிருந்தான் கதிரேசன்.

''ஏன்னதம்பி கதிர் டீச்சீங் இண்டர்வியூன்னு போனதா ஒங்க ஆத்தா சொன்னாங்க. போன வெசயம் எல்லாம் எப்படி நல்லபடியா முடிஞ்சதா''

''இண்டர்வியூவுக்கு இன்னும் இரண்டு கிழமை இருக்கு. அதற்கு முந்தி இந்த மாகாண சபை மெம்பரு தனிப்பட்ட முறையில் இண்டர்வியூ நடத்தி லிஸ்ட்டு தயாரிக்கிறாரு.''

''அப்படின்னா நல்லதுதானே. அந்த மெம்பரு ஓட்டு கேட்டு வந்தப்ப நீ எல்லாம் கூடப்போய் நோட்டீசு ஒட்டுன. ராவு பகலா அலஞ்சி வேல செஞ்ச, அவுரு ஒன்னக் கண்டதுமே ஒம் பேர மொத லிஸ்ட்டிலேயே போட்டிருப்பாரே''.

''நீங்க ஒன்னுங்க தணி அண்ணே அந்தமனிசன் என்ன பாத்து எங்கப்பா வந்த? ஒம் பேரு என்ன? எந்த தோட்டம்னு கேட்டுப்புட்டாருங்க''

''அடப்பாவி எப்ப வந்தாலும் கதிரேசனைக் கூப்பிடு கதிரேசனைக் கூப்பி டுன்னு சொன்ன மனு ஷன் ஒன்னப் பார்த்து நீயாரு ஒம் பேரு என்னனென்று கேட்டானா?''

''கடைசியா வந்தப்ப மழையில நனைஞ்சிட்டாரு நீதானே ஒவுட்டுடவல கொண்டாந்து குடுத்த. பெஞ்சில குந்திக்கிட்டு ''தணிகாசலம் அண்ணே ஒங்க மாசி வடைக்கு ஈடா டவுன்ல கூட இல்லன்னு, சொன்னானே''

''அது மட்டுமா சொன்னார் நான் வெத்தி எடுத்து வந்துட்டா கதிரேசன் தான் என்னோட செக்கரட்டின்னு இலிச்சி இலிச்சி சொன்னானே''

''அதப்பத்தி கூட நான் கவலைப்படல தணி அண்ணே என்னப் பாத்து ''நீ என்னப்பா படிச்சிருக்க நல்ல ஒடம்பு இருக்கு தொரகிட்ட சொல்லி பேரு பதிஞ்சிஉடவா ஒன்னோட ஆத்தா தங்கச்சிமாருக்கும் ஒதவியா இருக்கும்னு'' சொன்னது அண்ணே. அது தான் எனக்கு பெரிய வேதனையாப் போச்சி''

''ஒன்னப் பார்த்து அப்படிக் கேட்டானா? ஓட்டுக் கேட்க கூடவந்த பழைய ஆளுங்க இல்லையா? அவனுங்க கூட ஒன்னும் சொல்லலியா?''

''பழைய ஆளுங்க ஒருத்தரையும் காணோம். புதுசா ஒரு சிவப்புப் பெண் இருக்கா. அவதான் இந்த மெம்பரோட செயலாளராம்''

''அவவின் கையில ஒரு பயில். அதுல பாத்து ஒவ்வொரு பேரா சொல்றா. அங்கன ஒரு கூஜா தூக்கி வந்து வந்து கூட்டிக்கிட்டுப் போறான்''

''காம்பிராவுக்கு உள்ளே போன இளம் பொண்ணுகள்ள சிலர் சந்தோஷமா வந்தாங்க, சிலர் அழுதுகிட்டுவந்தாங்க.''

''என்ன தம்பி நீ சொல்லுற சிலர் சந்தோஷமாவர்ராங்க, சிலர் கவலயா வந்தாங்கங்கிற. கொஞ்சம் வெவரமா சொல்லுப்பா''

''நீங்க என்ன அண்ணே ஒங்களுக்கு ஒன்னுமே புரியமாட்டேங்குது. வாட்ட சாட்டமா, செவப்பா போனவங்கள் சிரிச்சிக்கிட்டு வந்தாங்க''

''இது என்னடா பெரிய அநியாயமா இருக்கு''

''அதே மெம்பர்தான் கலியாணம் கட்டி பெரிய பெரிய புள்ளாங்க எல்லாம் இருக்கே''

''இது பத்தாததுக்கு இன்டர்வியூ வச்சி தெரிந்தவங்களா டேட் போட்டு தனியாக வரச் சொல்லியிருக்கிறாரு''

''எது எப்படியோ போகட்டும் கடைசியா ஒனக்கு என்ன சொன்னான்?''

''அவனுக்கு வேலை செஞ்ச எங்க ஒருத்தரையும் தெரியாதுன்னு சொல்லிப்புட்டான்.

''கடைசியா ஒரு லிஸ்ட் தயாரிச்சான் அதுல்ல கடைக்கார மொதலாலிமாரோட பயிலுக முன்ன பின்ன இந்த ஏரியாவே தெரியாத புதுப்பயிலுக கொஞ்சம் பேர சேர்த்துக்கிட்டான். '' எங்களை எல்லாம் வேறு ஒரு நாளைக்கு கூப்பிறதா சொல்லிப்புட்டு ஜீப்புல ஏறிப் போயிட்டான்.

''நீ கவலைப்படாத கதிர் ஒனக்கு கவர் மெண்டு காயிதம் வந்திருக்குத்தானே?''

''அது வந்திருக்கு அண்ணே''

''அந்த கடுதாசியில் இந்த மாகாணசபை மெம்பர்கிட்ட போய் பேர் குடுங்கன்னு எழுதி இருக்கா?

''இல்ல அண்ண''

''இது எல்லாம் இந்தப் பயலோட சுத்து மாத்து காசு அடிக்கப் பாக்கிறான் . ஏமாந்த புள்ளகளை சப்பித்துப்ப அலையிறான்.''

''நீ தைரியமா இரு கதிர் கல்வி கந்தோருல இன்டர்வியூ நடக்கிறப்போ நான் ஒன்ன நம்ப மந்திரிக்கிட்டயே கூட்டிப் போறேன். வேலைகளை எல்லாம் அப்படியே போட்டுட்டு வந்தேன்.'' அந்த ஆட்டோவை தட்டு என்றார் தணிகாசலம்.''

ஆட்டோவும் வந்தது தணிகாசலமும் கதிரேசனும் ஆட்டோவில் ஏறிக் கொண்டனர்.

— இராசிகா

## வேண்டாம் குடும்பக் கட்டுப்பாடு தேவை தீவிர பிரசாரம்

மலையகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராக தீவிர பிரசாரம் செய்ய வேண்டும். இல்லையேல் தமிழர்களின் எண்ணிக்கை மேலும் குறைந்து விடும்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ். இராஜரட்ணம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

''தமிழர்களின் பிறப்பு விகிதம் கடந்த 20 வருடங்களில் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது என்று குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் விமல் நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். அதேவேளை முஸ்லிம்களின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது.

''1981 ஆம் ஆண்டுக்குப் பின் கடைசியாக நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி (வடக்கு – கிழக்கு மாகாணம் தவிர்ந்த) சிங்களவர்கள் 81.9 சதவீதம், இலங்கைத் தமிழர் 4.4 வீதம். இந்தியத் தமிழர் 5.1 சதவீதம். முஸ்லிம்கள் 8.0 சதவீதம் என்றுகுடிசன மதிப்பீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.


''கடந்த இருபது வருட கால இடைவெளியில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

''இதன் காரணமாக மலையகப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் சேர்ப்பதற்கு போதுமான மாணவர்கள இல்லை. காலம் காலமாக இயங்கி வந்த முன் பள்ளிகள் பலமூடப்பட்டு விட்டன.

''இந்த நிலைமை நீடித்தால் மலையகத் தமிழ் இனம் மேலும் குன்றிக் குறுகிப் போய்விடும்.

''எனவே மலையகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தீவிரமாகப் பிரசாரம் செய்து சமுதாயப் பேரழிவில் இருந்து மலையக மக்களைக் காப்பாற்ற வேண்டும். மலையக தொழிற் சங்கங்கள் தொழிற் பிரச்சினைகளோடு மட்டும் நின்று விடக் கூடாது. தோட்டங்கள் தோறும் குழுக்களை அமைத்து தீவிர பிரசாரங்களை நடத்த வேண்டும்.

இப்படி இராஜரட்ணம் கேட்டுக் கொண்டார்.




"க்றீ...ச்..."

அந்தச் சிறை அறையின் கதவு அகலத்திறந்தது. இருட்டில் உறங்கிக் கொண்டிருந்த ரொப்பும் டானியும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள்.

"டேய் பெருச்சாளிகளா... உங்களோடு சேர்ந்து இந்த அறையில் கிடப்பதற்காக இன்னுமொரு பெருச்சாளிப் பயலும் வந்திருக்கிறான்...!" வார்டனின் கம்பீரக்குரல் அந்தக் கூடத்தையே அதிரவைத்தது.

மறுகணம்—

வார்டன் உதைத்த உதையின் வேகத்தோடு உள்ளே வந்துவிழுந்தான் ஒருவன்.

சிறை அறைக்கதவைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார் வார்டன்.

உயரே இருந்த ஜன்னல் கம்பியினூடாக உள்ளே கசிந்த நிலவொளியில் அந்தப் புதிய மனிதனது முகத்தைப் பார்த்த ரொப், டானி இருவரும் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள்.

"நீ... நீ... மெக்கன்ஸி அல்லவா?" ரொப்பின் கேள்விக்கு உடனடியாகப் பதில் தராமல் அவர்களிருவரையும் கூர்ந்து நோக்கினான் அந்தப் புதியவன்.

"நீங்களிருவரும் ரொப்பும் டானியும் தானே?" தான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறாமல் எதிர்க்கேள்வி கேட்கும் புதியவனின் மீது எரிச்சல் வந்தது ரொப்புக்கு.

"ம்... ம்..." புதியவனின் கேள்விக்குப் பதிலாக சிறு ஆமோதிப்பு ஓசைமட்டுமே வந்தது ரொப்பின் வாயிலிருந்து.

"நான்தான் மெக்கன்ஸி!" ரொப்பின் கோபத்தைப் புரிந்து கொண்டிருந்தான் புதியவனான மெக்கன்ஸி.

"நீ குற்றச் செயல்களிலிருந்து விலகி திருந்தி வாழ்ந்து கொண்டிருப்பதாகவல்லவா கேள்விப்பட்டோம்?" என்றான் டானி

"திருந்தித்தான் இருந்தேன். ஒருவம்பில் மாட்டிக் கொண்டதால் உள்ளே போட்டு விட்டார்கள். ஆனால் இங்கிருந்து தப்பிப் போய்விடுவேன். எந்தச் சிறைக் கம்பிகளும் என்னைக் கட்டிப் போட்டுவிட முடியாது" உறுதியுடன் வந்தன மெக்கன்ஸியின் வார்த்தைகள்.

"இங்கிருந்து தப்பிப்பதென்பது இயலாத காரியம். சுட்டுத்தள்ளி விடுவார்கள்" கூறிய ரொப்பின் குரலில் பதற்றம் இருந்தது.

அதைக் கேட்ட மெக்கன்ஸி கடகடவென நகைத்தான். "எண்ணி இரண்டே நாட்களில் இந்தச் சிறையிலிருந்து நான் தப்பித்துக் காட்டுகிறேன்! அதன் பிறகாவது என்னைப்பற்றி புரிந்துகொள்வீர்கள் நீங்களிருவரும்."

மெக்கன்ஸியின் வார்த்தைகளைக் கேட்ட ரொப்பும் டானியும் அவனை நெருங்கி அமர்ந்து கொண்டார்கள். மெக்கன்ஸியின் வார்த்தைகள் வெறும் பகட்டுப் பேச்சுக்காகக் கூறப்பட்டவை அல்ல என்ற எண்ணம் அவர்களது மனங்களில் தோன்றியிருந்தது.


மெக்கன்ஸி குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்த நாட்களில் அவனது சிறை உடைப்புச் சாதனைகள் அமெரிக்கா முழுவதும் பிரசித்தமானவை. அதிதீவிர பாதுகாப்புகள் கொண்ட சிறைச்சாலைகள் கூட அவனது கைவரிசையின் முன் செல்லாக்காசாகிப் போய்விடும். மெக்கன்ஸியைத் தடுத்து காவலில் வைக்க இயலாமல் பொலிஸார் திணறிக் கொண்டிருந்தனர்.

எந்த ஒரு ஆரம்பத்துக்கும் முடிவு ஒன்று இருக்கத்தானே வேண்டும்? மெக்கன்ஸியின் சாகஸங்களும் முடிவுக்கு வந்தன. அவனுக்கு ஏற்பட்ட பார்வைக் கோளாறு அவனது குற்றவியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவனைப் பொலிஸாரிடம் சரணடைய வைத்தது.

தண்டனைக் காலம் முடிவடைந்து வெளியே வந்த— மெக்கன்ஸி, வயது முதிர்ச்சியாலும் பார்வை சீரில்லாததாலும் மறுபடியும் குற்றத் தொழிலில் இறங்காமல் அமைதியாகவே காலத்தைக் கழித்துவந்தான்.

இப்போது மறுபடியும் அவனது குற்றச் செயல்கள் ஆரம்பமாகி, அவன் சிறைக்கு வந்து சேர்ந்திருக்கின்றான்.

அமெரிக்காவில் அடுத்தடுத்து நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சம்பந்தப் பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்தான் ரொப்பும் டானியும்.



ஆனால் அவர்களிடமிருந்து எந்த உண்மையையும் வரவழைக்க பொலிஸாரால் இயலவில்லை. எனவே தொடர்ந்தும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர் இருவரும். சிறை உடைப்புகளில் கில்லாடியான மெக்கன்ஸியின் வருகை, ரொப், டானி இருவருக்கும் இந்தச் சிறையிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

* * *

அந்த அடர்ந்த காட்டுப் பகுதியினூடாக மூன்று உருவங்கள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தன.

அவர்கள் மூவரும்—

ரொப், டானி, மெக்கன்ஸி ஆகியவர்கள் தான்! திட்டமிட்டு — சரியான தருணத்தில் — சிறையிலிருந்து தப்பிவிட்டனர் அம்மூவரும். மெக்கன்ஸியின் நரிமூளை அந்த அசகாயச் சாதனையைச் செய்து முடித்திருந்தது. தப்பிக்கும்போது மூன்று காவலாளிகள் மெக்கன்ஸியின் துப்பாக்கிக்குப் பலியாகிப் போனார்கள்.

"கொலைக்கும் அஞ்சாதவன் இவன்" என்று நினைத்துக் கொண்டனர் மற்றைய இருவரும். ஓடிக் கொண்டிருந்தவர்கள் அந்தக் காட்டுச் சாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்காகக் காத்திருந்தது ஜீப் ஒன்று. அவர்கள் தப்பிப்போகப் போவது பற்றிய தகவல் ரொப், டானி இருவருடைய ஆட்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்ததால் அவர்கள் அங்கே காத்திருந்தனர்.

மூவரையும் ஏற்றிக் கொண்டு விரைந்தது ஜீப் வண்டி.

* * *

ஐந்து மணி நேரப் பயணத்துக்குப் பின்னர் அந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தனர் அவர்கள்.

அந்த மாளிகை, வெளித் தோற்றத்துக்கு சாதாரணமாக இருந்தாலும் உள்ளே பிரமாண்டமான தோற்றத்தைக் கொண்டிருந்தது. காவலும் பலமாகவே இருந்தது.

"மெக்கன்ஸி, இதுதான் எம்முடைய பாஸின் இருப்பிடம். அவரைச் சந்திக்கும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது. உன் திறமை அவரைக் கவர்ந்து விட்டது. எமது குழுவில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு உனக்குக் கிடைக்கப் போகிறது..." சுதந்திரப் பறவையாகிவிட்ட சந்தோஷத்துடன் கூறிக் கொண்டே போனான் ரொப்.

வார்டன் உதைத்த உதையின் வேகத்தோடு உள்ளே வந்துவிழுந்தான் ஒருவன்.
சிறை அறைக்கதவைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார் வார்டன்.
உயரே இருந்த ஜன்னல் கம்பியினூடாக உள்ளே கசிந்த நிலவொளியில் அந்தப் புதிய மனிதனது முகத்தைப் பார்த்த ரொப், டானி இருவரும் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள்.

"ஹலோ மிஸ்டர் மெக்கன்ஸி" குரல் வந்த திக்கில் திரும்பினான் மெக்கன்ஸி.

'அட, இவனா?', முணுமுணுத்தன மெக்கன்ஸியின் உதடுகள்.

"என்னைத் தெரிகிறதா? நான் தான் லூயிஸ். உன் முன்னாள் நண்பன்!"

"நினைவிருக்கிறது என் 'முன்னாள்' நண்பனே! உன்னை மறக்க இயலுமா என்னால்?"

"நாமிருவரும் இணைந்து நடத்திய குற்றச் செயல்கள் இன்றும் என் நினைவில் அழியாமல் இருக்கின்றன நண்பனே!"

"அது சரி லூயிஸ், இந்த இரு பயல்களும் செய்த நாச வேலைகளுக்கெல்லாம் சூத்திரதாரி நீதானா?" மெக்கன்ஸியின் கேள்விக்குப் பதில் கூறுமுன், சிறிது நேரம் மௌனமாக இருந்தான் லூயிஸ். பின்னர் பேச ஆரம்பித்தான்.

"யெஸ் மெக்கன்ஸி! நான் தான் இவர்களுக்கெல்லாம் தலைவன். அமெரிக்காவில் அடுத்தடுத்து நடைபெற்ற குண்டுவெடிப்புகளுக்கெல்லாம் காரணகர்த்தா நான் தான்."

"இவற்றால் உனக்கென்ன லாபம்?"

"கோடிக்கணக்கில் பணம்! இந்த வேலைகளைச் செய்து முடிக்க வெளிநாடுகளிலிருந்து பணம் வந்து குவிகிறது என்னிடம்."

"ஓஹோ... எதிரிநாடுகளின் கையாளாகி விட்டாயா நீ? கொள்ளையடிப்பதிலும் ஒரு நேர்மை இருக்க வேண்டும் என்று நினைக்கும் என் நண்பன் லூயிஸாகவே இப்போதும் நீ இருப்பாய் என்று எதிர்பார்த்தேன்..." மெக்கன்ஸியின் குரலில் வருத்தம் தெரிந்தது.

"இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது நண்பனே? எமக்குத் தேவை பணம்! பணம் வரும்போது மற்றவற்றைப்பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும்?"

"ஓ.கே! உன்கொள்கையில் தலையிட நான் விரும்பவில்லை. நான் என் வழியில் போகிறேன். வருகிறேன்..."

"நில் மெக்கன்ஸி! இனியும் சட்டத்தோடு போராடி, கொள்ளையடித்து உன்னால் வாழ முடியும் என்று நினைக்கிறாயா? நீ எம்மோடு இணைந்து கொள்வாய் என்றல்லவா நினைத்தேன். உன் மூளையின் பலம் எமக்கு அவசியம் தேவைப்படும்!"

லூயிஸை, அற்பப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தான் மெக்கன்ஸி. அவன் கண்களில் தெரிந்த வெறுப்பு லூயிஸை தடுமாற வைத்தது.

"மெக்கன்ஸி, என் நண்பனே! அப்படிப் பார்க்காதே..."

"ஏய் லூயிஸ். என்னை என் வழியில் விடு. உன்னோடு சேர்ந்து தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்க நான் தயாராக இல்லை. வருகிறேன்..."

"நில் மெக்கன்ஸி... என்னை விட்டுவிட்டுப் போகாதே. இந்த ரகசிய இடத்திலிருந்து உன்னால் அவ்வளவு சுலபத்தில் வெளியேறிவிட முடியாது..."

"ஹ...ஹ...ஹ..." என்னை அடைத்து வைக்க எந்தக் கொம்பனாலும் இயலாது. உன் ஜம்பத்தை வெளியே காத்துக் கொண்டிருக்கும் பொலிஸாரிடம் போய்க்காட்டு அப்பனே!"

"என்ன... பொலிஸா?" லூயிஸின் குரல் பதறியது.

"என்னை மன்னித்துவிடு நண்பனே! இதுவரை நடந்ததெல்லாம் நாடகம். நான் சிறைக்குப்போனது... அங்கிருந்து தப்பித்தது... உன்னைச் சந்தித்தது எல்லாமே நாடகம்!" மெக்கன்ஸியின் வார்த்தைகள் இடிபோல் இறங்கின லூயிஸின் மீது.

"துரோகி!" என்றபடி துப்பாக்கியை உருவினான் லூயிஸ்.

அதைப் பார்த்து கடகடவென சிரித்தான் மெக்கன்ஸி. "யாரடா துரோகி? நாட்டை அந்நியனுக்காக அழிக்கும் நீயா? உன்னைப் பிடிக்க பொலிஸாருக்கு உதவிய நானா?"

மெக்கன்ஸியின் வார்த்தைகள் லூயிஸை கோபத்தின் உச்சத்துக்கே கொண்டு சென்றன. அவன் துப்பாக்கி வெடித்து விட்டது.

"டுமீல்!"

சுருண்டு விழுந்தான் மெக்கன்ஸி. மறுகணம் மளமளவென்று உள்ளே நுழைந்தனர் பொலிஸார். மெக்கன்ஸியை பின் தொடர்ந்துவர, அவனது பையில் ரகசியமாகப் பொருத்தப்பட்டிருந்த 'டிரான்ஸ் மீட்டர்' அவர்களுக்கு உதவியிருந்தது. நீண்டகாலமாக நாசவேலைகளில் ஈடுபட்டுவந்த தேசத்துரோகக் கும்பல், மெக்கன்ஸியின் உதவியால் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டது.

குண்டடிபட்டு விழுந்து கிடந்த மெக்கன்ஸியை நெருங்கினார் இன்ஸ்பெக்டர் எரிக்.

"மெக்கன்ஸி... மெக்கன்ஸி..."

அவனிடம் எந்தச்சலனமும் இல்லை. அவனைப் புரட்டிப் பார்த்த இன்ஸ்பெக்டரின் விழிகள் கலங்கின. ஆம்! மெக்கன்ஸி உயிரை விட்டிருந்தான். லூயிஸின் துப்பாக்கிக்குண்டு நேராக அவன் இருதயத்தை ஊடுருவி உயிரைக் குடித்திருந்தது.

கொள்ளையனாக இருந்து பின்னர் திருந்தி வாழ்ந்து, நாட்டுக்காக உயிரையே கொடுத்திருந்த மெக்கன்ஸியின் மரணம் இன்ஸ்பெக்டரை மனம் நெகிழவைத்தது.

எழுந்து நின்று தொப்பியைக் கழற்றி விட்டு சல்யூட் அடித்தார் அவர்.

## கற்பிட்டியில் ஆசிரியர் பற்றாக்குறை நீடிப்பு

கற்பிட்டி — கொய்யாவாடி முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம் பெயர்ந்து சுமார் 400 மாணவ, மாணவிகள் கல்வி கற்கின்றனர். மேற்படி பாடசாலையில் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் மட்டுமே மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் கடமையாற்றுகின்றனர்.

கல்வி அமைச்சின் (3PPR/PP/134) சுற்றறிக்கையின் படி, இப்பாடசாலையில் 13 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து இன, மத, பிரதேச வேறுபாடின்றி இப்பாடசாலையின் குறைபாடுகளையும், ஆசிரியர் பற்றாக்குறையையும் தீர்க்க வேண்டும் என்று இப்பிரதேசத்தில் வாழும் இடம் பெயர்ந்த மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இப்பாடசாலையில் கல்வி பயிலும் 400 மாணவ, மாணவிகளுக்கும் 120 கதிரைகளும் 117 மேசைகளுமே உள்ளன. மேலும் இட நெருக்கடியைச் சமாளிப்பதற்கு புதிதாகக் கட்டடம் எதுவும் இதுவரை கட்டிக் கொடுக்கப்படவில்லை.

பல தடவைகள் இது குறித்து பல்வேறு மட்டங்களிலும் தெரியப்படுத்தியும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

— எம்.எச்.எம்.சியாஜ்

## புத்தளம் அகதிகளுக்கு நுளம்பு வலை விநியோகம்

அரச சார்பற்ற நிறுவனமான சர்வதேச சுகாதார அமைப்பின் (ஐ.எச்.ஓ) புத்தளம் பிராந்திய அமைப்பின் ஏற்பாட்டில் இங்குள்ள நான்கு அகதி முகாம்களில் வதியும் 342 குடும்பங்களுக்கு மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி இடம் பெற்றது.

நுளம்பு வலைகள் ஒவ்வொன்றும் சுமார் 750 ரூபா பெறுமதி வாய்ந்தவை.

புத்தளம் நகருக்கு அண்மையிலுள்ள சோல்டன் —1, முகாமுக்கு 96 நுளம்பு வலைகளும், சோல்டன்—2 முகாமுக்கு 60 நுளம்பு வலைகளும், பஸ்பராபாத் முகாமுக்கு 80 வலைகளும், மதீனா நகர் முகாமுக்கு 106 வலைகளும் வழங்கப்பட்டன.

இந்த வைபவங்களில் சர்வதேச சுகாதார அமைப்பின் புத்தளம் பிராந்திய நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எஸ்.நசீர் அஹமட், கெயார் இன்டர் நேட்டினால் அமைப்பின் புத்தளம் மாவட்டப் பிரதிநிதி எம்.சுனில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மண்ணெண்ணெய் விளக்கு அன்பளிப்பு

கற்பிட்டி முகத்துவாரத்தில் வாழும் சுமார் 150 வறிய குடும்பங்களுக்கு புத்தளம் லயன்ஸ் கழகத்தினால் பாதுகாப்பான மண்ணெண்ணெய் விளக்குகள் வழங்கப்பட்டன.

கழகத்தின் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஜி.எம். அன்வர் இவற்றை வழங்கினார்.

## குடிதண்ணீர் பற்றாக்குறை தீர்ந்தது

புத்தளம் நகரில் இடம்பெயர்ந்தவர்கள் பெருமளவில் வதியும் வை.எம்.எம்.ஏ. மீள் குடியேற்றக் கிராமத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை நீக்கப்பட்டுள்ளது.

குடி தண்ணீர்க் கிணறு ஒன்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மர்ஹூம் ஏ.எம்.மீரான் சாஹிப் ஹாஜியாரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தவர்கள் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் இந்தக் கிணற்றை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற எளிமையான நிகழ்வொன்றில் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி கிணற்றைத் திறந்துவைத்து நீர் விநியோகத்தை ஆரம்பித்துவைத்தார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் உபதலைவரான எம்.எம்.றகீம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மனிதவள, மனித உ[illegible] அமைப்பின் பொதுச்செயலாளர் என்.எம்.[illegible] வை.எம்.எம்.ஏ. மீள் குடியேற்றக் கிராம பள்ளி[illegible]சல் பேஷ் இமாம் கிர்பான் மௌலவி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஏ.எஸ்.புல்கி

# மட்டக்களப்பில் தமிழ் பண்பாடு காற்றில் பறக்கும் அபாயம்

மட்டக்களப்பு நகரில் சிகிச்சை நிலையங்கள் என்னும் பெயரில் சில சட்ட விரோத கருச் சிதைவு நிலையங்கள் இயங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்கு கருச்சிதைவு செய்வதற்காக வரும் பெண்களை ஆயுததாரிகளே அழைத்து வருகின்றனர் என்று பெயர் குறிப்பிட விரும்பாத சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

கருச்சிதைவுகள் காரணமாக இளம் சமுதாயம் பாதிக் கப்படுகிறது. சமுதாயச் சீர்கேடுகள் இடம் பெறுகின்றன.

இளம் பெண்களுக்கு ஆசை வார்த்தையூட்டி அவர்க ளைத் தமது இச்சைக்கு உட்படுத்துவோர், நிலைமை விபரீ தம் அடையவே இத்தகைய கருச்சிதைவு நிலையங்களுக்கு அவர்களைக் கூட்டி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இப்படியான நிலையங்களை சோதனை செய்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த சுகாதாரப் பரிசோதகர்களால் முடியாது உள்ளதாகவும்—

இதற்கு காரணம் சில ஆயுததாரிகளின் தலையீடே என்றும் — சுகாதாரப் பரிசோதகர்கள் கூறுகின்றனர்.

தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசார பண்பாடுகளைத் தூக்கி எறியும் வகையில் மாணவ, மாணவிகள் நடந்து கொள்ளும் சம்பவங்களும் மட்டக்களப்பில் அதிகரித்து வருகின்றன.

மக்கள் போக்குவரத்துச் செய்யும் பிர தான இடங்களில் இவர்கள் குழுமி நின்று குறும்புத் தனங்களில் ஈடுபடுகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திரையரங்குகளில் ஆபாசப் படக் காட்சிகளும் இடம்பெற்று வருகின்றன என்று பொதுமக்கள் தெரிவிக் கின்றனர். ஒரு ஆங்கிலப் படத்துக்கு இரட்டிப்பு கட்டணமாக 50 ரூபா அறவிடப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறான படங்கள் காண்பிக்கபடுவதால் தியேட்டர்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிவதாகவும் தெரிகிறது.

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என விளம்பரம் செய்தாலும் உள்ளே வயது குறைந்தவர்களும் படத்தை ஆவலுடன் ரசிக்கின்றனர் என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

இதைவிட அண்மைக்காலங்களில் நகர்ப்பகுதியில் மதுபானக் கடைகளும் அதிகரித்துள்ளன.

நகரில் தொடர்ந்து சமுதாய சீர்கேடுகள் இடம்பெறுவ தைக் கண்டும் காணாதவர்கள் போல இங்குள்ள மக்கள் இருக்கின்றனர்.

காரணம் இவை எல்லாவற்றிற்கும் பின்னணியில் ஆயுதம் ஏந்திய சிலர் இருப்பது தான்.

போர்க்கால சூழலில் தமிழ் மக்களின் உணர்வுகள் விடுத லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கவேண்டிய ஒரு சூழ லில் அதனை முற்றாக மாற்றும் ஒரு செயற்பாடாக ஆபாச உணர்வு தூண்டப்படுவதும், கருச்சிதைவுகள் இடம் பெற்று வருவதும் கவலைக்குரிய விடயங்கள் ஆகும்.

— சத்துருக்கன் — நேரன்



கஞுவாஞ்சிக்குடி பொருளாதார கிராமிய அபிவிருத்தி வங்கி, வாகனக் கடன் வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் வங்கி வாடிக்கையாளரான முனைத்தீவு பெரிய போரதீவைச் சேர்ந்த சிவலிங்கம் சசி கரன் என்பவர் மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். மட்டக்களப்பு அம் பாறை மாவட்ட இணைப்பதிகாரி கே.விநாயகமூர்த்தி மோட்டார் சைக் கிளை வழங்குவதை படத்தில் காணலாம். வங்கி முகாமையாளர் க.பொன்னுத்துரை மற்றும் உத்தியோகத்தர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

# படையினரின் சீருடையில் மட்டக்களப்பில் புலிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்திவந்த விடுதலைப் புலிகள், தற்போது படையினரின் ஒத்த சீருடையில் பிரதான வீதிகளில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் படையினர் மீது வலைவிரித்தும் வருகின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் திருமலை — மட்டக்களப்பு வீதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலி யாகி உள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

படையினர் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்னதாக விடுதலைப்புலிகள் சீருடையில் வீதிக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அச்சமயம் தனியார் பஸ் ஒன்றினை புலிகள் மறித்து சோதனை செய்த போது அதில் இருந்து தப்பி ஓட முனைந்த படைச்சிப்பாயே புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார்,

சித்தாண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த சரத்பிரே மசிறி என்னும் சிப்பாயே பலியானவராவார்.

தனது சகோதரன் இருதய நோயினால் மரணமான செய்தி அறிந்து மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பொலநறுவை மாவட்டத்திலுள்ள கதுருவலாவுக்கு இவர் செல்லும் போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

பின்னர் அவ்விடத்துக்கு வந்த படையினர் சடலத்தை எடுத்துச் சென்றனர். இந்த சம்பவத்தை யடுத்து வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு படைத் தரப்பு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் மட்டக்களப்பு திருமலை வீதியை தக்க வைத்துக் கொள்வதாக நினைத் துக் கொண்டிருக்கும் நிலையில் புலிகள் படையினரின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு தமது நடவடிக்கை யினை தீவிரப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடாத சமயங்களிலும் படையினர் பொதுமக்களின் வாகனங்களிலும் மற்றும் தனிப்பட்ட முறையிலும் போக்கு வரத்துக்களை மேற்கொண்டு வந்தனர்.

இனி இந்த மாதிரிப் படையினர் உலா வந்தால் புலிகளின் கைகளில் மாட்டிக் கொள்ள வேண்டி வரும் என்று கூறப்படுகிறது.

சிவில் நிர்வாகத்தை விரிவுபடுத்திக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகக் கூறும் படைத்தரப்பினர் புலிகளின் புதிய தாக்குதல் வியூகங்களுக்குள் சிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# கிண்ணியடித்துறை பயணிகள் அவலம்

கிண்ணியடித்துறையூடாக பயணம் மேற்கொள்வோர் காலை 7.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை தான் பய ணம் செய்ய முடியும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இப்பகுதிகளினூடாக விடுதலைப் புலிகளுக்கு உணவு மற்றும் எரிபொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் இரவு வேளைகளில் புலிகளின் நடமாட்டங்கள் அங்கு காணப்படுகின்றன என்றும் இதனால் இவற்றைத் தடுக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை பொது மக்க ளுக்கு வழங்குமாறு ஓட்டமாவடி மீராவோடை, கிண்ணியடி போன்ற பகுதிகளில் உள்ள ஆலய பரிபாலன சபைகள், பள்ளி வாசல்கள் மற்றும் மீன்பிடிச் சங்கங்கள் போன்றவற் றின் நிர்வாக உறுப்பினர்களை அழைத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனைப் பொலிஸார் நடத்திய கூட்டமொன்றி லேயே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் மீண்டும் வெள்ளைவான் பீதி

மட்டக்களப்பில் மீண்டும் வெள்ளைவான் பீதி ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் இயங்கும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் வைத்து மூன்று இளைஞர்கள் வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர். பின்னர் அன்று மாலை அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அலுவலகத் தேவை ஒன்றுக்காக இந்த இளைஞர்கள் மூவரும் பிரதேச செயலகம் சென்ற போதே கடத்தப்பட்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த பல வருடங்களுக்கு முன்னரும் இந்த வெள்ளை வான் பீதி மட்டக்களப்பில் இருந்து வந்தது. சந்தேகத்துக்கு இடமான இளைஞர்கள், மாணவர்கள் எனப் பலர் கடத்தப்பட்டு காணாமற்போயிருந்தனர்.

பலரதுசடலங்கள் வாவிகளில் கண்டுபிடிக்கப்பட்டன. கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது கண்கள் சட்டவிரோதமாக பல லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கு ஆதாரமாகவாவிகளில்கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் இருகண்களும்தோண்டி எடுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதை பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னாள் தமிழ் ஆயுதக் குழுவொன்றின் உறுப்பினர்கள் சிலர், படையினரின் பாதுகாப்பில் இருந்து கொண்டு இத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்த போதிலும் எதுவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இப்போது பலவருட இடைவெளிக்குப்பின்னர் மறுபடியும் வெள்ளைவான் பீதி தோன்றியுள்ளது.

திருமலை, வவுனியா போன்ற 3 மாவட்டங்களிலும் வெள்ளைவான் பீதி காணப்படுவதாகத்தகவல்கள் கூறுகின்றன.

பொதுமக்களைப் பீதி கொள்ளச் செய்யும் இந்த வெள்ளை வான் விவகாரம் தொடர்பாக மனித உரிமை அமைப்புக்களும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பாதிக்கப் பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



''உங்கடை பக்கம் சரியான வெள்ளமாயிருக்கலாம். அதுக்காக இந்தக் கோலத்திலா ஆபீஸ் வருவது?

# படுவான்கரை மக்களின் போக்குவரத்துக்கு ஆப்பு

படுவான்கரைப் பகுதி மக்களுக்கு மேலதிக பஸ் சேவைகளை நடத்த மட்டக்களப்பு இராணுவத் தரப்பினர் அனுமதி மறுத்துள்ளனர்.

படுவான்கரைப் பகுதியில் உள்ள வவுணதீவு வலையிறவுப் பாதை, மண்முனைந்துறைப் பகுதி வீதிகள் கடந்த இரண்டு மாதங்களாக முற்றாக மூடப்பட்டுள்ளன.

அப்பகுதி மக்களின் பாவனைக்காக செங்கலடியில் இருந்து மகிழ வெட்டுவானுக்கும், அம்பிலாந்துறையில் இருந்து கன்னன்குடாவுக்குமாக இரண்டு பஸ் சேவைகளை நடத்துவதற்காக வவுணதீவு பிரதேசச் செயலர் சிறிசங்கர் அனுமதி கோரியிருந்தார்.

ஆனால் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி இதனை நிராகரித்து விட்டார்.

இதன் காரணமாக கன்னன்குடா, மகிழவெட்டுவான் பகுதிமக்கள் பல சிரமங்களின் மத்தியில் உழவு இயந்திரங்கள், சைக்கிள்கள் மூலமாகவும் கால் நடையாகவும் பிரயாணம் மேற்கொள்கின்றனர்.

மட்டக்களப்பில் உள்ள சமாதானக் குழுவினர் இந்த விடயத் தில் அக்கறை எடுத்து, மட்டக்களப்பு இராணுவ இணைப் பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை வவுணதீவு பிரதேச செயலர் அலுவலகத்துக்கு பொதுமக்கள் வருவதில் பல சிரமங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு அந்தந்த கிராம உத்தியோகத்தர்கள் மூலமாக சில வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று வுவணதீவு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்படி பொதுமக்களின் ஆவணங்களை கிராம உத்தியோகத்தர்கள் சேகரித்து அவற்றைப் பிரதேச செயலரிடம் ஒப்படைப்பார்கள்.


பிரதேச செயலர் பணியகத்தில் அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்று மீண்டும் பொது மக்களிடம் அந்தந்த கிராம உத்தியோகத்தர்களே ஒப்படைப்பார்கள்.

இத்திட்டத்தில் முக்கியமாக காணி உறுதி வழங்கல், மூக்குக் கண்ணாடி வழங்கல் அலுவலகக் கொடுப்பனவுகள் வழங்கல், என்பன இடம்பெறும்.

ஆனால் இது ஒரு பூரணமான சேவையாக இருக்காது என்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை, பொதுமக்களுக்கும் பிரதேச செயலருக்கும் இடையில் சிற்றூழியர்களாகப் பாவிக்கும் செயல் தான் இது என்றும் கூறுகிறார் பெயர் குறிப்பிட விரும்பாத கிராம உத்தியோகத்தர் ஒருவர்.

இந்தத் திட்டத்தை விட்டுவிட்டு வாரத்தில் ஒரு தடவையாவது பிரதேசச் செயலர் வவுணதீவுப் பகுதிக்கு நேரடியாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்துக் குறைகளை நிவர்த்தி செய்வதே சிறந்தது எனவும் அவர் மேலும் கூறினார்.



உன்னை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்று கவலைப்படாதே. உன்னைப் புரிந்து கொள்ளாதவரை நீ புரிந்து கொள்

**சி. வேணி,**
தரம் — 11A, யா/விக்ரோறியாக் கல்லூரி

# சந்திரனை நோக்கிய பயணத்தில்



* சந்திரன் பூமியில் இருந்து சுமார் 400,000 கி.மீ. தூரத்தில் உள்ளது.
* 1959 இல் ரஷ்யா லூனா1 —என்ற விண்வெளித்துருவியை முதலில் சந்திரனுக்கு அனுப்பியது. இது சந்திரனை அடையவில்லை. லூனா 2 சந்திரனில் மோதி நொருங்கியது லூனா — 3 சந்திரனைப் படம் பிடித்துள்ளது.
* லொனட்—5 என்ற ரஷ்ய கலம் சந்திரனுக்குச் சென்று மறுபடியும் தன்னியக்கத்தாலே பூமிக்கு மீண்டு சாதனை படைத்தது.
* அமெரிக்காவின் ஆள் இல்லாத றேன்ஜர் ரக விண்கலங்கள் சந்திரனை ஆராய்ந்தன.
* 1966 ஜூலை சேவயர்—1 சூரிய கலத்தால் இயக்கப்பட்டது. இது சந்திரனை அடைந்து பூமிக்குப் படம் அனுப்பியது.
* 1967 ஏப்ரலில் சேவயர் —2 சந்திரனில் மண் எடுத்து வந்தது.
* 1968 ஜனவரியில் சேவயர் —7 சந்திரனில் தரை இறங்கக் கூடிய இடத்தைத் தெரிவு செய்தது.
* அமெரிக்காவின் அப்பலோ—8 கலத்தில் 3 அமெரிக்க வீரர்கள் அனுப்பப்பட்டனர். இவர்கள் சந்திரனை பல கோணத்தில் படமெடுத்தனர்.
* அப்பலோ —10 விண்கலம் மனிதன் இறங்கக்கூடிய இடங்களை ஆராய்ந்தது.
* மனிதர்களைக் கொண்டு செல்வதற்காக அப்பலோ —11 உருவாக்கப்பட்டது.

பு.சுகேந்திரன்,
தரம் 10, யாழ். இந்துக் கல்லூரி.

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்''
ஐம்பொறி வழியாக எழுகின்ற ஆசைகளை அவித்தவனின், பொய்மை இல்லாத ஒழுக்க நெறியில் நின்றவரே நிலையான வாழ்வினர் ஆவர்.

பா. புகழ்யா, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை,
வெள்ளவத்தை.

# சிறுவர் கைவண்ணம்

அயித்தா,
ஆண்டு — 4,
கி.ச. பா,
வெள்ளவத்தை



சுப்ரமணியம்
சுஜரதன், தரம் — 6
யாழ் இந்துக்
கல்லூரி.



# இளைஞர் சிந்தனை

ஷர்மிலா

# விந்தைகள்

* யூதர்களிற்கு நாள் கணிக்கப்படுவது சூரியன் மறைவதிலிருந்தே. இவர்களின் புதுவருடம் வெள்ளி, புதன் ஆகிய கிழமை களில் தொடங்காது.
* பப்புவா, நாட்டு மக்களுக்கு நாட்காட்டி முறை தெரியாது. ஒவ்வொரு கிறிஸ்மஸ் சமயத்திலும் கடற்கரை ஓரங்களுக்கு முட்டையிடுவதற்காக ஆமைகள் வரும். இதை வைத்தே அவர்கள் தங்கள் வயதைக் கணிக்கிறார்களாம்.
* ஒரு திமிங்கிலம் ஒரு நாளில் 3 தொன் உணவை உண்டாலும் அதன் உடல் பருமனடையாதாம்.

# வௌவால்களின் குரல் ஒலியைக் கேட்டிருக்கிறீர்களா?

உண்மையில் வௌவால்களின் குரல் ஒலியை நம்மால் கேட்க முடியாது. ஏனெனில் ஒரு வினாடிக்கு 20 முதல் 20,000 அதிர்வுகளைக் கொண்ட ஒலியைத்தான் நம்மால் கேட்கமுடியும்.

வௌவால்களின் ஒலி ஒரு வினாடிக்கு சுமார் 30,000 முதல் 70,000 அதிர்வுகளைக் கொண்டது. எனவே தான் நம்மால் வௌவால்கள் கத்துவதைக் கேட்க முடியாது.

மற்றும் இருள்களில் வௌவால்களால் எதிர்ப்படும் தடைகளை விலக்கி மிகவும் சுவாத்தியமாகப் பறக்க முடியும். ஏனெனில், வௌவால்கள் தம் கண்களை அதிகம் பயன்படுத்துவதில்லை. காதுகளையே அதிகம் நம்புகின்றன. வௌவால்கள் இரவில் பறக்கும் போது, ஒரு வித ஒலியை எழுப்புகிறது. இதனை கழியொலி அலைகள் என்பர். இந்த ஒலியே எதிரிலுள்ள பொருளில் மோதி, எதிரொலியை உண்டாக்கும்.

இந்த எதிரொலியைக் கொண்டு வௌவால்கள் தம் எதிரிலுள்ள பொருள் எந்தத் திசையில் எவ்வளவு தொலைவிலுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளும். இதனாலேயே தான் அவை இருட்டிலும் மோதிக் கொள்ளாமல் பறக்கின்றன.

**''வெள்ளைக் கொடி''** நளீம் லதீப்,
சாய்ந்த மருது — 11.

## பள்ளிச் சிறார் நாம்....

பள்ளிச்சிறார் நாம் ஈசனடி தொழுதிடுவோம்
பெற்றோரை வணங்கிடுவோம்
ஆசானை கனம் பண்ணிடுவோம்
உண்மையினைப் பேசிடுவோம்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
நீதியினை வளர்த்திடுவோம்
விஞ்ஞானத்தின் விந்தைகளைப் புரிந்திடுவோம்
நாட்டுக்கு உழைத்திடுவோம்
நாளைய உலகின் தலைவர்களாகிடுவோம்.

**அ. யசிகரன்,**
தரம் — 10A,
யா/ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம்.

## மிகவும் சிறிய பறவை

பறவைகளில் மிகவும் சிறிய பறவையே தேன்சிட்டு. இவை மிகவும் அழகானவை. தன் நீண்ட அலகால் பூக்களில் உள்ள தேனை விரும்பிக் குடிக்கும் லாவகம் வியப்பிற்குரியது. இவை வண்ணத்துப் பூச்சி போன்று பறந்து திரியும்.

V. மாலா, தொட்டிலடி.

## விடுகதைகள்

1. வீடு கட்ட இயலாது, பயிர்செய்ய இயலாது அது என்ன காணி
பொன்னாங்காணி.
2. உருவமின்றி வரும் உன் மனதைக் கெடுக்கும் — சந்தேகம்.

**சிவகுமாரன் சங்கீதா,**
யாழ்ப்பாணக் கல்லூரி

# ஜாலங் காட்டும் மாயா மூன்று

முப்பரிமாணத் தோற்றத்தில் அனிமேஷன், திரைப்படம், தொலைக்காட்சி ஒளிபரப்பு, வீடியோ விளையாட்டுக்கள் போன்றவற்றில் பயன்படுத்தக் கூடிய மென்பொருளொன்று உண்டு. இதனை 'மாயா 3' என்று அழைக்கின்றனர். அலைஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த மென்பொருளில் வரிகள் இல்லாத டூல்களும் விளையாட்டுக்கான அறிவுறுத்தல்களும் இடம் பெற்றுள்ளன. கணினி விளையாட்டுக்களை உருவாக்குபவர்களுக்கு உதவிசெய்யக் கூடியதாகவும் இருக்கின்றது. அது மட்டுமல்ல, திரைப்படம், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் அனிமேஷன்களைப் புகுத்த நினைப்பவர்களுக்கு இந்த 'மாயா 3' பெருமளவு கை கொடுக்கிறதாம்.



## நான்

எனது பெயர் கபில். எனது தந்தையின் பெயர் துரை ரத்தினம். எனது தாயாரின் பெயர் நாகேஸ்வரி. எனது அண்ணாமார் மதன், சுதாகர். அக்காமார் சயாந்தினி, தயேந்தினி, சாளினி. நான் கலட்டி. மெ/மி/த/க/ பாடசாலையில் தரம் — 7இல் கல்வி கற்கின்றேன். நான் எதிர் காலத்தில் ஒரு பொறி யியலாளராக வர விரும்புகின்றேன். எனது பொழுது போக்கு கிரிக்கெட் விளையாடுதல். எனது நண்பர்களின் பெயர் பாலமுரளிதரன், ஜெகதீசன், சாரோன். எனது குடும்பத்தை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

**து. கபில்ராஜ்,**
கலட்டி.

# தவறு தந்த பாடம்

ஒரு நாய்க்கு பறவைகளின் முட்டையைச் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அது வயல் வரம்புகளிலும் நதிக்கரை ஓரங்களிலும் திரிந்து வந்தது. மேலும் நீர்ப் பறவைகளின் முட்டைகளையும் சாப்பிட்டு வந்தது. நதிக்கரை ஓரத்தில் அம் முட்டைகளைத் தேடித் திரிந்தது. ஒரு நாள் மணலில் இருந்த நத்தைக் கூட்டை நாய் பார்த்தது. அதையும் ஏதோ முட்டை என்று நினைத்து விழுங்கி விட்டது. நத்தைக் கூட்டின் ஓட்டின் பகுதிகள் நாய் வயிற்றினுள் சென்று குடலில் குத்தத் தொடங்கின. அப்போது அது அழுது கொண்டே சொல்லத் தொடங்கியது. ''என்னால் பெரிய தவறு நேர்ந்து விட்டது உருண்டையான எல்லாப் பொருட்களும் முட்டையில்லை என்று இப்பொழுது தான் தெரிந்து கொண்டேன்.'' சிறுவர்கள் அறியாமல் எல்லாப் பொருட்களையும் வாயில் போட்டுக் கொண்டால் அவர்களுக்கும் இவ்வாறே துன்பம் ஏற்படும். ஆகையால் எந்தப் பொருட்களையும் சாப்பிடக் கூடியதுதானா என்று அறிந்துகொள்ளாத வரை அதை வாயிற் போடாதீர்கள்.



**கணேசலிங்கம் கௌதமன்,** தரம் —5,
யா/ ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, யாழ்ப்பாணம்.

# மந்திர உச்சாடனத்துடன் ஆன்மிக எழுச்சிப் பேரணி

கடந்த செவ்வாய்க்கிழமை 2.10.2001 அன்று மாபெரும் ஆன்மிக எழுச்சிப் பேரணி ஒன்று கொழும்பில்நடைபெற்றது.

துறவிகள், ஆச்சிரமங்களைச் சேர்ந்தவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் என சுமார் 5,000 இற்கும் அதிகமான இந்துக்கள் கலந்து கொண்டனர்.

மகாத்மா காந்தியின் ஜனன தினமான ஒக்டோபர் 2 ஆம் திகதியை உலக ஆன்மிக ஒருமைப் பாட்டுக்குரிய தினமாகத் தேர்ந்தெடுத்தமை பொருத்தமாக இருந்தது. எமது நாட்டி லும் உலகின் ஏனைய நாடுகளிலும் போரின் அனர்த்தங்கள் ஓய்ந்து சாந்தியும் சமாதானமும் வலுப்பெற வேண்டும். இலங்கையில் அமைதியை மீண்டும் நிலை நிறுத்த ஆன்மிக சக்தியால் நிச்சயம் முடியும் என்ற எண்ணத்துடனேயே இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார்கள்.


ஒக்டோபர் 2ஆம் திகதியை உலக ஆன்மீக ஒருமைப்பாட்டுத் தினமாகப் பிரகடனப்படுத்தக் கோரி கொழும்பில் நடைபெற்ற ஆன்மீக எழுச்சிப் பேரணியையே படங்களில் காண்கிறீர்கள்

மந்திரங்களை உச்சரித்தவாறு பெரும் திரளான மக்கள் கூட்டம் பேரணியாக நகர்ந்து சென்றது.

முகத்துவாரம் அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து காலை 7.00 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி 11.00 மணிய ளவில் மருதானை கப்பித்தாவத்தை சிவன் கோவிலை வந்த டைந்தது. சமாதானத்துக்கும் மற்றும் உலக நாடுகளின் நன் மைக்காகவும்பிரார்த்தித்துடபலகிரியை வழிபாடுகள்செய்யப்பட்டன.

அதன் பின்னர் 12.30 மணிக்கு சகல கோயில்களிலும் மணிகள் ஒலிக்க ஏக காலத்தில் ஆலயங்கள் அனைத்திலும் பிரார்த்தனைகளும் மௌன அஞ்சலிகளும் இடம் பெற்றன.

அதே வேளை இந்தப் பேரணியில் கலந்து கொண்ட அனைவரிடமும் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர் ஒன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஒக்டோபர் 2 ம் திகதியை உலக ஆன்மிக ஒருமைப்பாட்டுத் தினமாக பிரகடனப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

— கருடன்

# லண்டனில் தமிழ் நாடகம்

இங்கிலாந்தின் சட்டன் பகுதியில் அமைந்துள்ள சிகொம் அரங்கம் (Sutton Secombe Theater) தனது அரங்கில் நாடக விழாவை நடாத்தும்படி அவைக்காற்றுக் கழக நாடக நெறியாளர் க.பாலேந்திராவை மீண்டு மொருமுறை கோரியுள்ளது. அதன் அழைப்பை ஏற்று மேற்படி கழகம் எதிர்வரும் 13.10.2001 அன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மூன்று நாடகங்களை மேடையேற்றுகிறது. க . பாலேந்திராவின் நெறியாள்கையில் ''மழை'', ''வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்'', ''காத்திருப்பு'' என்ற மூன்று நாடகங்களே மேடையேறவுள்ளன.

''மழை'' நாடகம் ஈழத்து மக்களால் அறியப்பட்ட நாடகம். இலங்கை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளிபரப்பப்பட்டது. 1976 முதல் தொடர்ந்து 25 வருடங்களாக மேடையேற்றப்பட்டு வருகிறது. இதில் ஆனந்தராணியும், பாலேந்திராவும் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து குறித்த பாத்திரங்களிலேயே நடிக்கின்றனர். இதுவே ஒரு சாதனை தான். இவ்வாண்டு அண்மையில் ''பூபாளராகங்கள் — 2001'' நிகழ்வில் அரங்கேறிய போது நாடக ரசிகர்களின் பெரும் பாராட்டை பெற்றது.

''வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்'' நாடகம் பேராசிரியர் சி. மௌனகுரு எழுதிய சிறுவர் நாடகம். இந் நாடகம் ''பூபாளராகங்கள் — 2000'' நிகழ்வில் மேடையேறிய போது பலராலும் பாராட்டப்பட்டதோடு, பல விமர்சனங்களுக்கும் உள்ளானது. இதில் ''பிறைற்'' தமிழ்ப் பாடசாலை சிறார்கள் நடிக்கிறார்கள்.

''காத்திருப்பு'' நாடகம் ஈழத்தில் காணாமல் போன இளைஞனின் தாய்படும் அவஸ்தையை எடுத்துக் கூறுகிறது. இது ச. வாசுதேவன் எழுதிய புதிய தயாரிப்பு.

இந்நாடக விழாவின் மூன்று நாடகங்களையும் க. பாலேந்திரா நெறியாள்கை செய்கிறார். பெருமளவான நாடக ரசிகர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான்காவது முறையாக பிரித்தானிய அரங்கு ஒன்று இந்த நாடக விழாவை நடத்துகிறது.

கொம்மந்தறையூரான், லண்டன்.

# விழிகளை அபகரித்த நாட்டிய பிருந்தா

திருமறைக் கலாமன்ற கவின் கலைகள் பயிலகத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி நளாயினி இராஜதுரையின் மாணவர்கள் வழங்கிய நாட்டிய பிருந்தா கலை நிகழ்வு சமீபத்தில் வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் நடந்தேறியது.


திருமறைக் கலாமன்ற கவின்கலை பயிலக மாணவிகளின் ஒரு நடனத் தோற்றம்

திருமறைக் கலாமன்ற ''கவின் கலைகள் பயிலக'' மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள், நாடகங்கள், மற்றும் பலவகையான கலைப் படைப்புக்கள் அண்மையில் தான் நிகழ்ந்து முடிந்திருந்தன. அவை தந்த இன்பக் களிப்பு மாற முன்னமே மற்றுமொரு களிப்பூட்டும் நாட்டிய நிகழ் வினை திருமறைக் கலாமன்றம் வழங்கியது. இது அவர்களின் விடா முயற்சியையும் வளர்ச்சிப் போக்கையுமே எடுத்துக் காட்டுகின்றது.

இன்னல்களோடும், அவலங்களோடும் விடிந்து கொண்டிருக்கும் எமது நாட்டின் இன்றைய நிலையில், எம்மவர்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் காத்திரமான கலை நிகழ்வுகள் உயிரூட்டம் பெற்று வளர்ந்த வண்ணம் இருக்கின்றன. காலத்தோடு கலந்து கொண்டு வாழும் கலை நம்கலை என்பதையே இது பறைசாற்றுகிறது.

திரு. திருமதி ச. பாலச்சந்திரன், திரு. திருமதி ராதாகிருஷ்ணன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

''எம்மை வெட்டினாலும், கொத்தினாலும் வேருடன் பெயர்த்தெடுத்து எரித்து அழித்தாலும், அந்தச் சாம்பல்களில் இருந்து எழுந்து வந்து எம் கலைகளை வளர்ப்போம்'' என்று உணர்ச்சி பூர்வமாகப் பேசினார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மேல்மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன்.

சின்னஞ் சிறுமியர் மலர்கள், பட்டாடைகள், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தனர் நாட்டிய அசைவுகளை அலாதியாய் நிகழ்த்துகையில், சிதறிய சில் லறைக் காசுகளாய் அவர்கள் காற்சதங்கை எழுப்பிய ஒலிக்கு சரணாகதி அடையாதவர்கள் எவரும் இல்லை என்னும் அளவுக்கு அவையே லயித்துப் போயிருந்தது.

பரதம், கதகளி, கிராமியம் என்னும் பிரிவுகளின் கீழ் திருமறைக் கலாமன்ற கவின்கலை பயிலக மாணவிகள் வழங்கிய சாதி நாட்டியம், வசந்த உற்சவம், குறத்தி நடனம், றபான் நடனம் போன்ற நடன நிகழ்வுகள் பார்த்தோர் மனதை விட்டு எளிதில் அகன்று விடாத தன்மைகளைக் கொண்டிருந்தன.

காந்தியின் அகிம்சை நெறியை விளக்கும் வகையில் பாரதியின் பாடல்களுக்கு உயிர் கொடுத்து மாணவிகள் வழங்கிய நடன நாடகம் மற்றும் குஜராத் கோலாட்டம், பின்னல் கோலாட்டம் என்பன அவையை விட்டு அகலா வண்ணம் விழிகளை அபகரித்துக் கொண்டன.

அன்றைய நிகழ்வின் சிறப்பான அம்சம், ஆடை அமைப்பாகும். அதனைச் சிறப்பான முறையில் செய்த கலைஞர்கள் முதலில் பாராட்டப்பட வேண்டியவர்கள். எனினும் மேடை நிகழ்வில் சில மாணவிகளின் தலைப் பாகை போன்ற ஆடைகள் குலைவதன் காரணமாக அவர்களுடைய மனநிலை குலைந்து முகபாவனைகள் மாற்றமடைகின்றன. இதனால் அவர்களால் செவ்வனே நாட்டிய நிகழ்வை நிகழ்த்த முடியாமல் போகக் கூடும். எனவே இதைக் கருத்தில் கொள்ளுதல் சாலப் பொருத்தமானது'' எனத் தனது கருத்தைத் தெரிவித்தார் மயூரா பதி அறங்காவலர் பொன் வல்லிபுரம்.

நாட்டிய விருந்துக்கான இசை அமுதைத் தனக்கே உரித்தான இனிய குரல் வளத்தால் பிரம்மிக்கச் செய்தார். இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத் தாபன தமிழ்ச்சேவைப் பணிப் பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன். இசைய மைப்பில் இணைந்து கொண்ட பக்கவாத்தியக் கலைஞர்கள்.

மிருதங்கம் அச்சுதன் ரவீந்திரன் வயலின் சண்முக நாதன் திபாகரன், தபேலா, நகரா: ரட்ணம் ரட்ணதுரை.

நேர்த்தியாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சற்சொரூபவதி நாதன்.

## கலையமுதம்

# மக்கள் அரங்கிற்கான பயிற்சிப் பட்டறை

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் மலையகத்தில் மக்கள் அரங்குகளை மேம்படு த்துவதற்காக, அரங்கியல் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை ஒன்றினை நாடகத்துறையில் ஆர்வ முள்ளவர்களுக்காக இம் மாதம் 18,19 ஆம் திகதிகளில் கண்டியில் நடத்த உள்ளது.

மேற்படி மக்கள் அரங்கிற்கான பயிற்சி பட்டறையில் பங்குபற்ற விரும்புகிறவர்கள் ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தங்களைப் பற்றிய சுயவிவரங்களு டன் கலாசாரப் பிரிவு, சமூக அபிவிருத்தி நிறுவகம், 16 முல்கம்பள வீதி, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கோருகின்றது.

# இசை வடிவில் திருப்பாடல்

சமீபத்தில் கொட்டாஞ்சேனை அருளப்பர் சின்னப்பர் வரவேற்பு மண்டபத்தில், கொழும்பு மறைமாவட்ட பேராயர் வணக்கத்துக்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையின் ஆயர் பணியின் வெள்ளி விழா நினைவாக ஒலிநாடா, இசைத்தட்டுக்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அம்புறோஸ் பீற்றரால் எழுதப்பட்ட 150 பாடல்களின் தொகுப்பே இவ்வாறு இசையமைக்கப்பட்டுள்ளன.

''இறைவனைப் பாடித் துதிப்பதற்காக பல்லாண்டு களுக்கு முன்னரே திருப்பாடல்கள் பாடப்பட்டு வந்துள்ளன. புனித பைபிளில் ''திருப்பாடல்'' என்னும் பகுதி காணப்படுகிறது. இது யூதர்கள் தமது செப ஆரா தனையின் போது பயன்படுத்திய திருப்பாடல்களின் தொகுப்பாகும். இதே போன்று, தமது வழிபாடுகளின் போது பாடிய பாடல்களைத் தொகுத்துத்தந்திருக்கிறார் அம்புறோஸ் பீற்றர்.''



இவ்வாறு பேசினார் புதுச்செட்டித் தெரு பங்குத்தந்தை அருட்திரு ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே.

அன்றைய தினம் பாடலாசிரியர் அம்புறோஸ் பீற்றர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். டாக்டர் கார்த்திகேசன் கருத்துரை வழங்கினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் உரையாற்றுகையில்:—

''சினிமாப் பாடல்கள் ஆதிக்கம் செலுத்தும் இக்காலகட்டத்தில் கிறிஸ்தவப் பாடல்களை இசை அமைத்து வெளியிடத் துணிந்தமையை முதலில் நாம் பாராட்ட வேண்டும். அடுத்து, எமது நாட்டுக் கலைஞர்களுக்கும் இதுபோன்ற சந்தர்ப்பங்களைக் கொடுத்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்'' என்று கூறினார்.


பாடலாசிரியர் அம்புறோஸ் பீற்றர் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுகிறார்.

மேலும் அவர் உரையாற்று கையில், ''இன்றைய வெளியீட்டின் பாடல் தொகுதிகளை இலங்கை வானொலியில் ஒலிக்கச் செய்வதற்கான நடவடிக் கையை உடனடி யாகவே மேற்கொள்வேன்'' என்றார்.

அவர் அப்படிக் கூறியபோது அவையினர் கரகோஷம் எழுப்பி, தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சிகளின் நகர்வில் இடையிடையே செல்விகள் ஜெசிந்தா பீற்றர், சௌவஜா பரமானந்தன் ஆகியோர் அம்புறோஸ் பீற்றரின் திருப்பாடல்களுக்கு வழங்கிய நாட்டிய விருந்து பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

டிலாஸ் சபை அருட்சகோதரர் பொனவெஞ்சர்— பொனி பாடலாசிரியர் குறித்து பாராட்டி உரை நிகழ்த்தினார்.

சிறப்பாக நடந்தேறிய நிகழ்வின் இறுதிமணியாய் பாடலாசிரியரின் ஏற்புரை அமைந்தது.

—இலக்கியன்



## யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு

# இலக்கிய கர்த்தாக்களை இப்படி அவமதிப்பதா?

### டொமினிக் ஜீவா ஆவேசக் குரல்

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் நீண்டகால இலக்கியப் பணிக்காக அவருக்கு முதுகலை மாணிப் பட்டம் அளித்து அவரைக் கௌரவிக்க யாழ் பல்கலைக்கழகம் முன்வந்தது.

முதுகலை மாணிப்பட்டம் கல்விசார் பட்டம், இலக்கியப் பணியாளர்களுக்கு உரியதல்ல அந்தப்பட்டம். அவர்களுக்கு முதுகலைமாணிப் பட்டத்தை விட உயர்ந்ததான இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்படுவதுதான் வழக்கம்.

வழக்கத்துக்கு மாறாக வழங்க முன்வந்த முதுகலை மாணிப்பட்டத்தைத் நம்மால் ஏற்க முடியாது என்று டொமினிக் ஜீவா பல்கலைக்கழகத்துக்கு அறிவித்து விட்டார்.

இதுபற்றி டொமினிக் ஜீவாவிடம் சுடர் ஒளி கேட்டபோது ஜீவா "பொருத்தமில்லாத கௌரவப்பட்டத்தை எப்படி ஏற்பது? அது அகௌரவம்" என்றார்.

"நல்ல எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் இலக்கியப் பணியாளர்கள் ஆகியோரைப் பல்கலைக்கழகங்கள் பட்டமளித்துக் கௌரவிக்காமல் இருப்பது வேறு விஷயம். அவர்களை ஒருக்காலும் அவமதிக்கக் கூடாது. தமிழையும் தமிழ்ப் பணி செய்பவர்களையும் நெஞ்சார நேசிப்பவன் நான். அவர்கள் அவமதிக்கப்படுவதை என்னால் பொறுக்க முடியாது" என்று ஆவேசமாகக் கூறினார்.

"தயவு செய்து எவரேனும் இனிமேல் அந்தக் கைங்கரியத்தில் இறங்கக் கூடாது" என்று டொமினிக் ஜீவா வேண்டுகோளும் விடுத்தார்.

தமிழ்ச் சமூகத்தின் அடக்கி ஒடுக்கப்பட்ட அடி மட்டத்திலிருந்து வந்தவர் டொமினிக் ஜீவா.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னரே சமூக நீதிக்காகப் போராட பேனாவை ஆயுதமாகக் கொண்டு எழுத்துத் துறையில் புகுந்தவர்.

இலட்சிய வெறியோடு கம்யூனிஸ சிந்தனைகளுடன் எழுதித் தம்மைச் சிறந்த எழுத்தாளனாகவும் படைப் பாளியாகவும் ஆக்கிக் கொண்டவர்.

தணியாத இலக்கியத் தாகத்தால் மல்லிகை சஞ்சிகையை ஆரம்பித்து 36 வருடங்களாக நடத்தி வருபவர்.

எழுத்தார்வம் உள்ளவர்களுக்கு மல்லிகையில் களம் அமைத்துக் கொடுத்து அதன் மூலம் நல்ல தமிழ் எழுத்தாளர்கள், படைப்பாளிகள், இலக்கியகர்த்தாக்கள் ஆகியோரைப் பெரும் எண்ணிக்கையில் நாட்டுக்குத் தந்து கொண்டிருப்பவர்.

மல்லிகைப்பந்தல் பதிப்பகம் வைத்துத் தம்முடைய ஆக்கங்களையும் மற்ற எழுத்தாளர்களின் படைப் புகளையும் நூலுருவில் கொண்டு வருபவர்.

இலக்கியப் பணிக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்து அயராது இலக்கியத் தொண்டு ஆற்றி வருபவர்.

அதனால் இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா நாடுகளிலும் உலகம் முழுவதிலும் அறிமுகமாகி இருப்பவர்.

சாகித்திய மண்டலத்தின் சிறுகதைக்கான முதல் பரிசை பெற்றவர்.

அகில இலங்கை கம்பன் கழகத்தால் மூதறிஞர் என்று பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

தமிழ், அதனை நம்பியவர்களையும் நேசிப்பவர்களையும் வாழவைக்கும். நாம் தமிழைச் செழுமைப்படுத்த வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இறுதி மூச்சுவரை தமிழ் இலக்கியத் தொண்டாற்ற உறுதி பூண்டுள்ள உணர்ச்சிப் பேர்வழி தான் டொமினிக் ஜீவா.

சிறந்த தமிழ்ப் பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர், இலக்கியகர்த்தா என்று பல்வேறு படித்துறைகளிலும் டொமினிக் ஜீவா இன்று பரிமளித்தாலும் அது பற்றி மகிழ்ச்சியும் பெருமையும் அடையும் மனப்பக்குவம் நம்மவரில் ஒரு சாராரிடம் இல்லை.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் அறிவு ஜீவிகளாகவும் உயர் மட்டக்காரர்களாகவும் தம்மைக் காட்டிக் கொண்டு இருப்பவர்கள்.

கே. டானியல், டொமினிக் ஜீவா, என். கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி போன்றோரின் ஆக்கங்களை ஆரம்ப காலங்களிலே "இழிசனர்" இலக்கியம் என்று அருவருப்போடு பார்த்தவர்கள் இன்றும் அந்தக் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

இவர்களின் எழுத்துகளிலேயே ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உரிமைக் குரல் பலமாக ஒலிப்பதைக் கேட்டு இவர்களால் சகிக்க முடிவதில்லை.

சாதிப்பாகுபாடு, ஒடுக்குமுறை திரைகள் இவர்களின் கண்களை மறைக்கின்றன.

"இழிசனர்" என்று இழிவாகக் கருதி ஒதுக்கப்பட்டவர்கள் கால மாற்றத்தில் இன்று "எழில்சனர்" ஆக மாறிவிட்டனர்.

தாம் உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டிருந்த "உயர்சனர்" இன்று "விசர்சனர்" ஆகிவிட்டனர்.

அப்படியில்லாவிட்டால் இலக்கிய கர்த்தாவான டொமினிக் ஜீவாவுக்கு இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக முதுகலை மாணிப்பட்டத்தை வழங்கி அவரை அவமதிக்கத் துணிவார்களா?

முன்னர் கே. டானியலுக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. பல்கலைக்கழக வித்தகர்கள் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.


கே. டானியல் மறைந்து விட்டார். பட்டமளித்து அவரைக் கௌரவிப்பதும் முடிந்த கதையாகி விட்டது.

ஆனால் டொமினிக் ஜீவாவுக்குப் பட்டமளித்து அவரைக் கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மிகப் பலமாக எழுந்தது. அதைத் தட்டிக் கழிக்க முடியவில்லை.

1960களில் யாழ் பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமைய வேண்டும் என்று "உயர்சனர்கள்" ஒற்றைக் காலில் நின்ற போது குழு ஒன்றை அமைத்து யாழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண மண்ணில் தான் அமைய வேண்டும் என்று போராட்டம் நடத்தியவர்களில் டொமினிக் ஜீவா குறிப்பிடத்தக்கவர்.

அதனால் அவருடைய இலக்கியப் பணி எப்படி இருந்தாலும் அதை முன்னிறுத்தி நன்றிக் கடனாகவேனும் யாழ் பல்கலைக்கழகம் அவருக்குப் பட்டமளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

ஜீவா எமக்குச் சமதையாக வருவதா? அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்குவதா என்று பொறுப்பானவர்களுக்குத் தயக்கம்.



துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் கனகராசா ஆகியோருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியவர்களுக்கு அந்தப் பட்டத்தை ஜீவாவுக்கு வழங்க மனம் இசையவில்லை.

விரும்பாமல் செய்த காரியம் அதனால் பொருந்தாத முதுகலைமாணிப்பட்டத்தை அவருக்கு விட்டெறிந்து இருக்கிறார்கள்.

அதை ஏற்றுக் கொள்வதற்கு டொமினிக் ஜீவா என்ன விஷயம் அறியாதவரா? சுயமரியாதை அற்றவரா? பட்டம் எதுவாக இருந்தாலும் அதற்காகக் கையேந்தும் அற்பனா அவர்?

"எனக்கு ஒவ்வாத பட்டம் வேண்டாம்" என்று ஏற்க மறுத்து விட்டார்.

முதுகலைமாணிப்பட்டம் தம்மைக் கௌரவிப்பதற்கான பட்டம் அல்ல. அது தம்மை அவமதிக்கும் பட்டம் என்பது ஜீவாவின் கருத்து.

"என்னுடைய விஷயம் என்னோடு போகட்டும். எழுத்தாளர்களை பத்திரிகையாளர்களைக் கௌரவிக்க விரும்பா விட்டால் விட்டு விடுங்கள், பரவாயில்லை. தயவு செய்து அவர்களை அவமதிக்காதீர்கள். இதுவே அனைவருக்கும் எனது வேண்டுகோள்" என்றார் டொமினிக் ஜீவா.

யாழ் பல்கலைக்கழகத்தில் கௌரவப்பட்டத்துக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்படுவதில் பல தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன என்று புகார் கூறப்படுகிறது.

கௌரவப்பட்டத்துக்கு உரியவர்களைச் சிபார்சு செய்யுமாறு பீடாதிபதிகளை (Deans) துணை வேந்தர் கேட்டுக் கொள்கிறார்.

பேராசிரியர்களையும் அழைத்து துறைசார் கூட்டத்தை (Faculty meeting) பீடாதிபதிகள் நடத்துகிறார்கள்.

துறைசார் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் பெயர்கள் செனட் முன் வைக்கப்படுகின்றன.

செனட்டில் துணைவேந்தர், பீடாதிபதிகள், சிரேஷ்ட பேராசிரியர்கள், கணக்காளர் எனக் கல்விசார் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள், கௌரவப் பட்டங்களுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க செனட் ஒரு குழுவை நியமிக்கிறது.

இந்தக் குழு கௌரவப்பட்டங்களுக்கு உரியவர்களின் பெயர்களைக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்கிறது.

கவுன்சிலில் துணைவேந்தர், பீடாதிபதிகள் 6 பேர், வவுனியா வளாகப் பிரதிநிதிகள் 2 பேர், சிரேஷ்ட பேராசிரியர்களின் பிரதிநிதிகள் 2 பேர் மற்றும் கணக்காளர் ஆக மொத்தம் 12 உள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். வெளி உறுப்பினர்கள். 13 பேரும் கவுன்சிலில் இருக்கிறார்கள். ஆக கவுன்சில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 25 ஆகும்.

வெளி உறுப்பினர்கள் 13 பேர் என்ற வகையில் உள் உறுப்பினர்களை விட அவர்கள் பெரும்பான்மையினர். அதனால் அவர்களின் குரலே ஒலிக்கும், அவர்கள் விருப்பப்படியே காரியங்கள் நடக்கும். கௌரவப்பட்டம் பெறுவோர் அவர்களால் தீர்மானிக்கப்பட்டு விடுவர் என்று உள் உறுப்பினர்களுக்கு ஒரே புழுக்கம்.

இம்முறை நடைபெற்ற கவுன்சில் கூட்டத்துக்கு வெளி உறுப்பினர்கள் மூவர் சமுகமளிக்கவில்லை. அதனால் உள் உறுப்பினர்களின் விருப்பப்படியே கௌரவப்பட்டங்களுக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

யாழ் பல்கலைக்கழகக் கவுன்சில் கூட்டங்களில் இப்படியும் நடந்திருக்கிறது.

ஒரு பீடாதிபதியின் மனைவி வெளிநாடு ஒன்றுக்குச் சென்று அந்த நாட்டு மொழியில் தேர்ச்சி பெற்றுத் திரும்பினார்.

அவருடைய தகுதிக்குப் பொருத்தமான பதவி ஒன்றைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்க கவுன்சிலின் அனுமதி கோரப்பட்டது.

உடனே வெளி உறுப்பினர் ஒருவர் பீடாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு, "என்ன உமது மனைவிக்கு பதவி தயார்படுத்துகிறீரா?" என்று நேரடியாகவே கேட்டார். அத்துடன் அந்தப் பதவியை உருவாக்கும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கவுன்சில், செனட் தொடர்பான இன்னொரு சம்பவமும் பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஒரு விரிவுரையாளர் பதவிக்கு வந்த விண்ணப்பங்களில் சில கவுன்சிலிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அப்போது ஒரு அதிகாரக்குரல் பின்வருமாறு ஒலித்தது.

புதிதாகப் பட்டம் பெற்ற இளைய தலைமுறை விரிவுரையாளர் தான் வேண்டும்.

புவியியல் துறை மூத்த அறிஞர் ஒருவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையில் மேற்படி அதிகாரக் குரல் ஒலித்ததால் அந்த விண்ணப்பத்தை கவுன்சில் நிராகரித்தது. இளைஞர்களின் விண்ணப் பங்களை எடுத்தது.

மீண்டும் அந்தக் குரல்: இங்கேயே பட்டம் பெற்றவரானால் நல்ல ஒத்துழைப்புக் கிடைக்கும்.

உடனே எத்தனையோ இளைஞர்களின் விண்ணப்பங் களைக் கவுன்சில் நிராகரித்தது.

குரல் மூன்றாம் முறையாகவும் ஒலித்தது: குடா நாட்டில் கடல்வளம் அதிகம் இருக்கிறது. விண்ணப்பதாரி மீன் வளம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்திருந்தால் நல்லது.

கவுன்சில் தேடுகிறது. ஆச்சரியம். ஒரேயொரு விண்ணப் பதாரி அந்தத் தகுதி உடையவராக இருந்தார். அவர் விரிவுரை யாளராக நியமிக்கப்பட்டார்.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமோ? தெரிவு செய்யப்பட்ட விரிவுரையாளர் அடுத்தடுத்து ஒலித்த குரல்களுக்கு உரியவரின் சகலன் முறையானவர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் எப்படிக் காரியங்கள் நடக் கின்றன என்பதற்கு இவை சில சாம்பிள்கள்.

எல்லா வகைகளிலும் தாமே உயர்ந்தவர்கள் என்று கருதும் ஒரு குழுவினர் மேல் இடத்துக்குக் காக்காய் பிடித்த வண்ணம் இருந்து கொண்டு மற்றவர்கள் தம்மை மிஞ்ச விட்டு விடக்கூடாது என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர் என்று புகார் கூறப்படுகிறது.

டொமினிக் ஜீவா விஷயத்தில் நடந்ததும் அதுதான் என்று பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இப்படிப்பட்டவர்களிடம் கல்வி கற்கும் மாணவர்களின் கதி என்ன ஆகுமோ என்ற அச்சம் பலரையும் வாட்டுகிறது.

*இந்த விஷயம் குறித்து வாசக அன்பர்கள் தங்கள் கருத்துக்களைச் சுடர் ஒளிக்கு இறுக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பலாம். அவை பிரசுரிக்கப்படும்.*




# ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் நீதிபதி இளஞ்செழியன்

வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தமிழ் மக்களுக்கும் நீதித்துறைக்கும் பெருமை தேடித் தந்த பெருமகன் ஆவர்.

பிரச்சினைகள் மிகுந்த வன்னிப்பகுதியில் இருந்து அவர் ஆற்றிவரும் நீதிச்சேவை உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அமெரிக்க அரசாங்கம் நீதிபதி இளஞ்செழியனை அரச விருந்தினராக அமெரிக்காவுக்கு அழைத்து ஒரு மாதகாலம் அவரை அங்கு வைத்திருந்து உபசரித்தது; கௌரவித்தது.

உலகின் அதி உச்சச் சபையான ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்க அரசாங்கம் நீதிபதி இளஞ்செழியனை அழைத்துச் சென்று அங்குள்ள உயர் அதிகாரிகளுக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தது.



அமெரிக்காவில் ஐ.நா.சபைக் கட்டடத்துக்கு முன்னால் வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியன்

ஐ.நா. வின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் மனித உரிமைகள் செயற்பாடுகள் குறித்தும் தகை சான்றவர்களுடனே உரையாடிப் பயன் பெறும் வாய்ப்பை அமெரிக்க அரசாங்கம் நீதிபதி இளஞ் செழியனுக்கு வழங்கியது.

செம்மணிப்புதை குழி வழக்கு, இலங்கையில் மனித உரிமைகள் நிலை பற்றி எல்லாம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரி நீதிபதி இளஞ்செழியனைக் கேட்டு முழு உண்மைகளையும் அறிந்து கொண்டார்.

ஐ.நா. சபைக்கு மட்டுமன்றி அமெரிக்காவின் ஐந்து மாநிலங் களில் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் நீதிபதி இளஞ் செழியனை அமெரிக்க அரச அழைத்துச்சென்றது.

நிபராஸ்கா மாநிலத்தில் நீதிபதி நெடுஞ்செழியன் அந்த மாநிலத்தின் கௌரவ பிரஜையாக் கப்பட்டார். அந்த மாநில மேயர் மாநிலத் திறப்பை வைபவ ரீதியாக நீதிபதி இளஞ்செழியனுக்கு வழங்கி அவரைக் கௌரவித்தார்.

தமது அமெரிக்கவிஜயத்தைநீதிபதி இளஞ்செழியன் ஒரு சுற்றுலாவாகக் கொள்ள வில்லை. பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களைப்பார்த்தோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. நீதிபதியாகிய தாம் நமது கடமையை மேலும் சிறப்பாகச் செய்வதற்கு எவ்வளவு கற்றுக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் கற்றுக் கொள்வதில் ஈடுபட்டார். ஆட்சித் துறையில் அச்சாணியாக விளங்கும் வெள்ளை மாளிகை, சட்டத் துறையின் மையமான அமெரிக்க காங்கிரஸ், நீதித்துறையின் நிலைக்களமான நீதிமன்றத் தொகுதிகள் அனைத்துக்கும் சென்று அங்கு எப்படிக் கருமங்கள் நிறைவேற்றப் படுகின்றன என்று அவதானித்தார். அந்தந்தத்துறை வல்லுநர் களுடன் கலந்து பேசியும் விடயங்களை அறிந்து கொண்டார்.

மனித உரிமை வழக்குகளில் டி.என்.ஏ. என்று அழைக்கப்படும் மரபு அணுச் சான்றிதழ்களைப் பயன்படுத்து தல், மனித உரிமை மீறலில் புல னாய்வு, வழக்குத் தொடுத் தல், நீதிபதி களின் பயிற்சி போன்ற பல்வேறு விஷயங்கள் பற்றி நீதிபதி இளஞ்செழியன் பய னுள்ள தகவல்களைப் பெற்றுக்கொண்டார்.

சியாற்றில் மாநிலத்தில் கைரேகை நிபுணர்கள், மருத்துவ நிபுணர்கள், டி.என்.ஏ. நிபுணர்கள் முதலானோ ரின் ஆய்வு கூடங்களுக்கு நீதிபதி நெடுஞ் செழியன் சென்று பயிற்சி பெற்றார்.

குற்றவியல் மற்றும் கொலைகள் சம்பந்தமான கம்பியூட்டர் விவரக் கோவை பற்றியெல்லாம் வாஷிங்டன் பல்கலைக் கழக மனித உரிமைகள் பணிப்பாளர் மற்றும் சட்ட மா அதிபர் திணக்கள உயர் அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

நியூ ஓலியன்ஸ் பல்கலைக்கழகத் தொழில் நுட்ப நிலையத்தில் மனித உரிமைகள் சம்பந்தமான விசேஷ பேச்சாளராக நீதிபதி இளஞ்செழியன் கலந்து கொண்டார்.

நியூயோர்க்கில் மனித உரிமைகள் வாச்''சுக்கு (Human rights watch) விஜயம் செய்து பலமுக்கிய தகவல் களைத் தெரிந்து கொண்டார். செம்மணி புதைகுழி விசாரணைக்கு சர்வதேச நிபுணர்களை அனுப்பிய மனித உரிமைகளுக்கான வைத்திய நிபுணர்கள் நிறுவனத்துக்கும் நீதிபதி இளஞ்செழி யன் விஜயம் செய்தார்.

செம்மணி புதை குழிவழக்கில் சர்வதேச உடற் கூற்றி யல் நிபுணராக கலந்துகொண்ட டாக்டர் மெலிசா கொல ரையும் சந்தித்து அவருடன் முக்கியமான விடயங்கள் பற்றிக் கலந்து ரையாடினார்.

அமெரிக்காவிலிருந்து இலங்கைக் குத் திரும்பு முன்னர் நீதிபதி இளஞ்செழியன் கனடாவுக்கும் பிரிட்டனுக்கும் சென்று



வவுனியா நீதிமன்றத் தொகுதி திறப்பு விழாவுக்கு பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவை அழைத்து வருகிறார் இளஞ்செழியன்.

அந்த நாடுகளிலும் சிலநாட்களைக் கழித்தார்.

இந்த விஜயம் பற்றி நீதிபதி இளஞ்செழியனிடம் சுடர் ஒளி கேட்ட போது ''மிகப் பயனுள்ள விஜயம் இது'' என்று அவர் சொன்னார்.



வவுனியா நீதிமன்றத் தொகுதித் திறப்பு விழாவையொட்டி சுடர் ஒளி அனுசரணையுடன் நடைபெற்ற போட்டியொன்றில் வெற்றி பெற்ற மாணவருக்கு பிரதம நீதியரசர் பரிசு வழங்குகிறார்

மாவட்ட நீதிபதியாக இருந்து உலக நாடுகளின் மதிப்பைப் பெற்று சமீப காலத்தில் அமெரிக்காவினால் அரச விருந்தினராக அழைக்கப்பட்டு அங்கே கௌரவிக்கப்பட்ட முதலாவது தமிழர் இளஞ்செழியன் தான்.



மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மனித உரிமைகள் அதிகாரி கொரோ ஒனோகிமாவுடன் இளஞ்செழியன்.

அதனாலேயே அவர் தமிழ் மக்களுக்கும் நீதிச் சேவைக்கும் பெருமை தேடித்தந்தவர் ஆகிறார். அவரை நீதிபதியாகப் பெற்றதில் வவுனியாவுக்கும் தனிச் சிறப்பு.




மனித உரிமைகள் 'வாச்' அலுவலகத்தில்

அகில இலங்கைப் பாடசாலை விளையாட்டுக்களில்

# திருமலை வீரருக்குத் தங்கப் பதக்கம்

அகில இலங்கைப் பாடசாலை விளையாட்டு விழாவில் திருமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் நம்மசிறி கிசான் ரங்கா தங்கப் பதக்கமொன்றைப் பெற்றுள்ளார்.

இவ்விளையாட்டு விழா செப்டெம்பர் 8 தொடக்கம் 30 ஆம் திகதிவரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் மெய்வல்லுநர் போட்டிகள் செப்டெம்பர் 26 முதல் 30ஆம் திகதி வரை நடைபெற்றன.




15 வயதுக்குட்பட்டோருக்கான குண்டெறிதல் போட்டியில் 11.93 மீற்றர் தூரம் குண்டெறிந்து ரங்கா தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

1966இல் அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய பாடசாலைகள் விளையாட்டு விழாவில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ. பஸீர் அமீர் 15 வயதுக்குட்பட்டோருக்கான குண்டெறிதலில் இரண்டாமிடம் பெற்றார். இதே பாட சாலையைச் சேர்ந்த க. கனகசிங்கம் பரிதிவட்டம் வீசுதலில் இரண்டாமிடத்தைத் தட்டிக் கொண்டார்.

அதன்பின்னர் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகளில் இப்பாடசாலையின் சார்பில் பதக்கம் பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

35 வருடங்களுக்கு முன் குண்டெறிதலில் பதக்கம் பெற்ற ஜனாப் பஸீர் அமீரே தற்போது ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 17 வயதுக்குட்பட்டோருக்கான 100, 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் திருகோணமலை சென். ஜோஸப் கல்லூரி மாணவன் ரி.ரஜன் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார்.

இப்போட்டிகளில் 15 வயதுக்குட்ட ஆண்கள் பிரிவில் அகில இலங்கை ரீதியாக கல்முனை மல் ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இவ்விழாவில் ஆகக்கூடுதலான புள்ளிகளை மேல் மாகாணம் பெற்றுக்கொண்டது. பாடசாலை அடிப்படையில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மெனிக்ஹின்ன ஏ.ரத்னாயக்க மகா வித்தியாலயம் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றது. இவ்விரு பிரிவுகளிலும் ஒரே பாடசாலை சாம்பியனாகியமை இதுவே முதல் தடவையாகும்.



அகில இலங்கைப் பாடசாலை விளையாட்டு விழாவில் பங்குபற்றிய திருகோணமலைப் போட்டியாளர்களின் ஒருபகுதியினரைப் படத்தில் காணலாம். பின்வரிசையில் பதக்கம் வென்ற ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் நம்மசிறி ரங்கா, அப்பாடசாலை ஆசிரியர்கள் ஏ.பஸீர் அமீர், சி. சசிகுமார், சென். ஜோஸப் கல்லூரியைச் சேர்ந்த ரி. ரஜன், ஆசிரியர் ச. தயாபரன் ஆகியோர் காணப் படுகின்றனர்.

டியகோ மரடோனா:

# சீனியர் ஓய்வு ஜூனியர் அறிமுகம்

உலகப் புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரரான டியகோ மரடோனாவின் புதல்வரையே அருகிலுள்ள படத்தில் காண்கிறீர்கள். சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார் டியகோ மரடோனா.

இதேவேளையில் அவரது மகன் ஜூனியர் மரடோனா சர்வதேசப் போட்டிகளில் காலடி வைத்துள்ளார்.

17வயதுகுட்பட்ட தேசிய அணியில் இடம்பெற்றுள்ளார் அவர். ஆனால் ஆர்ஜன்டீனா அணியில் அல்ல. இத்தாலிய அணியிலேயே ஜூனியர் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரணம் கொஞ்சம் சோகமானது.

மரடோனா இத்தாலியின் நேப்பிள்ஸ் அணியில் விளையாடிய காலத்தில் இத்தாலியைச் சேர்ந்த கிறிஸ்டினா சினகோரா என்பவருடன் தொடர்பு வைத்திருந்தார். இதன்மூலம் பிறந்தவர்தான் ஜூனியர் மரடோனா.




1986இல் நேப்பிள்ஸ் அணி முதற் தடவையாக இத்தாலிய லீக் போட்டிகளில் சாம்பியனாகியது. அப்போது அவ்வணிக்குத் தலைமை தாங்கியவர் மரடோனா. அவ்வாண்டிலேயே கிறிஸ்டினா தனது மகனைப் பெற்றார். எனினும் கிறிஸ்டினாவின் மகனுக்கு தாமே தந்தை என்பதை மரடோனா ஏற்றுக் கொள்ளவில்லை.

இதுதொடர்பாக 1991இல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கொன்றில் மரடோனா தோல்வியுற்றார். இதனால் கிறிஸ்டினாவுக்கு மரடோனா ஜீவனாம்ச உதவிப் பணம் வழங்க நேர்ந்தது.

இப்பணத்தைக் கொண்டு தனது மகனை வளர்த்தார் கிறிஸ்டினா.

இம்மாதம் தனது 15ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார் ஜூனியர் மரடோனா. ஆனால் இதுவரை அவர் தனது தந்தையை சந்தித்ததேயில்லையாம்.

மரடோனாவைப் போலவே தோற்றம் கொண்ட ஜூனியர் தமது தந்தையின் கால்பந்தாட்டத் திறமையிலும் ஒரு பங்கைக் கொண்டுள்ளார். கடந்த சில வருடங்களாக நேப்பிள்ஸ் அணியின் இளைஞர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவர் பயிற்சி பெற்றுவந்தார்.

1986இல் உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத்தில் மரடோனா தலைமையிலான ஆர்ஜன்டீனா அணி சாம்பியனாகியது. 1984 முதல் 1991 வரை அவர் இத்தாலியின் நேப்பிள்ஸ் அணி சார்பாகவும் விளையாடினார்.

கொக்கேயின் போதைப்பொருளைப் பாவித்த குற்றச்சாட்டின் பேரில் நேப்பிள்ஸ் அணி இரு

தடவை மரடோனாவுக்கு 15 மாதம் தடை விதித்தது. அதனால் 1991இல் அவர் இத்தாலியை விட்டு வெளியேறினார். அதன்பின் மறுபடியும் 1998ஆம் ஆண்டிலேயே மரடோனா இத்தாலி நாட்டிற்குச் சென்றார்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## மூன்றாவது நடுவருக்குத் தடை!

முதல் தரக் கிரிக்கெட் போட்டிகளில் பிடிகள் தொடர்பான ஆட்டமிழப்புகளுக்கு மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக் கோருவதை அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை செய்துள்ளது.

டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பிடிகள் தொடர்பாக மூன்றாவது நடுவர் தீர்ப்பளிப்பதை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடைப்பிடிக்கிறது.

வீடியோ ஒளிப்பதிவுகள் சந்தேகத்திற்கிடமாக இருந்தால் கள நடுவர்களே தீர்ப்பளிக்க வேண்டும். இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதனால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை இக்கோரிக்கைக்கு இணங்கியுள்ளது.

சர்வதேசப் போட்டிகளிலும் பிடிகளுக்கு மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக் கோருவதைத் தடைசெய்ய அவுஸ்திரேலியா முயற்சித்தது. எனினும் சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்த யோசனையை நிராகரித்து விட்டது.

எனினும் உள்ளூர் போட்டிகளில் தனது திட்டத்தை நிறைவேற்ற ஆஸி. கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

"கடந்த வருடம் நடைபெற்ற முதல் தரப் போட்டிகளின் ஒளிப்பதிவை ஆராய்ந்த பின்னரே நாம் இம்முடிவுக்கு வந்துள்ளோம்.

அப்போட்டிகளில் பிடிகள் தொடர்பாக மூன்றாவது நடுவரிடம் முறைப்பாடுசெய்யப்பட்ட ஒவ்வொரு தடவையும் 'ஆட்டமிழக்கவில்லை' என்றே தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிடிகள் ஒழுங்கான முறையில் பதிவு செய்யப்படாமையே இதற்குக் காரணமாகும்." இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## விளையாட்டு அரங்குகள் அர்ஜுனவின் பொறுப்பில்

சுகததாஸ விளையாட்டரங்குப் பரிபாலன சபையின் தலைவராக முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பரிபாலன சபையில் 12 பேர் அங்கம் வகிக்கின்றனர். சுகததாஸ விளையாட்டரங்கத் தொகுதி, ஆர். பிரேமதாஸ கிரிக்கெட் மைதானம், தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட்




அர்ஜுன

மைதானம் உட்பட பல விளையாட்டு அரங்குகள் இச்சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன.

நீண்டகாலம் இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவராக விளங்கிய அர்ஜுன விளையாட்டுத்துறை நிர்வாகப் பதவியொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சரான மங்கள சமரவீர அர்ஜுனவை இப்பதவியில் நியமித்துள்ளார்.

இதுவரை டிகிரி மாரம்பை இப்பதவியில் இருந்தார். இவர் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரான லக்ஷ்மன் கிரியெல்லவினால் நியமனம் செய்யப்பட்டவர்.

புதிய விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சராக மங்கள சமரவீர பதவியேற்றவுடன் அவர் டிகிரி மாரம்பை தலைமையிலான குழுவினரை இராஜினாமாச் செய்யக் கோரினார்.

இதனால் செப்டெம்பர் 21ஆம் திகதி டிகிரி மாரம்ப இராஜினாமாச் செய்தார். அதையடுத்து அர்ஜுன ரணதுங்க இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## முன்னணி மெய்வல்லுநர்கள் தேசிய குழாமிலிருந்து நீக்கம்?

இலங்கையின் முன்னணி மெய்வல்லுநர் போட்டியாளர்கள் நால்வர் தேசிய மெய்வல்லுநர் குழாமிலிருந்து நீக்கப்படுவர் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க, சுகத் திலகரத்ன, சிறியானி குலவன்ஸ, நிம்மி டி சொய்ஸா ஆகியோரே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மெய்வல்லுநர் வீரர்கள் வீராங்கனைகளுக்கான புதிய ஒழுக்கக் கோவையொன்றை இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்விதிகளுக்கு இசைவாக நடப்பதாக கையொப்பமிடுமாறு வீரர்கள், வீராங்கனைகள் கோரப்பட்டுள்ளனர்.

எனினும் மேற்குறிப்பிட்ட நால்வரும் இதில் கையொப்பமிட மறுத்துவிட்டனர். இதன்காரணமாகவே அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

"வீரர்கள் வீராங்கனைகளுக்கு ஒழுக்கம் முக்கியமானது. அதனாலேயே இவ்விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேற்குறிப்பிட்ட நால்வரைத் தவிர ஏனையோர் அனைவரும் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

கையொப்பமிடத் தவறியோருக்கு ஒரு மாதகாலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இதில் கையொப்பமிடவில்லையென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். முதற்கட்டமாக தேசிய மெய்வல்லுநர் குழாமிலிருந்து அவர்கள் நீக்கப்படுவர்." இவ்வாறு இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் தலைவர் சுனில் குணவர்தன கூறியுள்ளார்.

குறித்த நான்கு மெய்வல்லுநர்களும் சுனில் குணவர்தன தலைமையிலான நிர்வாகத்தின் மீது அடிக்கடி குற்றச்சாட்டுகளை சுமத்தி வருபவர்களாவர். அவர் மெய்வல்லுநர் சம்மேளனத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென இவர்கள் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் மனுவொன்றையும் சமர்ப்பித்திருந்தனர்.

தமயந்தி தர்ஷா, ரொஹான் பிரதீப் குமார, ரங்க விமலவன்ஸ, சுமேத அருணசாந்த முதலான பல மெய்வல்லுநர்களின் பயிற்றுநர் சுனில் குணவர்தன ஆவார்.



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ரகர் சுற்றுப்போட்டியில் கல்கிஸை சென். தோமஸ் கல்லூரி சாம்பியனானது. 34 பாடசாலைகள் இத் தொடரில் பங்குபற்றின. கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு வெஸ்லி கல்லூரியும் சென். தோமஸ் கல்லூரியும் மோதின.

இப்போட்டியின் பிரதம அதிதியான அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வீரர்கள் அறிமுகம் செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தில் சென். தோமஸ் அணித்தலைவர் நாமல் ராஜபக்ஷவுடன் அமைச்சர் கைகுலுக்குவதைக் காணலாம். நாமல் ராஜபக்ஷ அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

சாம்பியன் கிண்ணத்தையும் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவே சென். தோமஸ் அணித்தலைவர் நாமல் ராஜபக்ஷவிடம் வழங்கினார்.

- அருள்

# ஆசிரியையின் சம்பளத்தில் மாட்டிக்கொண்ட அதிபர்

## மிஸ்டர் க்றோவுக்கு வந்த அவசர அழைப்பு

அலுவலகத்தில் காலடி வைத்த நேரம் தொடக்கம் மிஸ்டர்க்றோவுக்கு தொலைபேசி அழைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தவண்ணம் இருந்தன.

ஓர் அழைப்பு வித்தியாசமானதாக இருந்தது.

மறு முனையிலிருந்து பேசியவர் ஒரு பெண்.

''ஹலோ மிஸ்டர் க்றோவுடன் பேச வேண்டும்.''

''மிஸ்டர் க்றோதான் பேசுகிறேன். யாரம்மா நீங்கள்? என்ன சமாச்சாரம்?'' மிஸ்டர் க்றோ கேட்டார்.


''நான் விஜயேஸ்வரி. ஓர் ஆசிரியை. டயகமவிலிருந்து பேசுகிறேன்.''

அவருடைய குரல் தளதளத்தது. சோகம் அதில் கவிந்திருந்தது.

மிஸ்டர் க்றோவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே! அப்படியானால் மிஸ்டர் க்றோ பற்றிச் சொல்லவா வேண்டும்?

''சரி தைரியமாகச் சொல்லுங்கம்மா. என்ன நடந்தது? மிஸ்டர் க்றோ என்ன செய்யவேண்டும்?''

''மிஸ்டர் க்றோ உதவ வேண்டும். இரண்டு குழந்தைகளின் தாய் நான். மூன்று மாதங்களாகச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்படுகிறோம்.!''



மாகாணக் கல்வித் திணைக்களம் அனுப்பிய இடமாற்ற உத்தரவு

மிஸ்டர் க்றோவுக்கு இதைக் கேட்டதும் சங்கடமாகிவிட்டது.

''சரி உங்கள் பிரச்சினை என்ன? அதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்.''

''கடிதம் ஒன்று எழுதி வைத்திருக்கிறேன்.''

''விஷயத்தை வாயால் சொல்ல முடியவில்லை என்றால் கடிதத்தை அனுப்ப வேண்டியது தானே! அதை உடனே ''பாக்ஸ்'' செய்து விடுங்களேன்.''

மிஸ்டர் க்றோ இப்படிச் சொன்னதும் அந்த அம்மாள் அமுசடக்கமாக விம்மியது காதில் விழுந்தது. விம்மலோடே அவர் சொன்னார்.

''மூன்று மாதங்களாக உணவுக்கே கஷ்டப்படுகிறோம். கடிதத்தை 'பாக்ஸ்' பண்ண எங்களிடம் ஏது பணம்? வீட்டில் தொலை பேசியோ, 'பாக்ஸ்' வசதியோ இல்லை.

கொம்யுனிகேஷனில் இருந்து தான் பேசுகிறேன். அதிகம் பேசிக்கொண்டிருந்தால் கட்டணம் ஏறிவிடும். செலுத்தவழியில்லாமல் திண்டாட வேண்டியிருக்கும். மிஸ்டர் க்றோ இந்த அபலை மீது கருணை கூர்ந்து தாங்கள் இங்கே வந்து போக வேண்டும்.'' இப்படி மன்றாடினார்.

இதற்கு, மேல் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க மிஸ்டர் க்றோவுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. ''சரி வருகிறேன். தொலை பேசியை வையுங்கள்'' என்று உரையாடலை முடித்துக் கொண்டார்.

ஆசிரியரின் அனுமதியைப் பெற்று சிறிது நேரத்தில் டயகமவுக்குச் சிறகடித்தார் மிஸ்டர் க்றோ.

மிஸ்டர்க்றோவின் வருகைக்காக ஆசிரியை விஜயேஸ்வரி காத்துக்கொண்டிருந்தார். மிஸ்டர் க்றோவைக் கண்டதும் அவருக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. தன்னுடைய கஷ்ட காலம் நீங்கப் போகிறது என்ற நம்பிக்கையில் போலும் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி ரேகை படர்ந்து இருந்தது.

''ஒரு நிமிஷம்'' என்று சொல்லிவிட்டு வீட்டின் உள்ளே சென்றார்.

திரும்பி வந்தவர், ''இதோ நான் சொன்ன கடிதம்'' என்று ஒரு கடிதத்தை நீட்டினார்.

சுடர் ஒளி ஆசிரியர் என்று விலாசமிடப் பட்ட கடிதம் அது.

அதில் உள்ள வாசகங்கள் இதோ:—

''ஐயா, சண்முகம் விஜயேஸ்வரி ஆகிய நான் நுவரெலியா, கல்வித் திணைக்கள அனுமதியுடன் நு/லோவர் கிரன்லி தமிழ் வித்தியாலயத்திலிருந்து 06.07.2001 முதல் நு/டயகம மேற்கு இல. 02 த. வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று வந்தேன்.



வி. இராதாகிருஷ்ணன்

''இதற்காக லோவர் கிரன்லி த.வி. அதிபர் தி. செ. நடராஜா ஜூலை மாதம் முதல் இன்று வரை மூன்று மாத காலமாக சம்பளத்தைத் தராமல் இருக்கிறார். நுவரெலியா கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்தும் இதுவரை உரிய நடவடிக்கை மேற் கொண்டதாகத் தெரியவில்லை. இரண்டு குழந்தைகளுக்குத் தாயான நான் உணவிற்கே மிகவும் கஷ்டப்படுகிறேன்.

''இவ்விடயத்தைத் தங்கள் பத்திரிகையில் வெளிக் கொணர்வதினூடாகவாவது எனக்கு உரிய தீர்வு கிட்டும் என நினைக்கிறேன்.

''இவ்வாறு தான் முன்பும் நிரஞ்சலி, விஜயலெட்சுமி எனும் ஆசிரியைகள் இடமாற்றம் பெற்றதனால் அவர்களுக்குச் சம்பள விடயத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தினார் அதிபர். அவ்வாசிரியைகளும் 'தப்பினோம், பிழைத்தோம்' என்று சென்று விட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''எனது இடமாற்றக் கடிதப் பிரதியையும் மத்திய மாகாணக்கல்வி அமைச்சருக்கு இடமாற்றம் கோரி எனது நிலையை எடுத்தியம்பிய கடிதத்தின் பிரதியையும் கல்வித் திணைக்களத்தின் இடமாற்ற உத்தரவு கடிதத்தின் பிரதியையும் இத்துடன் இணைத்துள்ளேன். தேவையாயின் பார்த்துக் கொள்ளவும்.''

நன்றி உண்மையுள்ள ச. விஜயேஸ்வரி.

கடிதத்தைப் படித்ததும் மிஸ்டர் க்றோவுக்கு பெரு மூச்சு வந்தது. ''மூன்று மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. இப்போது காற்று மட்டும்தான் சும்மா கிடைக்கிறது. தண்ணீருக்குக் கூடப் பல இடங்களிலும் காசு. அப்படியிருக்க சம்பளம் கிடைக்கவில்லையானால் எப்படி வயிற்றை நிரப்புவது?

சரி, கவலைப்படாதீர்கள் அம்மா. முடிந்ததைச் செய் கிறேன்.''

இப்படிக் கூறிவிட்டு மறு பேச்சில்லாமல் ஓர் வைராக் கியத்துடன் திடீரென்று சிறகடித்தார் மிஸ்டர் க்றோ.

கண்டியில் மத்திய மாகாணக் கல்வி அமைச்சர். வி. இராகிருஷ்ணனின் அலுவலகப் பகுதிக்கு மேலே வட்டமிட்டு விட்டு இறங்கினார் மிஸ்டர் க்றோ. நேரே அலுவலகத்துக்குச் சென்றார். ''அமைச்சரைப் பார்க்க வேண்டும். மிஸ்டர் க்றோ வந்திருப்பதாகச் சொல்லுங்கள்'' என்று அலுவலகச் சேவகரிடம் மிஸ்டர் க்றோ சொன்னார்.

''அமைச்சர் பிஸியாக இருக்கிறார்'' என்று வழக்கம் போலச் சேவகர் செப்பினார். ''பரவாயில்லை அமைச்சரிடம் சொல்லும்'' என்றார் மிஸ்டர் க்றோ. சேவகர் கேட்கவில்லை. மிஸ்டர் க்றோ பொறுமையை இழந்தார். அமைச்சரின் அறைக் கதவைத் தள்ளக்கொண்டு உள்ளே சென்றார்.

சேவகர் சொன்னமாதிரி இல்லை. அமைச்சர் தனியாக இருந்து ஏதோ ஒரு பைலைப் படித்துக் கொண்டு இருந்தார்.

மிஸ்டர் க்றோவைக் கண்டதும் ''வாருங்கள். வாருங்கள். ஏது திடீரென்று இந்தப் பக்கம். விஷயம் இல்லாமல் வரமாட்டீர்களே'' என்று அமைச்சர் அடுக்கிக் கொண்டுபோனார்.

மிஸ்டர் க்றோ சம்பிரதாயச் சொற் பிரயோகங்களையெல்லாம் விட்டு விட்டு ''என்ன அக்கிரமம் இது?'' என்று தனது உள்ளக்குமுறலைக் கக்கினார்.

அமைச்சர் இராதாகிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை. விவரமாகத்தான் சொல்லுங்களேன் என்று பரபரப்புடன் கேட்டார்.


மிஸ்டர் க்றோ வாய்திறக்கவில்லை. ஆசிரியை விஜயேஸ்வரி தன்னிடம் தந்த கடிதத்தை அமைச்சரிடம் நீட்டினார்.

கடிதத்தைப் பார்த்த அமைச்சர் ''ஆ.. இந்த விஷயமா? நேற்றுத்தான் இது என் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதற்கிடையில் நீங்கள் வந்து விட்டீர்கள்.''

''இப்படி நடக்கலாமா? அதுவும் உங்கள் நிர்வாகத்தில்!'' இப்படி ஒரு போடு போட்டார் மிஸ்டர் க்றோ.

''அரசாங்க அலுவலகங்கள் பலவற்றில் எதையும் உடனுக்குடன் ஒழுங்காகச் செய்கிறார்கள் இல்லை. அதுதான் ''றெட்ரேப்'' சிவப்பு நாடா என்கிறார்களே. அதை என்னுடைய பொறுப்பில் உள்ள அலுவலகங்களில் முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருக் கிறேன். இந்த அம் மாளுடைய மூன்று மாதச் சம்பளமும் உடனடியாகக் கிடைக்கவழி செய்கிறேன். இதுவரை சம்பளம் வழங்கப் படா தற்குப் பொறுப் பாக இருந்தவர்கள் மீது விசா ரணை நடத்தி தக்க தண்டனை வழங்க உத்தரவு விடுகிறேன்'' என்றார் அமைச்சர் இராதா கிருஷ் ணன்.

சொன்னதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. மிஸ்டர் க்றோவின் முன்னிலையிலேயே பொறுப்பான அதிகாரி ஒருவரை வரவழைத்து நுவரெலியா பிராந்தியக் கல்வி அலுவலகத்துக்கு பாக்ஸில் தனது உத்தரவை உடனே அனுப்புமாறு பணித்தார்.



சுடர்ஒளிக்கு விஜயேஸ்வரியின் கடிதம்

மிஸ்டர் க்றோவின் பக்கம் திரும்பி ''சூடாக இருக்கிறீர்கள். கூல் டிரிங்கா அல்லது டீயா? ஏதாவது சாப்பிடுங்கள்.'' என்று கேட்டார் அமைச்சர் இராதாகிருஷ்ணன்.

''மிகவும் நன்றி, அடுத்தமுறை வரும் போது சாப்பிடுவோம். நான் அவசரமாகப் போகவேண்டும். விடைதாருங்கள்.'' இப்படிக் கேட்டவாறே அமைச்சரின் பதிலுக்குக் காத்திருக்காமல் சிறகை விரித்தார் மிஸ்டர் க்றோ.

நேரே நுவரெலியா பிராந்தியக் கல்வி அலுவலத்தின் முன் இறங்கினார் மிஸ்டர் க்றோ. அங்கே நிதி நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஸ்டான்லியைச் சந்தித்தார்.

என்ன ஆச்சரியம்! அமைச்சர் இராதா கிருஷ்ணனின் உத்தரவு அதற்கிடையில் அந்த அதிகாரிக்குக் கிடைத்து விட்டது.

''அமைச்சரின் உத்தரவு கிடைக்கும் வரை வலயக் 'கல்விக் காரியாலயம் இந்த ஆசிரியையின் சம்பளம் மூன்று மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றி மூச்சுக் காட்டவில்லை. இது பெரிய அநியாயம் தான்'' என்றார் ஸ்டான்லி.

அவர் தொடர்ந்து பின்வருமாறு கூறினார்.

''இடமாற்றம் பெற்றுச் சென்று விட்ட ஓர் ஆசிரியையின் சம்பளம் பழைய பாடசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தால் அந்த (பழைய) பாடசாலை அதிபர் உடனடியாக விஷயத்தைச் சுட்டிக்காட்டி சம்பளப் பணத்தைக் கல்வி அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். அதிபர் மூன்று மாதங்களாகச் சம்பளப் பணத்தைத் திருப்பி அனுப்பாமல் இருந்தால் அது ஒரு மோசடிக் குற்றம் என்றே கருதப்படும்.

''அதே வேளை இடமாற்றம் பெற்று சென்ற ஆசிரியை புதிய பாடசாலையில் பதவியேற்றதற்கான (புதிய பாடசாலை) அதிபரின் கடிதம்—

''அதோடு முன்பு கடமையாற்றிய பாடசாலையில் இவர் பொறுப்பில் ஏதாவது பொருட்கள் இருந்திருந்தால் அவற்றைப் பழைய அதிபரிடம் ஒப்படைத்து விட்டார் என்று கூறும் அதிபரின் சான்றிதழ் என்பன வலயக் கல்விக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

''இவ்வளவு நடைமுறைகளின் பின்னும் குறிப்பிட்ட ஆசிரியையின், சம்பளம் வழங்கப் படவில்லை என்றால் அது நிச்சயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அக்கறையற்ற செயல்தான். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அதிபருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்'' இப்படி நிதி நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான ஸ்டேன்லி குறிப்பிட்டார்.

இதைக் கேட்டதும் மிஸ்டர் க்றோவின் சூடு தணிந்து விட்டது. ஸ்டான்லியின் கடமை உணர்வைப் பாராட்டினார். நன்றியும் தெரிவித்தார். கஷ்டப்படும் ஒரு பெண் மணிக்கு உதவி செய்யக் கிடைத்த மகிழ்ச்சியோடு கொழும்புக்குச் சிறகடித்தார்.


SHALWAR PARADISE
வண்ண வண்ண டிசைன்களில் வனப்பான சல்வார்கள்
இந்தியாவிலிருந்து மிக அண்மையில் இறக்குமதி செய்யப் பட்ட சகல வைபவங்களுக்கும் ஏற்ற கொட்டன் மற்றும் புஷ் அப் சல்வார்களுக்கு உடனே நாடுங்கள்


SHALWAR PARADISE
73C, Manning Place, Wellawatta.
Tel: 072-410154

ஜெனரேட்டர்கள்
GENERATOR
குறைந்த தொகையே கையிருப்பில் உள்ளதால் முந்திக் கொள்ளுங்கள்!
புத்தம் புதிய
HONDA

* 0.65kva தொடக்கம் 5 kva வரை
* பெற்றோல், டீசல்
* வீடுகள், கடைகளுக்குப் பொருத்தமானது
மறுசீரமைக்கப்பட்ட DANYO
25kva 45kva 60kva JAPAN
ஹோட்டல், தொழிற்சாலைகள், மண்டபங்களுக்குப் பொருத்தமானது.
OVERSEAS QUALITOOLS (PVT) LTD.
354, Sri Sangaraja Mawatha, Colombo - 10.
Tel: 441213, 422606 Fax: 348050

SHALWAR PARADISE
வண்ண வண்ண டிசைன்களில் வனப்பான சல்வார்கள்
இந்தியாவிலிருந்து மிக அண்மையில் இறக்குமதி செய்யப் பட்ட சகல வைபவங்களுக்கும் ஏற்ற கொட்டன் மற்றும் புஷ் அப் சல்வார்களுக்கு உடனே நாடுங்கள்.


SHALWAR PARADISE
73C, Manning Place, Wellawatta.
Tel: 072-410154


இப்பத்திரிகை கொழும்பு—06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஒக்டோபர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.